விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 25 செவ்வாய்க்கிழமை (08.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 080

## அதிவேகமாக பயணித்த மோ.சைக்கிள் வேலித்தூணுடன் மோதுண்டு விபத்து
### சம்பவ இடத்திலேயே இளைஞர்கள் இருவர் பலி



23ஆம் பக்கம் பார்க்க

## அரசியலமைப்பு கருத்தறியும் குழு சம்பந்தனுடன் நாளை சந்திப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்களின் கருத்தறிய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட குழு நாளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் சிறப்பு சந்திப்பொன்றை நடத்தவுள்ளது.

புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்களின் கருத்தறிய உருவாக்கப்பட்ட குழுவின் தலைவரும் சட்டதரணியுமான லால் விஜயநாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

## 'இன்னும் சில நாட்களே எம்மால் உயிர்வாழ முடியும்'
### 15ஆவது நாளில் கைதிகள் உருக்கம்

(கொழும்பு)

புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டு மயக்கமடைந்த நிலையில் இருந்த 4 கைதிகளுக்கு நேற்றையதினம் சிறைச்சாலை வைத்தியசாலை வைத்தியர்களின் கட்டாயத்தின் அடிப்படையில் மருத்துவ உதவி அளிக்கப்பட்டுள்ளது.

புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள 14 அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 23 ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து

23ஆம் பக்கம் பார்க்க

## மகளிர் தினத்தில் ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)


சமூக தலைமைத்துவ அந்தஸ்துக்களை பெண்கள் பெற்றுக் கொள்வதற்கு தடையாகவுள்ள சட்ட மற்றும் சமூக தடைகளை அகற்றி அவர்களுக்கான அபிவிருத்தியடைந்த கல்வி மற்றும் தொழிற்றிறன்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இன்று மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப் படுகையில் அதையொட்டி ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

# நல்லாட்சி அரசை கவிழ்க்க வேண்டும்
## பெங்கமுவே நாலக தேரர் அறைகூவல்

(கொழும்பு)



தேவையற்ற விதத்தில் புதிய அரசியலமைப்பை வரைவதாக கூறி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்ற நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும் என தெரிவித்துள்ள பெங்கமுவே நாலகதேரர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நாடகமாடி மக்களை ஏமாற்றுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க




## வழமைபோல் இன்று பாடசாலை இயங்கும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் இன்றைய தினம் வழமைபோல் இயங்கும் என வட மாகாண கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க

## அனைத்து அரசியல் கைதிகளையும் அரசே உடனடியாக விடுதலை செய்!
### யாழில் நேற்று உண்ணாவிரதம்




05ஆம் பக்கம் பார்க்க


## விட்டுப்போகாத மகிந்த பக்தி

(கொழும்பு)

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 15 மாதங்களாகின்ற நிலையில், கொழும்பில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் வரவேற்புரை நிகழ்த்திய விவசாய அமைச்சின் செயலாளர்,

24ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் படையினருக்கு சிறப்புப் பயிற்சிகள் ஆரம்பம்



24ஆம் பக்கம் பார்க்க

### வலி வடக்கு சேந்தான்குளம் பகுதியில்
## இராணுவ தேவைக்காக மீண்டும் காணி சுவீகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு சேந்தான் குளம் பகுதியில் உள்ள தேவாலயத்திற்கு சொந்தமான காணியினை இராணுவம் தனது தேவைக்காக சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கமைய இன்றைய தினம் குறித்த காணியை அளவீடு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

இந்த நிலையில்,

இந்த காணி அளவீடு செய்யும் பணிகளை தடுத்து நிறுத்துவதற்கு

24ஆம் பக்கம் பார்க்க

## வாக்குமூலம் அளிக்க ஜெனரல் ஜெகத் மறுப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சாட்சியமளிக்க முன்னாள் இராணுவத் தளபதியும், பிரேசிலுக்கான இலங்கை தூதுவருமான ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய மறுப்புத் தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி
• பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
• எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
• இலவசம் : படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
• யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்
ஆரம்பம் விரைவில் : உடன் அழைத்துப் பதியவும்
021 222 8093 6, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## அனைத்து நாடுகளும் இலங்கைக்கு ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது எதிர்ப்பை வெளியிட்ட நாடுகளும் இன்று இலங்கைக்கு ஆதரவாக செயற்படுகின்றன எனறு அமைசசர் மகிந்த சமரசிங்க ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

இவரே மகிந்தவின் ஆட்சியின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் இலங்கையின் பிரதிநிதியாக பங்கேற்றவர் ஆவார்.

இந்தநிலையில் ஜனவரி 8ஆம் திகதிக்கு பின்னர் இலங்கையுடன் சர்வதேசத்தின் உறவுகள் விருத்தியடைந்துள்ளன என்று அமைச்சர் சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா உட்பட்ட நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு முழுமையாக கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை முன்னர் இலங்கைக்கு சீனா வழங்கிய உதவியை மறக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இந்தியாவுடன் சிறந்த உறவை அரசாங்கம் பேணி வருவதாகவும் சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## கொழும்பு சுதந்திர சதுக்கத்தின் பாதுகாப்பு அதிகாரி பணி நீக்கம்



(கொழும்பு)

கொழும்பில் சுதந்திர சதுக்கத்தில் இளம் ஆண் ஒருவரையும் பெண் ஒருவரையும் அங்கிருந்த காவலர்கள் பலவந்தமாக வெளியேற்றிய சம்பவத்தைத் தொடர்ந்து, அங்கு பாதுகாப்புக்கு பொறுப்பான மூத்த பாதுகாவல் அதிகாரியை அரசாங்கம் பணியிலிருந்து நீக்கியுள்ளது.

சுதந்திர சதுக்கத்துக்கு பிள்ளைகளுடன் சேர்ந்து வராத ஜோடிகளை வெளியேற்றுவது தங்களின் கடமை என்று கூறி, வாக்குவாதத்தில் ஈடுபட்ட அந்த காவல் பணியாளர்களை வீடியோ படம்பிடித்த ஜோடி ஒன்று அதனை சமூக வலைத்தளங்களில் பரவவிட்டிருந்தது.

ஆணும் பெண்ணும் சேர்ந்திருக்க முடியாது என்ற காவலர்களின் கருத்தைக் கண்டித்து, சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திங்களன்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும் என்று காவலர்கள் கூறியதை கண்டித்திருந்த உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினரும் துணை வெளியுறவு அமைச்சருமான ஹர்ஷ டி சில்வா, ஒழுக்கம் என்பதற்கு அவர்கள் அர்த்தம் கற்பிக்கும் விதம் தவறு என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து, சுதந்திர சதுக்கத்துக்கு பாதுகாப்பு சேவையை வழங்கியிருந்த அரசுக்கு சொந்தமான பாதுகாப்பு நிறுவனத்தின் இயக்குநரை கலாசார அமைச்சு பணிநீக்கம் செய்துள்ளது.

அந்த நிறுவனத்துடனான ஒப்பந்தத்தையும் அரசாங்கம் ரத்து செய்துள்ளது. (செ-11)

## எச்.ஐ.வி. வதந்தி

## எந்தவொரு பாடசாலையிலும் மாணவனுக்கு அனுமதி

(கொழும்பு)

குளியாப்பிட்டியில் எச்.ஐ.வி நோய்த் தொற்று வதந்தி காரணமாக பாடசாலை அனுமதி மறுக்கப்பட்ட மாணவருக்கு நாட்டின் எந்தவொரு பாடசாலையிலும் அனுமதி பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.


கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்திற்கு இந்த உத்தரவினை பிரதமர் பிறப்பித்துள்ளார்.

நிபந்தனையின்றி நாட்டின் எந்தவொரு பாடசாலைக்கும் செல்ல அனுமதியளிக்குமாறு பிரதமர் அறிவித்துள்ளார்.

மாணவரின் தாய் விண்ணப்பம் செய்யும் எந்தவொரு பாடசாலையிலும் அந்த மாணவருக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

அதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சர் எடுக்க வேண்டும் என பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.


மாணவரின் தந்தை "எயிட்ஸ் நோயினால் உயிரிழந்தார் என்ற அச்சம் காரணமாக குறித்த மாணவரை பாடசாலையில் அனுமதிக்க



வேண்டாம் என பாடசாலையொன்றில் பெற்றோர் போராட்டம் நடத்தியதனால், மாணவருக்கு அந்தப் பாடசாலையில் அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

எவ்வாறெனினும், மாண வருக்கு எச்.ஐ.வி தொற்று கிடையாது என்பது மருத்துவ பரிசோதனைகளின் மூலம் உறுதியாகியுள்ளது. (செ-11)

## அரச புலனாய்வுப் பிரிவுகளை மீள இயக்குமாறு பிரதமர் உத்தரவு



(கொழும்பு)

அரச புலனாய்வுப் பிரிவுகளை மீளவும் செயற்படுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இயங்கி வந்த அரச புலனாய்வுப் பிரிவு அலகுகள் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ரத்து செய்யப்பட்டிருந்தது.

எனினும் இதன்போது மீளவும் அரச புலனாய்வுப் பிரிவு அலகுகளை அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் ஆரம்பிக்குமாறு பிரதமர் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பிரிவு ரத்து செய்யப்பட்டதனால் பாதாள உலகக்குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க பிரதமருக்கு அறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் அரச புலனாய்வுப் பிரிவினை செயற்படுத்துமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதேசத்தில் இடம்பெறும் கொலைகள் கொள்ளைகள் போன்ற குற்றச் செயல்களுக்கான பொறுப்பினை அந்தந்த பிரதேச உயர் பொலிஸ் அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென பிரதமர் தெரிவித்துள்ளார். (செ-11)

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் அரசியலமைப்புக்குழு கருத்தறியும்

(கொழும்பு)

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்தறிவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் நாளை 09 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

மாவட்ட ரீதியான கருத்தறியும் நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ள நிலையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கருத்தறியும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடர்ந்தும் தனி நபர்கள் மற்றும் அமைப்புக்களிடமும் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் கருத்துக்களை கேட்டறிவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அரசியலமைப்புத் திருத்தக் குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க கூறினார். (செ-11)

**CERTIFICATE IN PHARMACY COURSE**
**+**
**PHARMACIST (EXTERNAL) EXAM COURSE**

மேற்படி பயிற்சிநெறிக்குரிய புதிய வகுப்புகள் 09.03.2016-ம் திகதியும் 12.03.2016-ம் திகதியும் யாழ்ப்பாணக்கல்லூரி (வெளிவாரிப் பட்டப்படிப்பு) கொமர்சல் வங்கிக்கு அருகாமையில் 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் காலை 08.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

**தொடர்பு : 0776256292**

(3814)

## அரசியல் கைதிகளின் விடுதலையில்

## அரசாங்கத்தின் மீதான நம்பிக்கைகள் பொய்த்துக் கொண்டுள்ளன - ஐங்கரநேசன்

(யாழ்ப்பாணம்)

சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுவித்து காணாமல் போனவர்கள் மற்றும் சரணடைந்தவர்கள் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் பதிலைக் கூறுமென்று நாங்கள் எதிர்பார்த்த போதும் இன்றைய நிலையில் இந்த அரசாங்கத்தின் மீதான நம்பிக்கைகள் பொய்த்து கொண்டு இருப்பதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

சிறையிலிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கைதிகள் மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக அவர்களது உறவினர்கள் இங்கு ஆரம்பித்திருக்கின்ற போராட்டத்திற்கு நாங்களும் ஆதரவைத் தெரிவித்துக் கொண்டு இப் போராட்டத்தில் கலந்து கொணடிருக்கின்றோம்.

தமிழ் மக்களுடைய தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளில் குறைந்த பட்சம் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் அல்லது நாங்கள் உயிருடன் ஒப்படைத்தவர்களுக்கான பதில் தானும் இந்த அரசு சொல்லுமென்றுதான் நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஆனால் இந்த அரசாங்கத்திடமிருந்தும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட மாட்டார்கள் என்ற வகையிலேயே தற்போது பதில்கள் வருகின்றன. தற்போது



சிறைகளில் கைதிகளாக இருக்கின்றவர்கள் தங்களது தனிப்பட்ட தேவைகளுக்காக சிறைகளிற்குச் செல்லவில்லை.

அனைவரும் ஏதோவோர் வகையில் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒத்துழைத்தவர்களாகவே இருக்கின்றார்கள்.

போராளிகள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இதன் பிறகும் ஒத்துழைத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்களை தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பதென்பது நியாயமாகாது.

இவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். ஒப்படைக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பாக இந்த அரசாங்கம் பதிலைச் சொல்ல வேண்டும்.

இந்த அரசாங்கமும் இது தொடர்பாக மௌனம் காக்கின்றது. அது மட்டும் அல்லாது யுத்தத்தில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ஷ தரப்பினர்களையும் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில்தான் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சிறையில் இருக்கக் கூடிய கைதிகள் ஆரோக்கியமாக இருக்கின்றார்கள் என்று பல்வேறு கருத்துக்கள் வெளியில் பரப்பப்படுகின்றன.

உண்மையில் அவர்களைக் கொச்சைப்படுத்துகின்ற செயலாகவே இதைப் பார்க்கின்றோம்.

எனவே இவ்வாறான போலியான கருத்துக்களை பரப்புகின்றவர்கள யாராகஇருப்பினும் அவர்கள் அதனை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் எங்கள் கையில் இருக்கக் கூடிய ஒரேயொரு ஆயுதம்தான் அகிம்சை ரீதியான இந்த உண்ணாவிரதப் போராட்டம். இதனை புரிந்து கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும். குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலையில் இந்த அரசாங்கம் எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அவர மேலும் தெரிவித்தார். (செ-4)

## தாய்லாந்து பிரதிப் பிரதமர் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

தாய்லாந்தின் பிரதிப் பிரதமர் தலைமையிலான அதிகாரபூர்வ குழுவொன்று, பொருளாதார உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் இன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இன்று தொடக்கம், வரும் சனிக்கிழமை வரை இலங்கையில் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்தக் குழுவுக்கு தாய்லாந்தின் பிரதிப் பிரதமர் சோம்கிட் ஜதுசிறீபிடக் தலைமை தாங்குகிறார் என்று தாய்லாந்தின் வெளியுறவுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.


இந்தப் பயணத்தின் போது, இரண்டு நாடுகளினதும், பொருளாதார விவகார அமைச்சர்களுக்கிடையில் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளதாகவும், இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்தப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளதாகவும், அந்த தகவல் கூறப்பட்டுள்ளது. (செ-11)


# பலாலி படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் இலங்கைக்கான அரபு நாட்டு தூதுவர்கள் யாழ்.முஸ்லிம் பிரதிநிதிகளுடன் திடீர் சந்திப்பு

பலாலி பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் இலங்கைக்கான அரபு நாடுகளின் தூதுவர்கள் நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்திருந்தனர். யாழ்.மாவட்டத்துக்கு நேற்றையதினம்விஜயம்மேற்கொண்டிருந்த இவர்கள் யாழ். நகரில் அமைந்துள்ள பசார் பள்ளிவாசலில் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் ஆரம்ப காலத்தில் இருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் விபரம், தற்போது மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களின் விபரம் மற்றும் அவர்களின் வாழ்வாதார நிலைமை தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக கொழும்பில் அமைந்துள்ள அரபுநாடுகளின் தூதுவராலயங்களில் அறிவிக்க முடியும் என்றும் முஸ்லிம் சமூகத்தினின் பிரச்சினைகளை தம்மிடம் தெரிவிக்குமாறும் நேற்றைய தினம் வருகை தந்த தூதுவர்கள் இங்குள்ள முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர்.





இந்த விசேட கலந்துரையாடலில் இலங்கைக்கான பாலஸ்தீனநாட்டுதூதுவர்மொகமட் எஸ்.ஏ.எச். ஜமிலா, இலங்கைக்கான சவுதி அரேபிய நாட்டின் தூதுவர் ஏ.எச். ஏ்கே. ஏ. அல்முல்லா, இலங்கைக்கான குவைட் நாட்டின் தூதுவர் கலாப் எம்.எம்.பு.டஹய்ர், இலங்கைக்கான ஓமான் நாட்டின் தூதுவர் அல். ஸ்யாசு மாலிக் அல் சிக்னி, இலங்கைக்கான எகிப்து நாட்டின் தூதுவர்எம்.எச்.மொகமட் அஸ்ரம் ஆகியோரும் யாழ். , கிளிநொச்சிமுஸ்லிம் சம்மேளனத் தலைவர்எ.எச்.ஜமால்முகைதீன் மற்றும் முன்னாள் மாந கர சபை உறுப்பினர் பி.சரபுல் அனாம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வருகை தந்திருந்த தூதுவர்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற வணக்கஸ்தலங்கள், சுற்றுலாத்துறை மையங்கள் மற்றும் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களின் இருப்பிடங்களை பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (இ-9)

## இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு 300பேர் இணைப்பு

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு 300 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை துரிதப்படுத்தும் நோக்கில் இவ்வாறு புதிதாக 300 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.100பேரை இணைத்துக் கொள்வதற்கு முன்னதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் 100 பேருக்கு நேர்முகத்தேர்வு நடத்தி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், ஆணைக்குழுவின் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு 100 உத்தியோகத்தர்களின் சேவை போதுமானதல்ல எனவும் இதனால் மேலும் 200 பேரை சேவையில் இணைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் விக்ரமசிங்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)

## கட்டாரிலிருந்து ஹெரோயின் கடத்திய பாக். பிரஜை கைது

கட்டாரிலிருந்து ஹெரோயின் போதைப்பொருளுடன் நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்ற பாகிஸ்தான் பிரஜை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர், போதைப் பொருள் மாத்திரைகளை விழுங்கிய நிலையில் கடத்தி வருவதாக கிடைத்த தகவலுக்கு அமைய, விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் ஊடாக கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர், நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அவரது வயிற்றிலிருந்து 52 போதை வில்லைகள் வெளியில் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வில்லைகளில் சுமார் 400 கிராம் ஹெரோயின் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 28 வயதான நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

## அம்புலன்ஸ் வண்டியை செலுத்திய பல்கலைக்கழக மாணவன் கைது

பந்தயம் ஒன்றின் அடிப்படையில் அம்புலன்ஸ் வண்டியை செலுத்திய சட்டத்துறை மாணவன் குருந்துவத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம், நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவமானது, கொழும்பு ஆனந்தா-நாலந்தா கிரிக்கெட் தொடரின் நன்கொடை சேகரிப்பு குழு செயற்பாட்டின் போதே இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், அம்புலன்ஸ் வண்டியை சட்டவிரோதமாக செலுத்த முயற்சித்த சட்டபீட மாணவன் அம்புலன்ஸ் சாரதி வாகனத்தில் இல்லாத நிலையிலேயே வாகனத்தை செலுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவனை விசாரணை செய்தபோது பந்தயம் ஒன்றிற்காகவே இவ்வாறு வாகனத்தை செலுத்தினேன் என மாணவன் கூறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குருந்துவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## ஈரானில் ஊழல் வழக்கில் சிக்கிய கோடீஸ்வரருக்கு மரண தண்டனை

ஈரானைச் சேர்ந்தவர் பாபக் சஞ்சானி(வயது-41). எண்ணெய் ஏற்றுமதியாளரான இவர் கோடீஸ்வரர் ஆவார். இவர் முன்னாள் ஜனாதிபதி முகமது அகமதின் ஜாத் ஆட்சிக் காலத்தில் எண்ணெய் ஏற்றுமதியில் வங்கிக்கணக்கில் மோசடி செய்தார்.



இதன் மூலம் 20 ஆயிரம் கோடி ரூபா வரை ஊழல் செய்தார். எனவே, இவர் மீது மோசடி மற்றும் பொருளா தார குற்றப்பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் இவர் உட்பட 3 பேருக்கு நீதிமன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதை எதிர்த்து அவர் மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார்.

அங்கு அவரது மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. மேலும் 2 பேருக்கான தண்டனை விபரம் அறிவிக்கப்படவில்லை. (இ-5)

## சிறைச்சாலை பேருந்துகளுக்கு கறுப்புக்கண்ணாடி பொருத்தப்படும்

சிறைச்சாலை பேருந்துகள் அனைத்துக்கும் கறுப்புக் கண்ணாடி பொருத்தப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜெனரல் நிஷாந்த தனசிங்க தெரிவித்துள்ளார். இவ்வாறான பேருந்துகள், முக்கியமான சந்தேக நபர்களை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம், தெமட்டக்கொடை பகுதியில் வைத்து சிறைச்சாலை பேருந்து மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதனாலேயே இந்த திடீர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ)

## முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தர் கஞ்சா கடத்தியதற்காக கைதானார்

தெற்கில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு கஞ்சாவை கடத்திச் சென்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 16 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தர் லுணுகம்வெஹர முதல் காத்தான்குடி வரை கஞ்சா போதைப் பொருளை விநியோகித்து வருபவர் என தெரிய வந்துள்ளது. இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

## அமைச்சர் சம்பிக்கமீது பொய்க் குற்றச்சாட்டு


பாராளுமன்ற வீதியில் அண்மையில் இடம்பெற்ற விபத்து தொடர்பில், அமைச்சர் சம்பிக்க ரணவக்கவை இலக்கு வைத்து பொய்யான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாக, ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஹெலஉறுமயவுடன்முரண்பட்டுள்ள சில குழுக்கள். விபத்துக்கு பின்னர் ஒன்றிணைந்து அமைச்சருக்கு எதிராக இவ்வாறு குற்றம் சாட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-5)




## இருபது-20 உலகக்கிண்ண போட்டியை டூடுளால் கொண்டாடும் கூகுள்




பதினாறு அணிகள் பங்கேற்கும் 6-வது 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகும் நிலையில், இணையத்தின் பிரபல தேடுப் பொறியாக (சேர்ச் என்ஜின்) விளங்கும் கூகுள், இந்தப் போட்டியை வரவேற்கும் வகையில் சிறப்பு முகப்புப் பக்கத்தை உருவாக்கியுள்ளது.

வட்டங்கள், முக்கோணங்கள், சதுரங்கள் மற்றும் செவ்வகங்களால் ஆன விளையாட்டு மைதானத்தின் பின்னணியில் இரு அணியைச் சேர்ந்த வீரர்கள் கிரிக்கெட் விளையாடுவதைப் போல காட்சியளிக்கும் இந்த 'டூடுள்' தோற்றத்தில் மிக எளிமையாக காணப்பட்டாலும், இருபது-20 உலக கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர்பாக கிரிக்கெட் ரசிகர்களிடம் உள்ள ஆர்வத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த டூடுளை கிளிக் செய்தால் இருபது-20 உலக கிண்ண கிரிகெட் போட்டி தொடர்பான அதிகாரபூர்வ இணையதளத்துக்குள் செல்லும் வகையில் இணைப்பும் தரப்பட்டுள்ளது. (க)




# 6ஆவது ஐ.சி.சி. உலகக்கிண்ண போட்டிகள் இன்று இந்தியாவில் கோலாகல ஆரம்பம்



கிரிக்கெட் ரசிகர்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்த 6ஆவது ஐ.சி.சி. இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இன்று இந்தியாவில் கோலாகலமாக ஆரம்பமாகின்றன.

16 அணிகள் பங்கேற்கும் மேற்படி போட்டித் தொடரானது இன்று முதல் ஏப்ரல் 3 ஆம் திகதிவரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது.

முதல் சுற்று, சுப்பர் 10 சுற்று என்று இரண்டு வகையாக போட்டிகள் நடைபெறுகிறது.

முதல் சுற்றில் 8 அணிகள் களம இறங்குகின்றன. 'ஏ' பிரிவில் பங்களாதேஷ்நெதர்லாந்து, அயர்லாநது, ஓமான் அணிகளும், 'பி' பிரிவில் ஸ்கொட்லாந்து, சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான், ஹொங் கொங் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இதில் ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்றைய அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். இவ் முதல் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதலிடத்தை பிடிக்கும் அணிகள் சுப்பர் 10 சுற்றுக்கு (பிரதான சுற்று) முன்னேறும்.

15ஆம் திகதி தொடங்கும் சுப்பர்-10 சுற்றில்தான் பிரதான அணிகள் அடியெடுத்து வைக்கின்றன. இதில் அணிகள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு மோத இருக்கின்றன. அதில் இருந்து 4 அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெறும்.

சுப்பர் 10 சுற்றில் ஒரு பிரிவில் இந்திய அணியுடன் நியூசிலாந்து, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் 'ஏ' பிரிவில் முதலிடம் பெறும் அணி அங்கம் வகிக்கும். மற்றொரு பிரிவில் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் 'பி' பிரிவில் முதலிடம் பிடிக்கும் அணியும் இடம்பெறுகிறது.

இன்று நடக்கும் தொடக்க ஆட்டங்களில் ஹொங்கொங்-சிம்பாப்வே (பிற்பகல் 3 மணி), ஆப்கானிஸ்தான்-ஸ்கொட்லாந்து (இரவு 7.30 மணி) அணிகள் நாக்பூரில் மோதுகின்றன. (க)

## இருபது-20 உலகக்கிண்ணத் தொடர் தலைவர் பதவியிலிருந்து விலகினார் மலிங்க



இருபது-20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடருக்கான இலங்கை அணியின் தலைமைப் பதவியிலிருந்து லசித் மலிங்க விலகியுள்ளார்.

அவருக்கு பதிலாக உப அணித் தலைவரும் சகலதுறை வீரருமான அஞ்சலோ மத்யூஸ் தலைவராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ணத் தொடரில் விளையாடிய மலிங்க காயத்தால் பாதிக்கப்பட்டு அவதியுற்று வந்தார். மேலும், இலங்கை அணி இந்தத் தொடரில் மோசமாக தோல்வியடைந்து லீக் சுற்றிலேயே வெளியேறியது.

தலைமைப் பதவியில் இருந்து விலகுவது தொடர்பாக மலிங்க நேற்று முன்தினம் இரவு இலங்கை கிரிக்கெட் சபைக்கு கடிதம் எழுதியுள்ளதாக கிரிக்கெட் சபையின் துணைத் தலைவர் மோகன் டி சில்வா தெரிவித்துள்ளார். (க)


## ரொனால்டோவின் அபாரமான ஆட்டத்தால் செல்டா விகோவை ஊதித்தள்ளியது மட்ரிட்

லிகா கால்பந்து போட்டியில் செல்டா விகோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் கிறிஸ்டியானா ரொனால்டோவின் கால்கள் செய்த வித்தையால் ரியல் மட்ரிட் அணி 7:1 என்ற கோல் கணக் கில் அபாரமாக வென்றது.

லா லிகா கால்பந்து தொடரில் ரியல் மட்ரிட் அணிக்கும் செல்டா விகோ அணிக்கும் இடையிலான ஆட்டம் கடந்த 5ஆம் திகதி நடந்தது.

இந்த ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் கிறிஸ்டியானா ரொனால்டோ அடுத்தடுத்து 4 கோல்களை அடித்தார்.

அவரது ஆவேசமான ஆட்டத்தால் இப் போட்டியில் ரியல் மட்ரிட் அணி 7:1 என்ற கோல்கணக்கில் வென்றது.




இந்த வெற்றியைத் தொடரந்து புள்ளிகள் பட்டியலில் ரியல் மட்ரிட் அணி 3 ஆவது இடத்தில் நீடிக்கிறது.

இதன்மூலம் லா லிகா தொடரில் அவர் அடித்துள்ள கோல்களின் எண்ணிக்கை 252 ஆக உயர்ந்துள்ளது.

இதைத் தொடர்ந்து இந்த தொடரில் அதிக கோல்களை அடித்துள்ள இரண்டாவது வீரர் ஏன்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

305 கோல்களை அடித்துள்ள மெஸி இந்த பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறார். (க)

# அனைத்து அரசியல் கைதிகளையும் அரசே உடனடியாக விடுதலை செய்!

## யாழில் நேற்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

**சிறைச்சாலையில் 14ஆவது நாளாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமது பிள்ளைகளை காப்பாற்றுமாறு கோரி அரசியல் கைதிகளது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் நேற்றைய தினம் அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். காலை 7 மணிக்கு யாழ்.முனியப்பர் ஆலய முன்றிலில் ஆரம்பமாகிய குறித்த போராட்டம் மாலை 4 மணி வரை நடைபெற்றிருந்தது.**






புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள 14 அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 23ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நேற்றைய தினம் 14ஆவது நாளாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். கைதிகளது இந்த போராட்டத்தில் 14 கைதிகளின் உடல்நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்த நிலையில், மருத்துவ உதவியை பெற்று வந்தனர்.

ஆனால் இனிவரும் நாட்களில் மருத்துவ உதவியை பெறமாட்டோம் என சிறைச்சாலை ஆணையாளரிடம் நேற்று முன்தினம் கடிதம் ஒன்றினை கைதிகள் கையளித்துள்ளனர். வைத்தியர்கள் நேற்றையதினம் சிறையினுள் சென்று கைதிகளுக்கு சிகிச்சை அளிக்க முற்பட்டபோதும் இவர்கள் மருத்துவ உதவியை பெற மறுத்துள்ளனர். தண்ணீரை மட்டுமே அருந்தி வரும் இவர்களின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும்தமதுவிடுதலையை வலியுறுத்தி நான்கு தடவைகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த போதிலும், ஒவ்வொரு முறையும் அரசாங்கம் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி கைதிகளது உண்ணாவிரத போராட்டத்தை நிறுத்திய பின்னர் வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தாமல் ஏமாற்றும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வந்தது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்திலேயே கைதிகள் தமது விடுதலைய்ய வலியுறுத்தி ஆபத்தான நிலையிலும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையிலேயே தமிழ் அரசியல்கைதிகளின்உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் நேறறு திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவ்ரை யாழ். முனியப்பர் ஆலய முன்றிலில் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றுள்ளது. இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ. பரஞ்சோதி உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள், மைத்திரியே, ரணிலே நல்






(படங்கள்: உ.சாளின்)

லாட்சி வேடமிட்டு உலகை ஏமாற்றாதீர். எமது உறவுகளை சிறையில் சாகடிக்காதீர், நல்லாட்சி என வேடமிட்டு கொண்டிருப்போரே! கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி எமது பிள்ளைகளை விடுதலை செய், ஐ.நாவில் ஒப்புக்கொண்டது போல் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

மன்னார் பிரஜைகள் குழு மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டம் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதற்கு நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், அனைவரினையும் ஆதரவு வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. (இ-4)



## இமெயிலை கண்டுபிடித்த தகவல் தொழில்நுட்ப புரட்சியாளர் ரேமண்ட் டாம்லின்சன் காலமானார்

(வோஷிங்டன்)

புறாவின் இறக்கையில் கட்டி கடிதம் அனுப்பியது, குதிரை வீரன் மூலம் தூது அனுப்பியது, பின்நாளில், இரவு-பகல் பாராமல் ஓயாது ஓடிய அரசுப் பணியாளர்கள் மூலம் தகவல் பரிமாறியது, பின்னர் தந்தி மற்றும் தபால் சேவையின் மூலம் அஞ்சல் அனுப்பியது உட்பட அத்தனை பழங்கால வழக்கத்துககும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் 'இமெயில்' எனப்படும் மின்னஞ்சல் முறையை கண்டுபிடித்த ரேமண்ட்



டாம் லின்சன், தனது 74-வது வயதில் காலமானார்.

அமெரிக்காவில் பிறந்து மசாசூசெட்ஸ் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம்பெற்ற டாம்லின்சன், அர்பாநெட் சிஸ்டம் (ARPANET system) முறையில் நெட்வேர்க் இணைப்பால் ஒன்றிணைக்கப்பட்டுள்ள ஒரு கணனியில் இருந்து இன்னொரு கணனிக்கு கடிதங்களை அனுப்பும் முறையை 1971 ஆம் ஆண்டு முதன்முதலாக கண்டுபிடித்தார்.

பின்னர் @ குறியீட்டுடன் தூரத்தில் உள்ள இதர கணனிகளுக்கு அந்த தகவல்கள் போய்சேரும் புதிய தொழில்நுட்பத்தையும் வடிவமைத்தார்.

இமெயில் என் றழைக்கப்படும் இந்த செலவில்லாத துரிதமான கடிதப் போக்குவரத்தின் தந்தையாக விளங்கிய ரே டாம்லின்சன் தனது 74 ஆம் வயதில் கடந்த சனிக்கிழமை காலமானார்.

அயராத உழைப்பு மற்றும் தன்னடக்கத்தின் அடையாளமாக விளங்கிய அவரது மறைவுக்கு உலகின் பல நாடுகளில் இருந்து கோடிக்கணக்கான இணையத் தள வாசிகள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (இ-5)

# ஓயாத அலைகள் தாக்குதல் சம்பவ சந்தேக நபருக்கு வியாழன் தீர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆனையிறவு இராணுவ முகாம் மீது ஓயாத அலைகள் என்ற பெயரில் நடத்திய தாக்குதல் சம்பவம் தொடர்பில், விடுதலைப்புலிகள் புலனாய்வு பிரிவு சந்தேக நபருக்கு எதிரான வழக்கில் நாளை மறுதினம் வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஓயாத அலை கள் 3 நடவடிக்கையின் மூலம், ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கிய குற்றச்சாட்டில் விடுதலைப்புலிகளின் புலனாய்வு பிரிவின் உறுப்பினர் என சந்தேகிக் கப்பட்டவருக்கு எதிராக யாழ் மேல் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கில் விசாரணைகள் யாவும் முடிவடைந்து சட்டத்தரணிகளின் தொகுப்புரையும் முடிவுற்ற நிலையில், யாழ்.மேல் நீதிமன்றத்தினால் தீர்ப்புக்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இந்த வழக்கில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். மேல் நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. (இ-9)

# புன்னாலைக்கட்டுவன் சந்திக்கருகில் வேகக்கட்டுப்பாட்டையிழந்த லொறி கடைக்குள் புகுந்தது





(கோப்பாய்)

பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் லொறி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து சந்திக்கு அருகில் இருந்த கடை ஒன்றுக்குள் புகுந்துள்ளது.

மேற்படி விபத்துச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

புத்தூர் வீதி வழியாக வந்த லொறி நேற்றுக்காலை 7.45 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் சந்தியால் பலாலி வீதி வயாவிளான் செல்லும் வீதிக்கு திரும்பிய வேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்து சந்திக்கு அரு கில் இருந்த வெல்டிங் கடைக்குள் புகுந்துள்ளது.

குறித்த விபத்தில் வெல்டிங் கடை பாரிய சேதத்துக்குள்ளாகிய போதும் தெய்வாதீனமாக யாருக்கும் உயிர் சேதமோ காயங்களோ ஏற்படவில்லை.

சேதத்திற்கு உள்ளான வெல்டிங் கடை ஒரு வீட்டுடன் சேர்ந்து இயங்குவதனால் அவ் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளும் நொருங்கியுள்ளன.

அத்துடன் மோதித் தள்ளிய லொறியின் முன்பக்கமும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

லொறி மோதிய வெல்டிங் கடையில் வாசலில் சிறுவன் ஒருவன் நின்றிருந்த போதும் லொறி வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோத வந்தவேளை அவ்விடத்தை விட்டு ஓடியதால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டதாகவும் விபத்தினை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

குறித்த விபத்து தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (இ-60-87)

# 'மனைக்கு விளக்கு ஆயினள்' நினைவுகூரும் அறிமுகவிழா

"மனைக்கு விளக்கு ஆயினள்" நினைவு கூரும் அறிமுக விழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.15 மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி சாந்தி நடராஜனும் சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் கலைக்கோயில் இயக்குநர் நாட்டிய வாரிதி திருமதி லீலாம்பிகை செல்வராஜா, கொக்குவில் கலாபவனம் இயக்குநர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசன், உடுவில் நாட்டிய கலாகேந்திரா இயக்குநர் கலாநிதி திருமதி கிருஷாந்தி ரவீந்திரா, உரும்பிராய் கலைக்கோயில் இயக்குநர் கலாபூஷணம் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் தொடக்கவுரையை ஓய்வு நிலைப் பேராசிரியர் முனைவர் சண்முகதாஸும் வெளியீட்டுரையை நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கமும் ஆற்றவுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறையினரின் அரங்கேறிய தமிழ்வேதம் ஆடல் அரங்கமும் இடம்பெறவுள்ளது. (இ)

# சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தின நிகழ்வு சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபையின் சிரேஷ்ட முன்பள்ளி ஆசிரியர் செல்வி. லீலாவதி மாரிமுத்து, வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் ரதின் காந்தரேசன், சமாதான நீதவான் திருமதி. சிவசுப்பிரமணியம் புனிதமலர், சட்டத்தரணி செல்வி. சாருண்ஜா சிவநேசன், நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் திருமதி கோமதி ரவிதாஸ், வலி.மேற்கு பிரதேச செயலக உளவளத்துணை உதவியாளர் திருமதி. கீர்த்திகா சரவணன் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி. நிரூபா காசிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது ஆசியுரையினை சித்தன்கேணி சிவன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சபாவாசுதேவக்குருக்கள் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் என்பன இடம்பெறுவதுடன் பயன் தரு மரக்கன்றுகளும் வழங்கப்படவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (இ-5-17)





# திரைப்படம் இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுதர்சன் கனகராஜாவின் இயக்கத்தில் உருவான செந்தணல் திரைப்படம் (Preview) இன்று மாலை 4.30 மணிக்கு ராஜா திரையரங்கில் வெளியிடப்படவுள்ளது.

மேற்படி திரைப்படம் AAA மூவிஸ் தயாரிப்பில் ஈழத்தில் படமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# திடீர் தீ விபத்து



துன்னாலை கலிகைச் சந்திக்கு அண்மையில் உள்ள கடை கட்டட தொகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.கடை கட்டடத் தொகுதியில் ஏற்பட்ட இந்த தீ விபத்து துன்னை மண் இளைஞர்களின் முயற்சியினால் அணைக்கப்பட்டது. (இ)

# 26 வருடங்களுக்கு பின்னர் வயாவிளான் ஆலயங்களில் வழிபாடு

## மக்களுடன் அங்கஜன் எம்.பி.பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்தில் 26 வருடங்களாக மக்கள் பாவனைக்கு இடமளிக்காமல் இருந்த வயாவிளான் பிரதேசத்தையும் அங்குள்ள ஆலயங்களையும் மக்களுடன் சென்று பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் காலை அப்பகுதிக்கு சென்ற அங்கஜன் வயாவிளானில் உள்ள மானம்பிராய் பிள்ளையார் ஆலயம் (ஏழுதலக் கோயில்) மற்றும் வன்னியர் கோவில் ஆகியவற்றை மக்கள் தரிசிக்கவும் பொங்கல் செய்து தத்தம் குல தெய்வத்தினை மனமார தரிசிக்கவும் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

இதன் போது நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அத்துடன் கலந்து கொண்ட மக்களில் பலரும் கண்களில் கண்ணீர் மல்க தமது குலதெய்வத்தினை மனதார வழிபட்டதுடன் ஆலயத்திற்கு அண்மையில் இருக்கும் தம் காணிகளுக்குச் சென்று இடிந்த வீடுகளை பார்வையிட்டனர்.

இதன்போது அங்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், நானும் இடம் பெயர்ந்தவன் தான்.எனக்கு உங்களின் வலி நன்றாகப் புரிகிறது. மீள எம் நிலத்தில் குடியேறி வாழ வேண்டும் என்பதில் நான் ஒரு அரசியல்வாதியாக செயற்படவில்லை. உங்களில் ஒருவனாகவே செயற்படுகிறேன்.

இந்த ஆலயங்கள் வெகு விரைவில் நிரந்தரமாய் மக்களின் பாவனைக்கு விடப்படும். விரைவில் ஆலயத்தை சுற்றி உள்ள பகுதிகளில் மக்கள் மீள் குடி அமர்த்தப்படுவர். இதேபோன்று ஏனைய பகுதிகளும் படிப்படியாக விடுவிக்கப்படும். அதற்காக நான் கடுமையாக அழுத்தம் கொடுப்பேன்.கடைசி வரை உங்களுடன் உங்களில் ஒருவனாய் பாதிக்கப்பட்ட இந்த மண்ணின் சொந்தக்காரனாய் போராடுவேன் என உறுதியளித்தார். (இ-4)

# நவீன தென்னைச் செய்கை நூல் வெளியீட்டு விழா ஞாயிறன்று

தென்னைப்பயிர்ச் செய்கை சபை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் எழுதிய நவீனதென்னைச் செய்கை நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்.தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்னைப் பயிர்ச்செய்கை சபை வடக்கு பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன், தென்னை பயிர்ச்செய்கை சபைத் தலைவர் கபிலகண்டவல ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக தென்னைப் பயிர்ச்செய்கை சபை பொதுமுகாமையாளர் கே.டீ. எல். தர்மசிறி, விவசாயத் திணைக்கள வடக்கு மாகாணப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கே.சிறிபாலசுந்தரம், கிளிநொச்சி கமநல சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஈ.தயாரூபன்,கிளி. விவசாயத் திணைக்கள விதைகள் உதவிப் பணிப்பாளர் எஸ். சதீஸ்வரன், கிளி.பிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர் ஏ.செல்வராசா, கிளி. பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய மேலதிகப் பணிப்பாளர் எஸ்.ஜே.அரசகேசரி, கிளி. கால்நடை உற்பத்தி சுகாதார ரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ்.கௌரி திலகன், யாழ். கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ.நிஸாந்தன், யாழ்.கமநல காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் டீ.கிரிதரன், பனை அபிவிருத்திச்சபை பொது முகாமையாளர் பீ.லோகநாதன், ஓய்வுநிலைப் பிரதி விவசாயப் பணிப்பாளர் ம.ஜெகநாதன், வலம்புரி பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் கலாநிதி. சு.மோகனதாஸ், ஓய்வு நிலைப் பிராந்திய முகாமையாளர் சி.சிவச்சந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-254)

# ஈராக்கில் வெடிகுண்டு நிரப்பிய லொறியைக் கொண்டு தாக்குதல்

## 51 பேர் சம்பவ இடத்தில் பலி!

(பக்தாத்)

**ஈராக்கில் வெடிகுண்டு நிரப்பப்பட்ட டேங்கர் லொறியைக் கொண்டு நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை நிகழ்த்தப் பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 20 இரா ணுவ வீரர்கள் உட்பட 51 பேர் சம்பவ இடத் தில் பலியாகியுள்ளனர்.**

தலைநகர் பாக்தாதுக்கு தெற்கே உள்ள ஹில்லா நகர எல்லையில் அமைந்துள்ள சோதனைச் சாவடி யில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுத் தாக்கு தல் நிகழ்த்தப்பட்டது.

சோதனைச் சாவடியைக் குறி வைத்து, சரக்கு லொறி மூலம் தாக்குதல் நிகழ்த்தப்பட்ட தாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். இது குறி த்து அவர்கள் மேலும் கூறியதா வது,

போக்குவரத்து நெரிசல் மிகுந்த காலை வேளையில், சோதனைச் சாவடியைக் கட ந்து செல்ல முயன்ற சரக்கு லொறியை வீரர்கள் தடுத்து நிறுத்தினர். சோதனைக்காக அதனை ஓரமாக நிறுத்து மாறு வீரர்கள் உத்தர விட்ட னர். அப்போது அந்த லொறி யில் பொருத்தப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடி த்தது.

இதில் 20 வீரர்கள் உட் பட 51 பேர் கொல்லப்பட்ட னர். மேலும் 72 பேர் காய மடைந்தனர். காயமடை ந்த 11 பேரின் நிலை கவலைக்கி டமாக உள்ளது. இந்த தாக்கு தலில் பலியான பெரும்பாலா னோர் காரில் வந்த பொதுமக் கள். இவர்கள் சோதனைச் சாவடி வரிசையில் காத்திரு ந்த போது பரிதாபமாக உயி ரிழந்தனர்.

இந்தத்தாக்குதலுக்கு ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு பொறு ப்பே ற்றுள்ளது.

ஈராக்கில் கணிசமான பகுதி யைத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் வைத்துள்ள இஸ்லாமிய தேச பயங்கர வாதிகள், அந்நாட்டில் பல இடங்களில் வெடிகுண்டுத் தாக்கு தல்களை நிகழ்த்தி வருகின்ற னர்.

எனினும் ஹில்லா பகுதி அரசுக் கட்டுப்பாட்டில் இருப்ப தாகக் கூறப்படுகிறது. (இ-5)


**மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**
**பிரதான வீதி, மானிப்பாய். பதிவு இலக்கமும் திகதியும்: J/1605 21.03.1972**

# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:-கணக்காளர்

குறியீட்டு இலக்கம்:-104/10

சம்பள அளவுத்திட்டம்:- 15305-18905 / 170X10-190X10

(13/2015 இன்படி)

வெற்றிட எண்ணிக்கை:- 01

தகைமைகள்:- கூட்டுறவுப் பணியாளர் 11 வது சம்பள திட்ட கணக்குப் பதிவியலாளர்/ கணக்கு/ கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12வது சம்பளத்திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையில் அங் கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

**க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04ஆண்டுகால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திர சித்தி/கூட்டுறவுத்திணைக்களத்தால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02ஆண்டுகால அனுபவம்.**

**ஏனைய விபரங்கள்**

**01.விண்ணப்பங்கள் சங்க தலைமைக்காரியாலயத்தில் பெற்று "தலைவர், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், பிரதான வீதி மானிப்பாய்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.**

**02.வயதெல்லை 18-45 வயது வரை (தற்போது கூட்டுறவுச்சேவையில் உள்ளவர்க ளுக்கு உச்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது)**

**03.தற்போது கூட்டுறவுச் சேவையில் இருப்பவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக் கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல், விண்ணப் பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.**

04.நியமனத்துக்கென தெரிவு செய்யப்படும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்க பிணையை செலுத்த வேண்டும்.

05.விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 23.03.2016

**தலைவர்**
**மானிப்பாய், ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**பிரதான வீதி, மானிப்பாய்.**

(சி-3922)



# ஏழாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

பிறப்பு 1993 05 31



இறப்பு 2009 03 08

## குமாரசாமி சங்கீர்த்தனன்

ஆண்டு ஏழு ஆன பின்னும் உன் அழகு வதனம் நினைவில் வரும்
அழுத விழி நீரும் இன்றுவரை வற்றாது பெருக்கெடுக்கும் ஐயா...!

கூவி வந்த ஏவுகணை உன் உடலை கூறாக்கி சென்றுவிட எங்கள்
கூட்டுக் குயிலின் பிரிவதனால் குலைத்து விட்ட குதூகலங்கள்

மீண்டும் வருவாய் என்ற எண்ணம்- நாம் மாண்டு போகும் வரையிருக்கும்
ஈன்ற தாயுடனே இன்மொழிபேச மீண்டும் வருவாயா சங்கீர்த்தனா?

(2 ஆம் வட்டாரம் கோம்பாவில், புதுக்குடியிருப்பு)

பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி,
உறவினர்கள்.

(3800)


# இராசி பலன்

08.03.2016
(மாசி 25, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 10.22 மணிவரை
சதயம் நள்ளிரவு 12.02 மணிவரை
சுபநேரம் 10.54-12.24 மணிவரை
இராகுகாலம் 3.24-4.54 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**கிரகநிலை**
சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி, புத கேது, சந் | | | |
| சுக | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிட லாம், முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பய ணங்களால் தேக நலன் பாதிக்கப்படலாம்.

**மேடம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டு வீர்கள், குடும்பத்தில் கலகல ப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** அரசு வழிச் சலுகைகள் எதிர் பார்த்தபடியே வந்து சேரும், வீட்டை அழகுபடுத்தும் எண் ணம் உருவாகும், தொலை பேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தொழிலில் ஏற்பட்ட குழப்பங் கள் அகலும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப் பாக பார்ப்பர், மனித தெய்வ வழிபாடு மகத்துவம் தரும், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள் வீர்கள், சுப செலவுகள் ஏற் படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல் வது நல்லது, வழிபாட்டால் மகத் துவம் காணவேண்டிய நாள்.

**மகரம்:** நண்பர்களின்மூலம் சுப தக வல்கள் வந்து சேரலாம், காணாமற்போன பொருளொ ன்று மீண்டும் கிடைக்கலாம், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** சொந்த பந்தங்களின் ஒத்து ழைப்பால் உள்ளம் மகிழ் வீர்கள், தொலைபேசித் தக வல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புதிய நபர் களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள் வர், பொருளாதார நிலை உயரும், முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறியுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேற லாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் கைகூடும், உடல் நலம் சீராகி உற்சாகம் பிறக்கும், எதிரிகள் உதிரி யாகும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

# ராணுவ கட்டுப்பாட்டின் கீழுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் மாகாண கல்வி அமைச்சின் கீழ் பணியாற்ற வேண்டும்

## சிறிதரன் எம்.பி.வலியுறுத்து

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் விடுவிக்கப்பட்டு அவர்கள் மாகாண கல்வி அமைச்சின் கீழ் பணியாற்ற வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுவது நாட்டில் எங்கும் இல்லாதவாறு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மட்டும் காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக நான் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தேன். இதனைத்தொடர்ந்து ஜனாதிபதியினால்வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கு கடிதம் ஒன்றுஅனுப்பப்பட்டுள்ளது.

அதாவது உடனடியாக அவர்களை விடுவித்து அவர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ்கொண்டுவரப்படுவதுடன் அவர்களுக்கான கொடுப்பனவும் மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள பல முன்பள்ளிகளில் ஆசிரியர்களுக்கான நடைமுறைகள் மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கு இராணுவச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களது விளையாட்டுப் போட்டிகளில் இராணுவ கொடி ஏற்றப்படுகின்றது. முன்பள்ளி நிகழ்வுகளில் இராணுவ பிரசன்னம் காணப்படுகின்றது.

எனவே இது தொடர்பில் நாங்கள் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

ஜனாதிபதி இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவைப் பெற்றுத்தருவார் என எதிர்பார்க்கின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# கிளிநொச்சியில் 4 குளங்களின் கீழ் ஆயிரத்து 540 ஏக்கரில் நெற்செய்கை

## சிறுபோக நெற்செய்கை கூட்டம் விரைவில்

கிளிநொச்சியிலுள்ள குளங்களில், 4 குளங்களின் கீழ் ஆயிரத்து540ஏக்கர்நிலப்பரபபில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஜி.செந்தூரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் கருத்து தெரிவித்துள்ளதாவது, பூநகரி, குடமுருட்டிக்குளத்தின் கீழ் 330 ஏக்கரிலும் கரியாலை, நாகபடுவான் குளத்தின் கீழ் 500 ஏக்கரிலும் பிரமந்தனாறு குளத்தின் கீழ் 450 ஏக்கரிலும் கனகாம்பிகைக்குளத்தின் 260 ஏக்கரிலும் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தக் குளங்களின் கீழ் நெற்செய்கை மேற்கொள்வதற்கான சிறுபோக குழுக்கூட்டம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்று, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனை விட பிரமந்தனாறிலும், கனகாம்பிகைக்குளத்திலும் முழுமையாக மேட்டு நிலத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கை இடம்பெறவுள்ளது. அக்கராயன்குளம், வன்னேரிக்குளம், கல்மடுக்குளம் ஆகிய குளங்களுக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் விரைவில் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார். (2)




# முள்ளியவளையில் இளைஞர்கள் அட்டகாசம் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அசமந்தம்

## பொதுமக்கள் விசனம்

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்தில் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு சென்று வகுப்புக்களை முடித்துவிட்டு கல்வி நிலையத்தை விட்டு வெளியே வந்த மாணவிகளிடம் சேஷ்டை செய்ய முனைந்த இளைஞர் குழுவொன்றில் இருந்த இருவர் பெற்றோர்கள் மற்றும் கல்வி நிர்வாகி ஆகியோரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணிக்கு இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பிரதேசத்திலுள்ள கல்வி நிலையம் ஒன்றிற்கு சென்ற மாணவிகளிடம் தமது தொலைபேசி இலக்கத்தை எழுதி கொடுத்துவிட்டு தம்முடன் கதைக்க வேண்டும் எனவும் அவ்வாறு இல்லாதுவிடின் மருந்துப் போத்தலைக் காட்டி மிரட்டியுள்ளனர்.

இதனைஅவதானித்தகல்வி நிலைய நிர்வாகி, பொது மக்கள் ஆகியோர் குறித்த இரு இளைஞர்களையும் மடக்கிப் பிடித்து முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களை பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற பொலிஸார் முறைப்பாட்டை பதிவு செய்துவிட்டு இணக்க சபைக்கு செல்லுமாறு கூறியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த பொலிஸ் நிலையம் முன்பாக கூடியிருந்த பொதுமக்கள்பெரும் அதிருப்தியுடன் கலைந்து சென்றனர்.

இது தொடர்பாக பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரஸ்தாப இளைஞர்கள் மதுபோதையில் இருந்தனர். முல்லைத்தீவில் இடம்பெறும் மரக்கடத்தல்களுடன் தொடர்புபட்ட இவர்களுக்கு பொலிஸாரின் செல்வாக்கு உள்ளது. இதனால் பெற்றோரினால் பிடித்துக்கொடுக்கப்பட்ட இளைஞர்கள் மீது நடவடிக்கை எடுக்காது இணக்கசபைக்குச் செல்லுங்கள் என்று பொலிஸார் நழுவிக் கொண்டனர். அது மட்டுமல்ல "இதற்கு அக்ஷன் எடுக்கேலாது'' என்று கூறியதுடன் இளைஞர்கள் தாம் தாக்கப்பட்டதாக பொலிஸில் புனையப்பட்ட விவகாரத்துக்கு நடவடிக்கை எடுப்பதிலேயே பொலிஸார் கண்ணும் கருத்துமாக இருந்தனர். வேலியே பயிரை மேய உடந்தையாக இருப்பதாக அவர்கள் ஆதங்கம் வெளியிட்டனர். ஏற்கனவே பல சம்பவங்கள் தொடர்பில் முறையிட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக மனிதவுரிமை ஆணைக் குழுவில் முறையிடவுள்ளதாக வும் அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

இதுவிடயம் தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸாரைத் தொடர்பு கொண்ட போது உடனடியாகப் பதில் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. (2-3)

### இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான

# வாழ்வாதார உதவிகள் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன



ஈழத்தமிழ் உறவுகளின் வாழ்வாதாரத்தைப் பலப்படுத்தும் நோக்கில் தாயகத்தில் "வாழ்வோம் வளம் பெறுவோம்" எனும்செயற்றிடத்தினை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முன்னெடுத்து வருகின்றார்.

இச்செயற்றிட்டத்தின் ஏழாம் கட்டமாக நோர்வே வாழ் தமிழ் உறவுகள் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார ஊக்குவிப்பின் ஊடாக இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட பத்து குடும்பங்கள் உள்வாங்கப்பட்டன.

கடந்த 2,3 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட தேவிபுரம் மற்றும் கைவேலியில் ஒன்பது குடும்பங்களும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு குடும்பமும் இவ்வாழ்வாதார ஊக்குவிப்பினுள் உள்வாங்கப்பட்டுள்ளனர். மேற்படி நிகழ்வில் தேவிபுரம் மற்றும் விசுவமடு கிராம அலுவலர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

பாடசாலை மாணவர்களுக்கான மிதிவண்டிகள் மற்றும் வாழ்வாதார ஊக்குவிப்பு கருவிகளாக நீர் அழுத்த விசைப்பொறி, அரைப்பான், வாழைக்கன்றுகள், நீர்த்தாங்கி மற்றும் கடை விரிவாக்கலுக்கான நுகர்வுப்பொருட்கள் என்பன குறித்த முன்னெடுப்பில் வழங்கப்பட்டுள்ளன. (2-3-281)

# உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் விவசாயிகள் அக்கறை காட்ட வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவது போல உப உண்வுப் பயிர்ச் செய்கையிலும் கூடுதலாக ஈடுபட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக நெற்செய்கை தொடர்பிலான கூட்டங்களில், 4குளங்களின் கீழான சிறு போகச் செய்கை தொடர்பான கூட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இரணைமடுக்குளம் புனரமைக்கப்படுவதால் அந்தக் குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படமாட்டாது. இடைப்போகத்தில் 4 ஆயிரம் ஏக்கரில் உபஉணவு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதில்லை என கூறினார். கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாகும். விவசாயிகளின் கையிலதான் மாவட்டத்தின் உணவு உற்பத்தி தங்கியுள்ளது. விவசாய முயற்சிகளில் ஈடுபடுகின்ற விவசாயிகள் சட்டத்திட்டங்களை மதிக்கின்ற போதுதான் சிறந்த பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியும். சொந்த நிலங்களுக்குரியவர்கள் பயிர்ச்செய்கையில் கூடுதலாக ஈடுபடவேண்டும். காணிகளில் குத்தகை அடிப்படையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றவர்களினால் பிணக்குகள் பல தோன்றியுள்ளன. எனவே, விவசாயிகள் மத்தியில் ஒற்றுமை அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# உவர்நீர்த் தடுப்பணை அமைப்பதன் மூலம் குடிநீர் பிரச்சினைக்குத்தீர்வு காண முடியும்

(பூநகரி)

கிளிநொச்சி, பூநகரி, மண்டைக்கல்லாறு ஊடாக கடலுக்குச் செல்லும் வெள்ள நீரைத் தடுத்து, உவர்நீர்த் தடுப்பணை அமைப்பதன் மூலம், பூநகரியின் பல கிராமங்களில் காணப்படும் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என பூநகரி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தெரிவித்துள்ளன. வருடா வருடம் மாரி மழையின் போது ஏற்படுகின்ற வெள்ளம், மண்டைக்கல்லாறு ஊடாக யாழ்ப்பாணம்-மன்னார் (ஏ-32) வீதியைக் கடந்து பூநகரிக் கடலை சென்றடைகின்றது. மண்டைக்கல்லாறு பகுதி மக்கள் வெள்ளத்தை சேமித்து வைக்கவோ அல்லது அந்த நீரை விவசாய முயற்சிகளுக்கு பயன்படுத்தவோ எந்தவித முயற்சிகளும் எடுக்கவில்லை. மண்டைக்கல்லாறு, குடமுருட்டி வழியாக பெருமளவு வெள்ளநீர் ஆண்டுதோறும் கடலைச்சென்றடையும்நிலையில், மேற்படி மழை வெள்ள நீரை சேமித்து வைப்பதன் மூலம் பூநகரியின் குடிநீர் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுவதுடன், ஒருகட்டத்தில் சேமிக்கப்படும் நீரை யாழ்ப்பாண குடிநீர் பயன்பாட்டுக்கும் பயன்படுத்த முடியும் என கிராம பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்படுகின்றது. மண்டைக்கல்லாறு ஏ - 32 வீதியை ஊடறுத்து வெள்ளநீர் பாயும் போது, ஏ - 32 வீதியில் படகுச் சேவை நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)



தேசிய மட்டத்தில் இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்து சமயப் பரீட்சையில் தேசிய ரீதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட திருவள்ளுவர் குருபூசை தினத்தன்று கிளிநொச்சி துர்க்கை அம்மன் ஆலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. அத்துடன் கிளிநொச்சி துர்க்கை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் திருக்குறள், பா ஓதுதலும், திருவள்ளுவர் தொடர்பான பேச்சுகளும் இடம் பெற்றன. (படங்கள்-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# மாந்தை கிழக்கில் மீள்குடியேற்றப்பட்ட 850குடும்பங்களுக்கு உதவிகள் தேவை

## பிரதேச செயலர் தெரிவிப்பு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் மீள்குடியேறியுள்ள 2 ஆயிரத்து 890 குடும்பங்களில் 850 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள், 848 குடும்பங்களுக்கு மின்சார வசதிகள் என்பன ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டியுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.இராமேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேறியுள்ள 2 ஆயிரத்து 890 குடும்பங்களில் 850 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள், 848 குடும்பங்களுக்கு மின்சார வசதிகள், 66 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகள், 718 குடும்பங்களுக்கு குடிநீர் கிணறுகள் என்பன அமைக்கப்பட வேண்டியுள்ளதுடன் 296 குடும்பங்களின் குடிநீர் கிணறுகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

அத்தோடு பத்து பொதுக் கிணறுகள், ஐந்து குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

பாலிநகர், பாலைப் பாணி, கிடாய் பிடித்த குளம் ஆகிய கிராமங்களில் பொதுநோக்கு மண்டபங்கள், ஒட்டறுத்த குளம், சிராட்டிகுளம் ஆகிய கிராமங்களில் முன்பள்ளிகள் என்பன புதிதாக அமைக்கப்பட வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-3-15)

# 'இருண்ட பங்குனி' எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் இன்று அனுஷ்டிப்பு'

## கிளிநொச்சியில் பேரணிக்கு ஏற்பாடு

(கிளிநொச்சி-1)

சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் ஏற்பாட்டில் இருண்ட பங்குனி எனும் தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், படுகொலைகள் ஆகியவற்றுக்கு எதிராகவும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளையும் கொலைகளையும் இல்லாதொழிக்கும் பொருட்டு நாடளாவிய ரீதியில் இன்றைய தினத்தை இருண்ட நாளாக அனுஷ்டிக்குமாறு 'அழைப்பு விடுத்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை விழிப்புணர்வு பேரணியொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ்விழிப்புணர்வு பேரணியானது கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவிருந்து ஆரம்பமாகி ஏ-9 வீதியூடாக நகர்ந்து புதிய மாவட்ட செயலக முன்றலை சென்றடையவுள்ளது. எனவே இப்பேரணியில் பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நலன் விரும்பிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-3-277)



மடு பிரதேச பிரிவிலுள்ள 2 ஆம் கட்டை, பூமலர்ந்தான் ஆகிய கிராமங்களில் பாடசாலையை விட்டு இடை விலகிய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கான விழிப்புணர்வு கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரி, தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை அதிகாரி, சுகாதார உத்தியோகத்தர்கள், கட்டையடம்பன் பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (படம் : திருமுறிகண்டி செய்தியாளர்)

## வவுனியா பூங்கா வீதியில்

# விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நெற்களஞ்சியசாலை 31 ஆம் திகதி கையளிக்கப்படும்?

வவுனியாவில் விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் நீண்ட காலமாக உள்ள பூங்கா வீதியில் அமைந்துள்ள நெற் களஞ்சியசாலை எதிர்வரும் 31 ஆம் திகதி விடுவிக்கப்படும் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது காலபோக நெற் செய்கை நெல் கொள்வனவு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதனை களஞ்சியப்படுத்த களஞ்சியசாலைகள் போதாத நிலை காணப்படுகின்றது. இதனால் இக் களஞ்சியசாலையை விடுவிக்குமாறு கடந்த வருடத்தில் இருந்து வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் விடுக்கப்பட்டு வரும் கோரிக்கையை அடுத்து எதிர்வரும் 31 ஆம்திகதி களஞ்சியசாலை கையளிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

அப்பகுதியில் நிலை கொண்டுள்ள விசேட அதிரடிப்படையினர் மடுக்கந்தைப் பகுதிக்கு செல்லவுள்ளனர். இதேவேளை. குறித்த முகாம் அமைந்துள்ள பகுதியிலேயே வவுனியாவின் பிரதான நெற் களஞ்சியசாலை மற்றும் பிரதான அலுவலக கட்டடம் என்பன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-3-250)

# வவுனியா பொது வைத்தியாசாலையில் குளுக்கோமா பரிசோதனை நாளை

குளுக்கோமா தினத்தை முன்னிட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் குளுக்கோமா பரிசோதனை நடத்தப்படவுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு. அகிலெந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலையில் மருத்துவத்துடன் தொடர்புடைய சர்வதேச தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் குளுக்கோமா தினமும் நாளை புதன்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக வைத்தியசாலையின் கண் சிகிச்சை பிரிவில் குளுக்கோமா பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதால் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் உள்ளவர்கள் கர்ப்பிணி பெண்கள் மற்றும் நோய்த்தாக்கம் இலகுவில் தாக்க கூடியவர்கள் ஆகியோர் இப்பரிசோதனையை மேற்கொள்ள முடியும்.

பரம்பரையாக நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் என்பன உள்ளவர்களும் சிரமம் பாராது இப் பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்ததாக இருக்கும் எனவும் வைத்திய கலாநிதி தெரிவித்திருந்தார்.

இதேவேளை குளுக்கோமா தாக்கத்தை தடுத்து கண் பார்வை இழப்பை தடுக்க 40 வயதை கடந்த அனைவரும் பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்தது என அவர் மேலும்தெரிவித்தார். (2-3-250)

# நெல் மூடைகளை நாசப்படுத்துவதற்கு முன்னர் யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்துங்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்தையன்கட்டு ஜீவநகர் முத்து விநாயகபுரம், தட்டயர்மலை சாளம்பன், அம்பகாமம், மாங்குளம், பனிக்கன்குளம், கரிப்பட்டமுறிப்பு உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசத்தை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வன்னி யுத்தத்தினால் உடைமைகளை இழந்து மீள்குடியேறி பலத்த துன்பங்களின் மத்தியில் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக செய்யப்படும் விவசாயத்தை காட்டு யானைகள் பல தடவை அழித்து வருகின்றன. இதற்கான நட்டஈடுகளும் எமக்கு கிடைப்பதில்லை.

விவசாய நிலத்தை அழித்த யானைகள் தற்போது பொதுமக்களையும் தாக்குவதற்கு ஆரம்பித்துள்ளன. யானைகளின் தாக்கத்தை கட்டுப்படுத்த மின்சார வேலி அமைத்து தருவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் இதுவரை எந்தநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யானைகளின் அட்டகாசத்தால் இரவுவேளைகளில் வீடுகளில்தங்குவதற்கு கூட அச்சமடைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நெல் அறுவடை செய்யப்பட்ட நெல் மூடைகளை வீடுகளில் வைத்திருக்கின்றோம். கடந்த வருடமும் பல வீடுகளை உடைத்து நெல் மூடைகளை நாசப்படுத்தியது யானைகள். இம்முறையும் அவ்வாறான அழிவுகளுக்கு முன்னர் இதற்குரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-3-281)




# தற்காலிக வீடு தீயில் எரிந்து நாசம் அநாதரவான நிலையில் தாயும் மகளும்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கற்சிலைமடு மூன்றாம் கட்டம் கிராமத்தில் இரு பெண் தலைமைத்துவக்குடும்பங்களான வயோதிப தாய் மற்றும் அவரது மகள் ஆகியோர் வசித்து வந்த தற்காலிக வீடு வயோதிப தாய் தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பிற்கு மூட்டிய தீயினால் முற்றாக எரிந்து உடைமைகளும் அழிவடைந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி கிராமத்தில் வசித்து வந்த இளைய குட்டி இராசம்மா (வயது 84) என்ற வயோதிப தாயும் அவரது மகளான சிவதாஸ் கமலராணி (வயது-52) ஆகிய இரு பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் மகள் வேலைக்கு சென்ற நிலையில் வயோதிபத் தாய் தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பிற்கு தீ மூட்டினார்.

அவ்வேளை தீப்பொறி பறந்து வீட்டுக் கூரையை பதம் பார்த்துள்ளது.

இதனையடுத்து வீடு முழுவதும் தீ பரவிய நிலையில் அயலவர்கள் தீயை அணைக்க முயற்சி எடுத்த போதிலும் அது முற்றாக எரிந்து நாசமானது.

ஆயினும் வயோதிபத் தாய் எதுவித தீக்காயங்களு மின்றி மீட்கப்பட்டார்.

இதன்போது வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த 30 நெல் மூடைகள், 14 ஆயிரம் ரூபா பணம் உட்பட ஒரு இலட்சத்து 47 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் உடுபுடைவைகள், ஆவணங்கள் என்பனவும் முற்றாக தீயில் கருகி நாசமாகின.

இதில் பாதிக்கப்பட்ட இருவருக்கும் கற்சிலைமடு மூன்றாம் கட்ட கமக்கார அமைப்பினால்10 ஆயிரம்ரூபா பணம், கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஆகியோரினால் 11 ஆயிரம் ரூபா பணம், அயலவர்களினால் உடுபுடைவைகள் என்பன வழங்கப்பட்டன.


இதுவரை ஏனைய அரச உதவிகள் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில் சேலைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட தற்காலிக மறைவிடம் ஒன்றில் அவலத்துடன் இருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. (2-3-15)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் ய.ஜனோபரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து முள்ளியவளை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு தொகுதி கதிரைகள் கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு மணற்குடியிருப்பு பகுதியிலுள்ள அவரது தொடர்பகத்தில் வைத்து வழங்கப்பட்ட போது... (படம்: வற்றாப்பளை செய்தியாளர்)

# நடுக்கடலில் படகு கவிழ்ந்ததில் குழந்தைகள் உட்பட 25 பேர் பலி

## தொடரும் சோகம்



துருக்கியில் இருந்து நேற்று அதிகாலை கிரீஸ் நாட்டுக்கு கடல் வழியாக செல்லும் போது படகு கவிழ்ந்ததில் 25 பேர் மரணமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உள்நாட்டுப் போர், வறுமை போன்ற காரணங்களுக்காக ஏராளமானோர் ஐரோப்பிய நாடுகளுக்கு வருகின்றனர்.

அவ்வாறு வருபவர்களில் பெருமபாலானோர் துருக்கியில் இருந்து கடல் வழியாக கிரீஸ் நாட்டை அடைந்து பின்னர் தாங்கள் விரும்பிய நாடுகளுக்குச் சென்று விடுகின்றனர்.

இவ்வாறு கடலில் வரும்போது படகு விபத்தில் சிக்குவது காரணமாக பல அகதிகள் மரணமடைந்து வருகின்றனர்.

எனினும் இத்தகைய ஆபத்தான பயணம் மேற்கொள்வோர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமேயுள்ளது.

இந்நிலையில் கிரீஸ் நாட்டுக்கு செல்வதற்காக புறப்பட்ட படகு ஒன்று துருக்கியின் டிடிம்(Didim) நகர் அருகே கடலில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 10 குழந்தைகள் உள்ளிட்ட பலர் இறந்துவிட்டதாக கூறப்படுகிறது.

முதலில் 18 பேர் இறந்ததாக கூறப்பட்டது. பின்னர் மேலும் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனால் இறந்து போனவர்களின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது கடலில் சிக்கித் தவிப்பவர்களை மீட்பதற்காக தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

2016 ஆம் ஆண்டில் இதுவரை 400இற்கும் மேற்பட்டவர்கள் இந்த கடலை சட்டவிரோதமாக கடக்க முயன்று மரணமடைந்துள்ளனர் மற்றும் காணாமற்போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அரசுடன் அமைதிப் பேச்சை நிராகரித்த தீவிரவாதிகள்

(காபூல்)

சர்வதேச படைகள் நாட்டில் இருந்து வெளியேறும் வரையில் ஆப்கான் அரசுடன் புதிய அமைதி பேச்சுவார்த்தையில் பங்கேற்பதை தலிபான் தீவிரவாதிகள் நிராகரித்துள்ளனர்.

பாகிஸ்தான், சீனா மற்றும் அமெரிக்க தரப்புகளில் முன்னிலையில் தலிபான் மற்றும் ஆப்கான் அரசுக்கு இடையிலான நேரடி அமைதிப் பேச்சுவார்த்தை அடுத்த வாரம் பாகிஸ்தானில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த 2001 ஆம் ஆண்டு தலிபான் அரசு கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அந்த அமைப்பு ஆப்கான் அரசுக்கு எதிரான வன்முறைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. எனினும் கடந்த ஆண்டு தொடக்கம் இரு தரப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது.

எனினும் சனிக்கிழமை தலிபான்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது. "ஆக்கிரமிப்பு வெளிநாட்டுப் படை முடிவுக்கு வரும்வரை, சர்வதேச தடைப்பட்டியலில் இருந்து தலிபான்கள் பெயர் அகற்றப்படும்வரை. எமது கைதிகள் விடுவிக்கப்படும் வரை பேச்சுவார்த்தைகளால் எந்த முடிவும் கிடைக்கப்போவதில்லை என்ற எமது நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறோம்' என்று குறிப்பிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஆயிரக் கணக்கான துருப்பினரை தொடர்ந்தும் நிலைநிறுத்தும் திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த ஒக்டோபரில் அறிவித்திருந்தார். (இ-5)




# அணு ஆயுதங்களால் தாக்குவோம்

# தென்கொரிய-அமெரிக்க கூட்டுப்பயிற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடகொரியா மிரட்டல்

(சியோல்)

**தங்கள் நாட்டு கடல்பகுதியை ஒட்டி தென்கொரியா-அமெரிக்கா இராணுவத்தினர் செய்துவரும் கூட்டுப்பயிற்சிக்கு பதிலடி தரும் வகையில் அணு ஆயுதங்களை ஏவி தாக்குதல் நடத்தப் போவதாக வடகொரியா எச்சரித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தத்தை மீறிய வகையில் ஐதரசன் குண்டுகளை வெடித்து பரிசோதித்தது. விண்வெளி ஆய்வு என்ற பெயரில் அதிநவீன ஏவுகணையை செலுத்தியது போன்ற அத்துமீறல்களுக்காக வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்பு சபை கடந்த புதன்கிழமை புதிய பொருளாதார தடைகளை விதித்துள்ள வேளையில் ஜனாதிபதி கிம் ஜாங் உன் பிறப்பித்துள்ள இந்த திடீர் உத்தரவு உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

வடகொரியாவின் இராணுவ தலைமையகத்துக்கு கடந்த வாரம் சென்ற கிம் ஜாங் உன் அங்கு வைக்கப்பட்டுள்ள அதிநவீன ரொக்கெட்கள், ஏவுகணைகளை பார்வையிட்ட பின்னர், நமது எதிரிநாடுகளின அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் நம்மிடம் இருக்கும் அணு ஆயுதங்களை எந்த நேரத்திலும் பயன்படுத்த தயார் நிலையில் இருக்குமாறு இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அணு ஆயுதங்களின் தரத்தையும் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திய ஜனாதிபதி, நாட்டை பாதுகாப்பதற்காக நம்மிடம் உள்ள அணு ஆயுதங்கள் எந்த நிமிடத்திலும் சீறிப்பாயும் வகையில் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக, தென்கொரியாவை குறிவைத்து தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏவுகணைகளை பார்வையிட்ட கிம் ஜாங் உன் திருப்தி தெரிவித்ததாகவும் அந்த செய்திகள் சுட்டிக் காட்டுகின்றன.

இதனால், கொரிய தீபகற்பத்தில் போர்மேகம் சூழும் நிலை உருவாகியுள்ளது.

இதற்கிடையில், முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தங்களின்படி தென்கொரியாவும் அமெரிக்காவும் ஆண்டுதோறும் இராணுவ கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவது வழக்கம். அவ்வகையில், இந்த ஆண்டு கூட்டுப்பயிற்சியில் சுமார் 3 இலட்சம தென்கொரிய வீரர்களும், 17 ஆயிரம் அமெரிக்க இராணுவத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பயிற்சிக்காக தென்கொரிய கடல்பகுதிக்குள் அமெரிக்காவின் சக்திவாய்ந்த விமானம்தாங்கி போர்கப்பல்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை வடகொரியாவை ஆத்திரம் கொள்ள செய்துள்ளது.

தென்கொரிய - அமெரிக்க இராணுவ கூட்டுப்பயிற்சி தொடங்குவதற்கு சற்றுநேரம் முன்னதாக வடகொரிய இராணுவ தலைமையகம் செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டது.

தங்கள் நாட்டு கடல்பகுதியை ஒட்டி தென்கொரியா மற்றும் அமெரிக்க இராணுவத்தினர் செய்துவரும கூட்டுப்பயிற்சியானது, வடகொரியாவின் இறையாண்மையை குறைத்து மதிப்பிடும் வகையில் அமைந்துள்ளதாகவும், இதற்கு பதிலடியாக அணு ஆயுதங்களால் தாக்குதல் நடத்த வட்கொரியாவின் மக்கள் இராணுவம் தயாராக இருப்பதாகவும் அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

# மாணவனுக்குத் தொலைபேசியில் விடைகள் அனுப்பிய ஆசிரியர்கள்

## மூவர் பொலிஸாரால் கைது

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தின் கஞ்ஜாம் நகரில் உள்ள பாரதி வித்யா பீட பாடசாலையில் மெட்ரிகுலேசன் தேர்வுகள் அண்மையில் நடந்தன. இதில், கணித தேர்வின்போது மாணவர் ஒருவர் 20 நிமிடம் தாமதமாக தேர்வு மையத்துக்கு வந்துள்ளார். தேர்வுமைய கண்காணிப்பாளர் அவரை தேர்வு எழுதுவதற்காக அனுமதிக்க சோதனையிட்டபோது அவர் தொலைபேசி வைத்திருந்தது தெரிய வந்தது. சிறிது நேரத்தில் அந்த மாணவரின் தொலைபேசிக்கு தொடர்ந்து குறுஞ் செய்திகளும், அழைப்புகளும் வநத வண்ணம் இருந்தன. குறுஞ்செய்திகளில் அன்றைய தேர்வுக்கான விடைகள் இருந்தன.

இதனால் அதிர்ச்சியடைந்த தேர்வு மைய கண்காணிப்பாளர் மாணவரின் தொலைபேசியை பறிமுதல் செய்ததுடன் மாவட்ட கல்வி அதிகாரிக்கும் தகவல் தெரிவித்தார். பின்னர் இது தொடர்பாக பொலிஸிலும் புகார் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து மாணவருக்கு விடைகளை குறுஞ்செய்திகளாக அனுப்பியது யார், தொலைபேசி அழைப்புகளை விடுத்தது யார்? என்று பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அப்போது சந்தோஷ்பூர் பஞ்சாயதது உயர்நிலை பாடசாலை தலைமை ஆசிரியர், உதவி ஆசிரியர், ஆசிரியர் ஆகியோர் மாணவருககு உதவி செய்தது தெரிய வந்தது. இதையடுத்து 3 பேரையும் பொலிஸார் கைது செய்தனர். (இ-5)

# ரஷ்ய தூதரகம் மீது உக்ரைனில் தாக்குதல்



உக்ரைனில் ரஷ்ய தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது, முட்டை வீச்சும் நடந்தது. உக்ரைனை சேர்ந்த பெண்விமானி நாடியா சாவ்சென்கோ (வயது -34) ரஷ்யாவில் கைது செய்யப்பட்டார். கிழக்கு உக்ரைனில் 2 ரஷ்ய பத்திரிகையாளர்களை கொலை செய்ததாக இவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டை மறுத்துள்ள அவர் தன்னை விடுதலை செய்யும்படி வலியுறுத்தி ரஷ்ய சிறையில் உணவு மற்றும் தண்ணீர் அருந்தாமல் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

எனவே அவரை விடுதலை செய்யக்கோரி உக்ரைன் தலைநகர் கிவ் நகரில் உள்ள ரஷ்ய தூதரகம் முன்பு போராட்டம் நடந்தது. அதில் ஆயிரதுக்கும் மேற்பட்டோர் திரண்டனர்.

அவர்கள் ரஷ்யாவுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். மேலும் ரஷ்ய தேசியக்கொடியை தீயிட்டு கொளுத்தினர். ரஷ்ய தூதரகத்தின் மீது தீப்பந்தங்களையும், கற்களையும் வீசித் தாக்கினர்.

இதனால் அங்கிருந்த கண்ணாடி ஜன்னல்கள் உடைந்து நொருங்கின. தூதரகம் மீது முட்டைகளும் வீசப்பட்டன. அங்கிருந்த கற்கள் சம்மட்டியால் அடித்து நொறுக்கப்பட்டன.

தூதரகத்தின் முன்பு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினின் உருவப் பொம்மையை போராட்டக்காரர்கள் தூக்கில் தொங்க விட்டிருந்தனர். இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த உக்ரைன் அரசு உத்தரவிட்டுள்ளது. (இ-5)

# மைத்திரிக்கு எதிராக பசில்-கோத்தா

# பாரிய சூழ்ச்சி

# கொந்தளிக்கும் மூத்த தலைவர்கள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகி வேறு அரசியல் கட்சியாக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மகிந்த தரப்பின் சில தலைவர்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த செயற்பாடு கோத்தபாய மற்றும் பசில் ராஜபக்ஷவின் சூழ்ச்சி எனக் கூறி அதற்கு தினேஷ் குணவர்தன மற்றும் வாசுதேவ நாணயக்காரவினால் கடுமையான எதிர்ப்பு வெளியிட்டமையே புதிய கட்சி தீர்மானம் கைவிட காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.


ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினுள் எந்தவொரு மோதலை ஏற்படுத்தி கொள்ளலாம். எனினும் புதிய கட்சி என்ற நிலைப்பாடு நிச்சயம் தோல்வியடையும் என வாசுதேவ நாணயக்கார சுட்டிக் காட்டியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ அல்லது பசில் ராஜபக்ஷவுக்கு ஒருபோதும் முன்னணியின் தலைமை பதவி கிடைக்கப் போவதில்லை. இதன் காரணமாக அதிருப்தி அடைந்த நிலையில் வேறு கட்சி அமைக்கும் சூழ்ச்சியினை மேற்கொள்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வாசுதேவ நாணயக்கார மற்றும் தினேஷ் குணவர்தன போன்ற மூத்த முன்னணி தலைவர்கள் உட்பட பலரின் கருத்தாகவுள்ளது.

இதற்கு மேலதிகமாக உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச உட்பட கூட்டு எதிர்க்கட்சி குழுக்களினால் மேற்கொள்ளப் படும் எதிர்ப்பிற்கு தினேஷ், வாசு குழுவினர் கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இவர்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக மார்ச் மாதம் 17ஆம் திகதி கூட்டு எதிர்க்கட்சியினால் ஹைட் மைதானத்தில் இடம்பெறவுள்ள முதல் பேரணியின் "இந்திய ஆக்கிரமிப்பு" என்ற தலைப்பிற்கு பதிலான "எட்கா ஒப்பந்தம்" என மாற்றுவதற்கு விமல், கம்மன்பில இணக்கம் வெளியிட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.





இதேவேளை கட்சியின் கொள்கைக்கு முரணாக செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-5)

# கர்ப்பகால நீரிழிவு Gestational Diabetes

நீரிழிவு என்பது இப்போது எமது பிரதேசத்தில் மக்களிடத்தில் அதிக ளவில் காணப்படும் ஒரு நோயாக உள்ளது. பெரியவர்களுக்கு மட்டும் நீரிழிவு இருந்த காலம் போய் இன்றைய நாட்களில் சிறுபிள்ளைகளுக்கும் நீரிவு ஏற்படும் நிலையை நாம் பார்க்கின்றோம்.

நீரிழிவு பற்றிய விழிப்புணர்வு பல்வேறு தரப்பினராலும் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மக்களும் நீரிழிவு ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதை நன்கு அறிந்துள்ளார்கள்.


இலங்கையரான நாம் நீரிழிவு வருவதற்கான சந்தர்ப்பங்களை அதிகம் கொண்டவர்கள். தமிழ்ச் சமூகமாகிய நாம் மிகக் கூடுதலாக பாதிக்கப்படலாம். இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. ஆசியராக இருப்பதால் எமது பரம்பரை அலகுகள் நீரிழிவு வருவதற்கான ஜீன்களை (Genes) வைத்துள்ளன. மேலும் எமது மாற்றமடைந்த உணவுப் பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறையும் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நீரிழிவு ஆண்,பெண் மற்றும் வயது வேறுபான்றி எல்லோரையும் பாதிக்கும். அதேபோல் கர்ப்பிணித் தாய்மாரை பாதிக்கும் போது அதனை கர்ப்பகால நீரிழிவு என்கின்றோம்.

இலங்கையில் குறைந்தது நூறில் எட்டு தொடக்கம் பத்து பேருக்கு (8-10/100) கர்ப்பகால நீரிழிவு வரலாம். ஆனால் இது தொடர்பான சரியான புள்ளி விபரம் தற்போது எம்மிடம் இல்லை.

இரு விதங்களில் கர்ப்பகால நீரிழிவு ஏற்படலாம்

• முன்னரேயே நீரிழிவு உள்ளவர்கள்(Pre existing Diabetes) கர்ப்பமடையலாம்.



• மற்றையோர் கர்ப்பகாலத்தில் நீரிழிவு நோய் வருபவர்கள். இவர்களுக்கு சில வேளைகளில் குழந்தை பிறந்தவுடன்நீரிழிவுஇல்லாதுபோகலாம்.

முன்னரேயே நீரிழிவு உள்ளவர்கள்(Pre existing Diabetes) கர்ப்பமடைய முன் ஒழுங்கான மருத்துவ ஆலோசனையை பின்பற்றி குருதியின் குளுக்கோஸ் அளவை கட்டுப்படுத்தியிருப்பின் இவர்களுக்கு நீரிழிவால் ஏற்படும் விளைவுகள் குறைவாகவே இருக்கும்.

**கர்ப்பகால நீரிழிவு எவ்வகையில் பாதிப்பை ஏற்படுத்தும்?**

இது தாயாரையும் கருவிலுள்ள சிசுவையும் பாதிக்கும்(Maternal fetal complications)

• கர்ப்பிணிக்கு அடிக்கடி சிறுநீர் தொற்று ஏற்படுதல்

• குறை மாத பிரசவம் (Preterm delivery)

• நிறைகூடியபிள்ளைகள்பிறத்தல் (large baby.)

• சத்திரசிகிச்சை பிரசவம்

• சிரமமான பிரசவம்

• பிள்ளைப்பேறின் போது கடும் இரத்தப் போக்கு (Postbartum haemorrhage)

• பிள்ளை பிறந்த பின் ஏற்படும் மஞ்கள் காமாலை நோய் (Neonatal jaundice பிள்ளை விசேட கவனிப்பு பிரிவுக்கு அனுமதிக்கப்படல்(NICU admission)



• கடுமையான நீரிழிவு இருப்பின் அரிதான சந்தர்ப்பங்களில் கருச்சிதைவு, அங்க குறைபாடுள்ள பிள்ளைகள் பிறத்தல் என்பனவும் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

சரியான முறையில் நீரிழிவு கட்டுப்படுத்தப்பட்டால் மேற்கூறியவை மிக குறைவாகவே நிகழலாம்.

இன்சுலின் அல்லது குளிசைகள் பாவிப்பவராக இருந்தால் சில வேளைகளில் உடலில் வியர்வை, தலைசுற்று (Hypoglycemic symptoms) போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். வைத்திய அறிவுரை இத்தகைய சந்தர்ப்பங்களில் இன்றியமையாதது.

**கர்ப்பகால நீரிழிவு யார் யாருக்கு வரலாம்?**

கீழ் குறிப்பிட்டோருக்கு கர்ப்பகால நீரிழிவு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

• முந்தைய கர்ப்பத்தில் கர்ப்பகால நீரிழிவு இருந்தவர்கள்

• உடல் பருமன் கூடியவர்கள்

• குடும்பத்தில் மிக கிட்டிய இரத்த உறவுகளுக்கு நீரிழிவு உள்ளவர்கள்

• முந்திய கர்ப்பங்களில் நிறை கூடிய பிள்ளை பிறந்தவர்கள்

• முந்திய கர்ப்பங்களில் பிள்ளை இறந்து பிறந்தமை(IUD)

**கர்ப்பகால நீரிழிவை எப்படி கண்டுபிடிக்கலாம்?**

• இப்போது ஆரம்ப கர்ப்பகாலத்திலேயே கர்ப்பகால நீரிழிவை கண்டுபிடிப்பதற்கு சில குருதிச் சோதனைகள் உள்ளன.

(PPBS,NGCT,OGTT)



**Dr. க.குருபரன்**
பெண் நோயியல் மகப் பேற்றியல் நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை.

• கர்ப்பகாலத்தின் ஆரம்ப காலத்திலும் பின்னர் இரண்டு முறைகளும் உங்கள் குருதியில் உள்ள குளுக்கோஸின் அளவு சோதிக்கப்படும்

• பரிசோதனைகளின் முடிவுகளில் ஏதாவது வித்தியாசம் இருப்பின் வைத்திய நிபுணரின் மேலதிக ஆலோசனை பெறப்படும்.

**எப்படியான கவனிப்பு இவர்களுக்கு தேவை?**

• வைத்தியர்களால் அறிவுறுத்தப்படும் உணவுக் கட்டுப்பாட்டை சரியான முறையில் பின்பற்றுதல் (Diet control)

• ஒழுங்கான முறையில் குருதியின் குளுக்கோஸ் பரிசோதனை (Blood sugar series BSS)

• இன்சுலின் (Insulin) மேட்போர்மின் (Metformin) போன்றவற்றை வைத்தியர்கள் தருவார்கள். தரப்படும் மருந்துகளை தவறாது எடுத்தல்

• பிள்ளையின் வளர்ச்சியை ஒழுங்காக கண்காணித்தல்

• இதற்கு மேலதிகமான தகவல்களை உங்கள் வைத்தியர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.



# மகளிர் மகத்துவமும் இன்றைய மகளிரும்

## பெண் சிலுவை

கருவில் இருக்கும் போது
காது கொடுத்துக் கேட்டுக் கொண்டேன்
பிறக்கப் போவது பெண்ணாய்
இருக்கக் கூடாது
பிரசவ வலியில் துடிதுடித்த-என்
அன்னையின் அடிவயிற்றில்
அக்கம் பக்கத்தார் அடித்துச் சென்ற
முதல் ஆணியிது!

பிறந்தேன் பெண்ணாய்-
ஆறு வயதிலே அடங்காக்காரி
அம்மையைப் போல் என-அயலார்
என்னை ஆலாத்தி எடுத்தனர்
அடுத்த ஆணியை ஆழமாய்
அடிப்பதாய்!

பதின் நான்கு வயதில்
பருவமெய்தினேன்
ப்ள்ளிக்குச் சென்ற-என்னை
வழிமறித்தனர்,
வாலிபர்கள் கூடி-வழியே
வம்பு வார்த்தைகள் கொண்டு
வர்ணித்தனர்-அடுத்த ஆணியாய்!

கட்டிளம் பருவம்
கொண்டேன்!
கண்டதும் காதல்
வந்ததாய் சொல்லி
கற்பினை இழந்தேன்-கடைசியில்
கையில் பிள்ளையோடு
கடைசி ஆணி அடிக்கப்பட்ட
பெண் சிலுவையாய்
கபாலஸ்தலத்திலல்ல
கட்டைக் காடுகளுக்குள்
காணாமற் போகின்றோம்-ஆனால்
சிலுவையில் மரித்த
நாம்
என்றோ ஒருநாள்
உயிர்ப்போம்
என்பது உலகறிந்த உண்மை!

கிளியூர் வி.வே.பிறேம்



பெண்களைக் கடவுளின்சக்திஎன்பார்கள். அன்னை பராசக்தியின் வடிவமான அவள் போற்றுவதற்குரியவர்களாகின்றாள். மேலும் மனிதர்களுக்கு ஒரு தோழி, வாழ்க்கையின் அருஞ்செல்வம், இயற்கையின் விசித்திரம், இயற்கையின் அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம். பெண் வீட்டிற்கு அரசி, லக்குமி மற்றும் இனிமையான துணைவி என்ற பெருமை எல்லாம் பெற்றுத் துலங்குபவள். இயற்கையாகவே பொறுமை, சகிப்புத் தன்மை, பக்தி, பிரேமை ஆகிய நற்குணங்கள் நிரம்பியவளாகவே அவள் காணப்படுகின்றாள்.

தாயாக, பிள்ளையாகபெண்ணாக மற்றும் இன்னோரன்ன உறவுகளாக பல நிலைகளில் இருந்தும் வீட்டையும் சமூகத்தையும் நாட்டையும் தாங்கிப் பிடிக்கும் தூணாகச் செயற்படுகின்றார்கள்.

பெண்ணவளுக்குநாணம் ஓர் அணிகலன் போன்றது. ஒரு பெண் அழகும் நாகரிகமும் உள்ள போதும் நாணம் இல்லாதவளாகஇருக்கும்போது அது அவளது பெண் மையை வெறுமையாகத் தோற்றுவிக்கும். பெண்மையை ஒளி இழக்கச் செய்து விடும். எளிமை, பணிவு, சுறுசுறுப்பு, இனிய சுபாவம்- உயர்தத்துவங்களுக்கு மேல்பற்றுதல், அடக்கம் ஆகியவற்றின் கூட்டுக் கலையே நாணம் எனப்படுகின்றது.இந்நாணமுடையபெண் இயற்கையாகவே தனது எல்லையைமீறிப் போகமாட்டாள். இது அவளைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகின்றது.

மலர்களில் உள்ள தேன் வண்டுகளையோ தேனீக்கயையோ வருந்தி அழைப்பதில்லை. அவற்றைத் தேடிச் செல்வதுமில்லை. அந்தத் தேனைச் சுவைக்க அவைகளே அந்த மலர்களைத் தேடி வருகின்றன. ஒரு நாணமுள்ள பெண்ணுக்கும்அவளைத் தேடி வருகின்ற கௌரவத்திற்குமான தொடர்பும் இதைப் போன்றதே. எங்கள் அடுத்த தலைமுறையினர் சிறப்புற ஓங்க வேண்டுமாயின் அதற்கு ஆதாரமாக இருப்பவரும் பெண்ணே! பண்டைய காலம் தொட்டே பெண்கள் தம் குழந்தைகளுக்கு சத்தியம், தர்மம், அன்பு இவற்றைப் பற்றி எல்லாம் போதித்து வந்துள்ளனர். இதில் ஒரு தாயின் பங்கு மிகவும் புனிதமானது. இதனால் ஒரு குழந்தைக்கு முதல் குருதாயாகிறாள்.

எங்கள்கலாசாரம்தாய்மைக்கு முன்னுரிமை கொடுத்து மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நிலையில் இவர்களது பெருமையையும், முக்கியத்துவத்தையும்போதித்துவருகின்றது.

மனித வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாக கூறப்படும், உயர்ந்த உன்னத மேம்பாடுகளைக் கொண்ட உத்தமர்களான மகாத்மா காந்தி சுவாமி விவேகானந்தர், சரித்திர வீரர் சிவாஜி, அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன்போன்ற மகான்களும் அவர்களது அன்னையர்களினாலேயே வளப்படுத்தப்பட்டார்கள். இன்று இந்த வாழ்க்கைமுறை ஒருபுறமிருக்க, நாகரிக வளர்ச்சி காரணமாக வசதி வாய்ப்புக்கள் பெருகி பெண்கள் மத்தியில் பெரும் மாற்றங்கள் ஏற்படுவதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. புனிதமான, மேன்மையான வாழ்வு வாழும் பெண் எனப் போற்றப்பட்டவள் இன்று தன்னிச்சையான போக்கினால் உலக சுகங்களுக்கு அடிமையாகி தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாள்.

சமூகத்தைக் கெடுக்கும் இவர்களது செயல்களால் வீட்டினரின் கௌரவமும் சமூக பண்பாட்டுச் சிறப்புக்கள் என்பனவும் அழியும் தன்மைக்கு இட்டுச் செல்லப்படுகின்றன.

பெண்களுக்கு சிறந்த பண்புகளையும், சீலத்தையும் கற்பிக்கும் பெற்றோர்கள் நாட்டிற்கு நலத்தையும்சாந்தியையும் அளித்தவர்கள் ஆகின்றனர்.

பெண்கள் வெளியுகில் நடமாடும் போது விழிப்புடனிருத்தல் வேண்டும். தங்கள் ஒவ்வொரு செயற்பாட்டின் போதும்சொல்லிழுக்குப்படாது நாகாத்து தோன்றாத் துணையாக இருக்க வேண்டும்.

இன்று மனிதர் மத்தியில் அத்தியாவசிய தேவையாக அமைவது பொருளாதார வளர்ச்சியும், உயர்கல்வியுமல்ல. நல்ல குணமுள்ள ஆணும் பெண்ணுமே என்பது மறக்கப்பட முடியாத பெரிய உண்மையாகும்.

ஒரு நல்ல ஆணை உருவாக்குவதும் ஒரு பெண்ணுக்குரிய பெரும் பொறுப்பாக அமைந்து விடுகின்றது. இன்று பெண்ணானவள் நாகரிகமோகத்தில் திளைத்து செற்படும் போது பெண் பின்னடைவையே சந்திக்க நேரிடுகின்றது. தன்னையும் தன் சந்ததியினரின் எதிர்கால வாழ்வு குறித்தும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

நாகரிகத்தோடு போட்டியிட்டுச்செல்லாது சற்றே பின்னிற்கும் போதுதான் பெண்ணானவள் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கின்றாள்.

உலகியல் கல்வியை நாம் எவ்வளவுதான் கற்றுக் கொண்டாலும் பெற்றுக் கொண்டாலும் எங்கள் தூய வாழ்வுக்கு ஆதாரமாகவும் உறுதுணையாகவும் இருப்பது தெய்வீக அன்பும் ஒழுக்க விழுமியங்களுமாகும். எவ்வளவு தான் படித்துப் பட்டங்களைப் பெற்றாலும் நல்ல பண்புகள், பழக்கவழக்கங்கள், நன்னடத்தைகள், அன்பு செய்தல் போன்றவற்றை நாம் தெரிந்து கொள்ளாவிட்டால்எமது கல்வியின் உச்சப்பயன் பூச்சியமாகவே அமைந்து விடும்.

எனவே பெண்கள் நாட்டின் கண்கள் என இருந்து அறநெறி காத்து தன் சந்ததியையும் தலைமுறைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும்.உடலாலும்மனதாலும் வலிமை பெற்றிருக்க வேண்டும். நல்ல தாய்மாரே நல்ல தேச மக்களை உருவாக்குகின்றனர். தாய்மார்கள் தியாகம், யோகம், பக்தி என்பவற்றின் இருப்பிடமாகத் திகழ வேண்டும். ஒரு மரத்திற்கு ஆதாரமாக இருப்பது அதன் வேர். அந்த வேர்தான் மரத்திற்கு வேண்டிய நீரையும் கனியுப்புக்களையும் உறிஞ்சிக் கொடுத்து மரத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கின்றது. மரத்தையும் விழாமல் தாங்கிப் பிடிக்கின்றது.

அந்த வேருக்குரிய பெறுமதியை உடையவளாக, எங்கள் பெண்ணினம் வாழவேண்டும், ஏற்றம் பெறவேண்டும். அதனால் மானிடம் தழைக்க வேண்டும்.

அது ஓங்க வேண் டும். இதனால் அமைதிக் கும் ஒரு வழி சமைத்தவ ளாகப் பெண்ணானவள் மாறிப் பெருமிதம் கொள்ளலாமே.

சரஸ்வதி

# வஞ்சியர் வாழ்வு வளம் பெறட்டும்

ஆண்டாண்டு தோறும் மகளிர் தினம் கொண்டாடுகின்றோம். மகளிருக்காக குரல் கொடுக்கின்றோம். பட்டிமன்றங்கள், மேடை நிகழ்வுகள், கட்டுரைகள், கவிதைகள், பத்திரிகைகள் தோறும் எழுதுகின்றோம். ஆனால் எமது நாட்டில் பெண்களுக்கான பூரண உரிமை கிடைக்கப்பெற்றுள்ளதா? என்பது ஐயத்துக்கிடமானவினாவே

சர்வதேச தினமாக கொண்டாடப்படும் மகளிர் தினம் ஏன் கொண்டாடப்படுகின்றது? எண்பதன் வரலாற்றினை ஆராய்ந்து கொள்கையில்...

1907 ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டின் ஸ்டடர்காட் என்ற நகரினில் முதன் முறையாக சோசலிச பெண்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் 15 நாடுகளில் இருந்து 59 பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். உலகத்தில் உள்ள பெண்கள் அமைப்புக்களை ஒருங்கிணைப்பதற்காக சர்வதேச பெண்கள் அமைப்பு இம்மாநாட்டில் உருவாக்கப்பட்டது.இவ் அமைப்பிற்கு *கிளாரா எஜட்கின்* செயலாளராக தேர்வு செய்யப்பட் டார்.

நியூயோர்க் நகரினில் 1908 ஆம் ஆண்டு பதினையாயிரத்திற்கு (15000) மேற்பட்ட பெண்கள் பேரணியாகச் சென்று தங்களின் வேலை நேரத்தை குறைக்க கோரி வலியுறுத்தியும் தேர்தலில்வாக்களிப்பதற்கான உரிமை கோரியும் நியாயமான சம வேலைக்கு சமஊதியம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி முழக்கமிட்டார்கள்.

1909 ஆம் ஆண்டு ஆடை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்கள் தங்களுக்கு நியாயமான ஊதியம் வழங்க வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தம் மேற்கொண்டனர். அமெரிக்காவின் சோசலிஸ்ட் கட்சி,தேசிய அளவிலான மகளிர் மாநாட்டை முதன்முதலாக மாசிமாதம் 28ஆம் திகதியன்று நடத்தியது. அன்றைய தினத்தில் இருந்து 1913ஆம் ஆண்டுவரை மாசி மாத இறுதிநாளான ஞாயிற்றுக் கிழமை சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடப்படுகின்றது.

1910ஆம் ஆண்டில் ஜேர்மனிய நாட்டின் கோபன் ஹேகன் நகரில் ஜேர்மனிய சோசலிச ஜனநாயக கட்சி 2ஆவது மகளிர் மாநாட்டை நடத்தியது. இதில் 17 நாடுகளில் இருந்து 100 ற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டார்கள். இவர்கள் பல்வேறு நாடுகளின் தொழிற் சம்பவங்களின் பிரதிநிதிகளாகவும் சோசலிச கட்சியின் பிரதிநிதிகளாகவும் இருந்தனர். இம் மாநாட்டில் சோசலிச ஜனநாயக கட்சியின் மகளிர் பிரிவு தலைவராக இருந்த *கிளாரா ஜெட்கின்* பெண்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தை நடத்திட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். இத்தீர்மானம் அனைத்து பிரதிநிதிகளாலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ரஷ்யா நாட்டினில் முதன்முறையாக 1913ஆம் ஆண்டு தொடக்கம் 1914ஆம் ஆண்டு வரை சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. 1913ஆம் ஆண்டு மாசிமாத இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் பங்குனி மாதம் 8ஆம் திகதி பெண்கள் (மகளிர்) தினம் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

1917ஆம் ஆண்டு ரஷ்ய நாட்டுப்பெண்கள் ரொட்டிக்காகவும் போருக்கு எதிராகவும் மாசிமாத இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை வேலை நிறுத்தம் செய்து கொண்டார்கள். அன்று நடைபெற்ற போரிலே இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் உயிரிழந்திருந்தனர். இவ் வேலை நிறுத்தத்தை தடை செய்ய ஆரம்பத்தில் அரசு முயற்சி செய்த போதும் பின்னர் ரஷ்ய நாட்டுப் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை முதன்முறையாக தந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வீர மிக்க வேலைநிறுத்தம் ரஷ்ய ஜூலியன் நாட்காட்டிப்படி மாசிமாதம் 23ஆம் திகதி எனக்குறிப்பிடப்பட்டாலும் உலகம் முழுவதும் பங்குனி மாதம் 8ஆம் திகதியே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க தினத்தை நாம் இன்று வரை கொண்டாடுகின்றோம். சர்வதேச மகளிர் தினமாக பங்குனி மாதம் 8ஆம் திகதியே கொண்டாடுகின்றோம்.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் மகளிருக்கென உரிமை கிடைக்கப்பெற்றுள்ளதா? என்பது சந்தேகத்திற்கு இடமானதொன்றே.எமது யாழ்ப்பாண குடாநாட்டினில் கல்வி நிலையில் பெண்கள் உயர்நிலை பெற்று முன்னேறினாலும் பெண் என்ற பால்நிலைப் பிரச்சினையால் பாரிய பிரச்சினைகளை அவள் எதிர்நோக்க நேரிடுகின்றது. பால், பால் நிலை அடிப்படையிலான வன்முறைகளில் இருந்து சரியான முறையில் விழிப்புணர்வு பெறாமையே சான்றாகும். பால் மற்றும் பால் நிலை அடிப்படையிலான வன்முறைகளில் இருந்து விழிப்புணர்வு எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்? என ஆராய்கையில் இலிங்க உறுப்பினை வைத்து வேறுபடுத்தப்பட்ட குழந்தை சமூகத்தின் இனம், மதம், கலாசாரத்தன்மைகளுக்கேற்ற வளர்ச்சிகளின் போது வேறுபடுத்தப்பட்டு நோக்கப்படுகின்றது. இவை மாற்றி அமைக்கக் கூடியவை.இது பால்நிலை அல்லது ஆண்,பெண் பற்றிய சமூகத்தின் கருத்து நிலை எனப்படும்பால்நிலைவகிபாகத்தினுள்,

1.சமூகத்தினால் வகிக்கப்பட்டுள்ள வேலைப்பிரிவுகளுக்கானபொறுப்புக்கள்

2.ஆண்,பெண் என்ற வகையில் எமக்கு அனுமதிக்கப்பட்டவை.

3.ஆண்,பெண் என்ற வகையில் எம்மிடம் அனுமதிக்கப்பட்டவை போன்ற உள்ளடங்கும்.

இன்றைய காலகட்டத்தில் பால்நிலை விழிப்புணர்வு மிகவும் அவசியமானதொன்றாக காணப்படுகின்றது. பெண்கள் எவ்வளவு தான் படித்தாலும் உயர் பதவிகள் பெற்றாலும் இவ்விழிப்புணர்வு அவசியமானதொன்றே ஆகும். இவ்விழிப்புணர்வு ஏன் அவசியம் என நோக்குகையில்,

1.ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் பாரியளவு ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றமை.

2.பெண்களை ஆணாதிக்கத்துள் சேர்த்து நோக்கப்படுகின்றமை

3.வறிய மற்றும் வலுவற்ற நிலையில் உள்ளவர்களே பால்நிலை விழிப்புணர்வு இன்மையால் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். குறிப்பாக பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.

4.பெண்கள்உடல்ரீதியாகவலிமை குறைந்தவர்களாக கணிப்பிடல்.

5.சமூக,சமய,கலாசார கடப்பாடுகள்

6.பெண்களை பாலியல் பொருளாக கருதல்.

போன்ற காரணிகள் சான்றுரைக்கின்றன.

பாலியல் ரீதியான் வன்முறை என்பது துஷ்பிரயோகம் ஆகும். அதாவது ஒருவர் தனது நலன் கருதி இன்னொருவரை உடல்,உள ரீதியாக துன்புறுத்தல் , அவரது சுதந்திரத்திணைப் பறித்தல்எண்பது ஆகும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே என்றால் அது தவறாகாது.இதில் சிறுவர்களும் அடங்குகின்றார்கள்.

**பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் வகைகளாவன:-**

1.உடல் ரீதியானவை

2.உள ரீதியானவை

3.பொருளாதார ரீதியான்வை

4.பால்நிலை ரீதியானவை

5.ஆன்மீக ரீதியானவை

6.சமூக புறக்கணிப்பால் போன்றவையாகும்.

பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகள் என்பது வேலைத்தளங்களில், பொது இடங்களில், பாடசாலைகளில், தடுப்புக் காவல்களில், போக்குவரத்துக்களில் போன்ற இடங்களில் நடை பெறுகின்றன.

**வன்முறையில் உள்ளக்கப்படும் பெண்களுக்கு ஏற்படும் பின்விளைவுகளாவன,**

1)சுயமதிப்புஇழந்துபோதல்

2)வருவாய் இழப்பு.

3)சுற்றம், சமூகம் அனைத்தினையும் இழந்து போதல்

4)உறைவிடம் இழந்து போதல்

5)குடும்ப நீதி மன்றம் மற்றும் குழந்தை யாருடைய பாதுகாப்பில் இருப்பது தொடர்பான சட்டப் பிரச் சினைகள்.

6)நீண்டகால மன நலன் மற் றும் உளநலன் சார் பிரச்சினைகள்

7) உதவிகளுக்காக அலைந்து திரிதல் போன்ற விளைவுகளால் பெண் தன் மதிப்பை இழந்து போகின்றாள்.

எனவே இவ் வகையான வன் முறைச் செயற்பாடுகள் இடம் பெறாமல் இருக்க ஆண் குழந்தைகளை ஆரம்ப பருவகாலம் தொட்டு வளர்க்கும் பெற்றோர்களிடையே பாரபட்ச மின்றி பிள்ளைகளை வளர்க்கும் வளர்ப்பு முறைகள் போதிக்கப்பட வேண்டும். முளையில் கிள்ளியெறியாவிடின் வளர்ந்து மரமான பின்வெட்டுவது என்பது சாத்தியமற்றதொன்றே.

எமது வட மாகாண வஞ்சியர் வாழ்வு வளம் பெற வினைத் திறனோடும், விளை திறனோடும் செயலாற்றி பாலியல் ரீதியான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கக்கூடியஆண்டாக இவ் ஆண்டு இடம் பெற வேண்டும்.சகல மாவட்டங்களிலும் வாழும் அதாவது யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவுபோன்ற மாவ ட்டங்களில் வாழும் பெண் இனத்தை பொக்கிச மாகப் போற்றி வாழ்வோம், வாழ்ந் திடுவோம் பெண்கள் நம் நாட்டின் கண்கள் என்ற சிந்த னையோடு.

**மிஷாந்தி**



## உனக்கு மகளிர் தின வாழ்த்துக்கள்

மகிழும் பூவாய் உன்
மனம் மணக்கட்டும்
ஆயிரம் தொல்லைகள்
உன்னைச் சுற்றி வந்தாலும்
மத்தாப்பூவாய்
நீ மலர்ந்து சிரி...
பிரச்சினைகள் உன்னைக் கண்டு
பிடரியில் கால் பட பயந்து ஓடட்டும்

யாருக்கு இல்லை கவலைகள்
சிரி
உன்னைச் சுற்றி
சந்தோச சாம்ராஜ்யம் உருவாக்கு

வாழ்வது ஒருமுறை தானே பெண்ணே
அகிலம் உன்னால் வளரட்டும்

அன்பெனும் மந்திரம்
ஓத பழகு
அன்பெனும் அன்னம்
வாரி வழங்கு
அன்பென்னும் ஆடை
உடுக்கக் கொடு
அன்பால் உலகை
அணைத்துக் காட்டு

பொறாமை விடு
அகம்பாவம் அழி
அறிவைப் பெருக்கு
ஆற்றலை உயர்த்து

கண்ணீர் விட்டு
காலம் கலையாதே
சோர்ந்து போகாதே
சட்டத்தின் துணையுடன்
எங்கும் சமாதானம் நிகழ்த்திடு

உன் பூங்கரங்களில்
தான் புவியே இருக்குது பெண்ணே..
பெண்கள் தின வாழ்த்து
பெண்ணே உனக்கும்.
(வன்னி மைந்தன் முறிகண்டி
லக்சிதரன்)

# புதிய வரிகளுடன் மினி பட்ஜெட் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## இராஜாங்க நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டுக்கான மினி பட்ஜெட் ஒன்று திறைசேரியினால் தயாரிக்கப்பட்டு வருவதுடன் இம் மாதம் அது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொண்டதலினால் வருமானம் மற்றும் மொத்த செலவினங்கள் திட்டமிட்ட அளவை மீறிச் சென்றுள்ளன.

அரசாங்கத்தின் நிதித்தேவைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதனால் அதனை எதிர் கொள்வதற்கு புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இது தொடர்பான மினி பட்ஜெட் மார்ச் மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என கடந்த டிசெம்பர் மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசங்க பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

தற்போது நடைமுறையிலுள்ள வரி விதிப்பு முறைமைகளை மினி பட்ஜெட் மீளாய்வு செய்வதுடன் புதிய வரி அல்லது வரி அதிகரிப்பு அறிமுகப்படுத்தப்படும் என திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மினி பட்ஜெட்டின் மூலம் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் 70 தொடக்கம் 80 பில்லியன் ரூபா வரை திட்டமிட்ட வருமானத்திலும் பார்க்க குறைவடையலாம். வாகன அனுமதி மற்றும் வாகனப்புகைப் பரிசோதனை வரி 5 ஆயிரம் ரூபாவிலிருந்து ஆயிரத்து 500 ரூபாவாக குறைக்கப்படுவதால் ஆகக் குறைந்தது 66 பில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவிக்கையில் திறைசேரி மினி பட்ஜெட்டை தயாரித்து வருகிறது. இது தொடர்பாக அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். மினி பட்ஜெட் மூலம் 30 வீதமான செலவீனம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டெழும் செலவினம் முதலீட்டுச் செலவினம் என்பன முறையே 17 வீதத்தினாலும் 70 வீதத்தினாலும் அதிகரிக்கும். தவறான கணிப்பீடுகள், தரவுகள் மற்றும் பதிவுகளினால் நாட்டின் பொருளாதாரம் ஆபத்தான நிலையிலுள்ளதாக காண்பிக்கின்றன.

அத்துடன் 114 செலவினம் தொடர்பான குறிப்பாக மக்களுக்கான மானியங்களின் திறைசேரியூடாக அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இது தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கையில் ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மறைக்கப்பட்டிருந்த 1.15 றில்லியன் ரூபா பணத்தைக் கண்டுபிடித்துள்ளோம். இது கடன் சுமையை உருவாக்கியுள்ளதுடன் இவற்றைத் திருப்பிச் செலுத்த வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது.

மேலதிகமாக வருமானங்களைப் பெறுவதற்கான வழிவகைகளையும் அரசாங்கம் முன்மொழியவுள்ளதுடன் கடந்த அரசின் கடன்களை அடைப்பதற்கும் திட்டமிட்டுள்ளது.

வரவுசெலவுத்திட்டத்தில் இம்முறை துண்டு விழும் தொகை 5.9 வீதமாக இருப்பதற்கு திட்டமிட்டப்பட்டுள்ளது. கடந்த வருடம் இது 6.9 வீதமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது என்று அமைச்சர் தெரிவித்தார். (3)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 80 | 100 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 100 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 130 | 140-160 | 160 | 150 | 140 |
| தக்காளி | 40 | 30 | 20 | 30 | 40 | 60 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 60 | 40 | 45 | 60 | 80 | 60 |
| கரட் | 100 | 100 | 100 | 100 | 120 | 160 | 150 |
| பூசணி | 40 | 40 | 30 | 50 | 40 | 60 | 70 |
| புடோல் | 50 | 40 | 30 | 40 | 60-80 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 35 | 40 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 90 | 60 | 70 | 60 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 60 | 70 | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 150 | 100 | 100 | 140 | 120 | 120 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 50 | 50 | 100 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 60 | 70 | 80 | 100 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 80 | 100 | 60 | 120 |
| லீக்ஸ் | 80 | 150 | 85 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 60 | 60 | 100 | 70 |
| கறிமிளகாய் | 120 | 120 | 100 | 120 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 300 | 200 | 400 | 600 | 400 |
| போஞ்சி | 100 | 200 | 70 | 100 | 120 | 160 | 160 |
| கத்தரிதம்பள்ள | 60 | 30 | 50 | 60 | — | 80 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 15 | 30 | 50 | 40 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 60 | 100 | 60 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-35 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 120 | 200 | 100 | 120 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 40 | 80 | 80 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 20 | 40 | 20 | 40 | 60 | 60 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 40 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்ப்பாணத்தின் மீது முப்படைத்தாக்குதல் 125

விடுதலைப்புலிகள் வசப்படுத்திக் கொண்ட யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்தும்படி முப்படைகளையும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஏவியதைக் கண்டு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி அதிர்ச்சியடைந்தார். இலங்கைப் பிரச்சினையில் உலக நாடுகள் தலையிட்டு, போரை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை இராணுவம் நடத்திய முப்படைத் தாக்குதல், தமிழ்நாட்டில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்கள் பூண்டோடு அழிக்கப்படும் அபாயம் உருவாகி இருப்பதால், இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் ராஜீவ்காந்தியிடம் வலியுறுத்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். விமானம் மூலம் அவசரமாக டெல்லிக்குச் சென்றார்.

### எம்.ஜி.ஆர். கோரிக்கை

இலங்கை இராணுவத்தின் கொடூரத் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், தமிழர்கள் பெருமளவில் கொன்று குவிக்கப்படுகிறார்கள். இதனால் தமிழக மக்கள் ஆழ்ந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்து இருக்கிறார்கள் என்று பிரதமரிடம் எம்.ஜி.ஆர். தெரிவித்தார்.

இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, இலங்கைத் தமிழர்கள் மீது இராணுவம் நடத்தும் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ராணுவ நடவடிக்கை எடுத்திருப்பதால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று இலங்கைக்கு இந்தியா எச்சரிக்கை விடுத்திருப்பது பற்றிய விபரங்களை எம்.ஜி.ஆரிடம் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

கடுமையான வார்த்தைகளால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு பதிலை எதிர்பார்க்கிறோம் என்று ராஜீவ் காந்தி கூறினார்.

### அவசர ஆலோசனை

. இலங்கை நிலவரம் பற்றி ஆலோசிப்பதற்காக மத்திய மூத்த மந்திரிகளின் அவசரக் கூட்டத்தைப் பிரதமர் ராஜிவ் காந்தி கூட்டினார். கூட்டம் முடிந்ததும் பிரதமர் ராஜீவ் காந்தி ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது,

### உடனே நிறுத்துங்கள்

யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை ராணுவம் நடத்தும் வெறித்தனமான தாக்குதலை உடனே நிறுத்த வேண்டும். போரை நிறுத்த தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்தாக முடியும். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காண வேண்டும் என்பதில் இந்திய அரசு உறுதியாக இருந்தது. அதற்காக வேதனையைத் தாங்கிக்கொண்டு, பொறுமையாக சமரச முயற்சியில் ஈடுபட்டது. இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலை.

ஆனால் அந்த வாய்ப்புக்களை இலங்கை அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. ராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான திட்டங்களைத் தீட்டியது. அதற்காக சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது போலப் பேசி கால அவகாசத்தை எடுத்துக் கொண்டது.

இப்போது எடுத்துள்ள ராணுவ நடவடிக்கை நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டு எடுக்கப்பட்டதாகும்.

### ஒற்றுமை

இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டும் என்பதற்காக, அரசியல் ரீதியில் தீர்வு காண இந்தியா எவ்வளவோ ஈடுபட்டது.

ஆனால் இலங்கை ராணுவம் இப்போது யாழ்ப்பாணத்தின் மீதும், அங்கு வசிக்கும் பாதுகாப்பற்ற அப்பாவித்தமிழர்கள் மீதும், குண்டு வீச்சு நடத்தி போர் தொடுத்துள்ளது. ஏராளமான துயரங்களுக்கு வழி வகுப்பதுடன், இலங்கையின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் என்பது உறுதி.

### மீறல்

போரினால் ஏற்பட்டுள்ள கொடுமையான உயிரிழப்புகளால், விடுதலைப்புலிகள் எடுத்துக்கொண்ட உறுதிமொழிகள் மேலும் வலுப்பெற வழி உள்ளது. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை அந்த நாட்டு ராணுவமே கொன்று குவிப்பதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இலங்கை அரசங்கத்தின் போக்கு சர்வதேச மனித உரிமை சட்டத்தை மீறிவிட்டது.

எனவே இலங்கைத் தமிழர் பிரச்சனையில் உலக நாடுகள் தலையிட்டு, போரை நிறுத்தும் படி, இலங்கை அரசாங்கத்தை அறிவுறுத்த வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் ராஜீவ் காந்தி கூறியிருந்தார்.

### பட்டினிச்சாவு

யாழ்ப்பாணம் பகுதியில் காலை 6 மணி முதல் 4 மணி நேரத்திற்கு ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது. அந்த நேரத்திற்குள் பொது மக்கள் வீட்டுக்குத் தேவையான பலசரக்கு சாமான்களை வாங்கிக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

ஆனால் உணவுப் பொருட்கள் எங்கும் கிடைக்கவில்லை.



பயிற்சி முகாமொன்றில் சூட்டுப்பயிற்சியில் ஈடுபடும் தமிழீழத் தேசியத் தலைவர், கேணல் கிட்டு மற்றும் போராளிகள்

(தொடரும்)

# ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையின் அனைத்து நாடுகளும் இலங்கைக்கு ஆதரவு

## மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது எதிர்ப்பை வெளியிட்ட நாடுகளும் இன்று இலங்கைக்கு ஆதரவாக செயற்படுகின்றன என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

இந்த நிலையில் ஜனவரி 8ஆம் திகதிக்கு பின்னர் இலங்கையுடன் சர்வதேசத்தின் உறவுகள் விருத்தியடைந்துள்ளன என்று அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட பல நாடுகளின் ஆதரவு இலங்க்கைக்கு முழுமையாக கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னர் இலங்கைக்கு சீனா வழங்கிய உதவியை மறக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இந்தியாவுடன் சிறந்த உறவை அரசாங்கம் பேணி வருவதாகவும் சமரசிங்க தெரிவித்தார்.

மகிந்தவின் ஆடசியின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் இலங்கையின் பிரதி நிதியாக மகிந்த சமரசிங்கவே பங்கேற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு ஐ.நா.நோக்கிய ஈருருளிப்பயணம் பிரான்ஸை சென்றடைந்தது







7 ஆவது நாளாக தொடரும் தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு ஐ.நா. நோக்கிய ஈருருளிப்பயணம் நேற்று முன்தினம் நண்பகல் பிரான்ஸ் நாட்டை சென்றடைந்தது. ஜேர்மன் மனிதநேய செயற்பாட்டாளர்கள் ஈருருளிப்பயணத்தை பிரான்ஸ் செயற்பாட்டர்ளர்களிடம் Saargemund நகரில் பொறுப்புக் கொடுத்தார்கள்.

தொடர்ந்து Saargemund நகரபிதாவும் நாடாளுமன்ற உறுப்பினருமானவரின் உதவி முதல்வர்களுடன் அரசியல் சந்திப்பு நடைபெற்றது. இச் சந்திப்பில் தமிழின அழிப்புக்கு நீதி வேண்டும் என ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மனு கையளிக்கப்பட்டது. அத்தோடு பிரான்சில் அரசியல் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்கப்பட வேண்டும் எனவும், நடைபெற்ற கொலை தாக்குதலுக்கு விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இச்சந்திப்பில்பிரான்ஸ்உளளூர் ஊடகங்களும் வருகைதந்து, ஐ.நா. நோக்கிய ஈருருளிப் பயணம் தொடர்பாக பதிவுகளை மேற்கொண்டனர்.(இ)

# இன்று ஒரு தகவல்

## பெருந்தன்மையும் அதைப் பெறும் தன்மையும்

பெருந்தன்மை என்றால் என்ன?

நான் அறிந்தவரையில், நான் படித்தவரையில், நான் விசாரித்த வரையில் எனக்கு மேற்கண்ட சொல்லுக்கு மட்டும் நிறைவான விளக்கம் கிடைக்கவில்லை.

பின்னர் என்னை நானே கேட்டுக் கொண்டேன் கிடைத்தது.

மற்றவர் நலனில் அக்கறை கொள்வது, அவர்களை நம்முடைய நிலையில் வைத்துப் பார்ப்பது,மற்றவர்களின் தவறுகளை மறப்பது, மன்னிப்பது,தாரளாள மனப்பான்மையுடன் நடந்து கொள்வது, உதவுவது ஆகியவையே பெருந்தன்மையின் அடிப்படையான இலக்கணம்.

இவற்றில் விடுபட்டுப் போனவற்றை விபரமறிந்தவர்கள் தெரிவிக்கட்டும். நாம் மேலே செல்வோம்.

பெருந்தன்மை என்றால் என்ன என்பதை உணராத வரையில் அதன்படி நடக்க இயலாது அல்லவா?

இப்போது ஓரளவு தெளிவு பிறந்து விட்டது.

இவற்றை பின்பற்ற ஆரம்பித்து நாம் ஏன் மற்றவர்களின் இதயத்தில் குடியேற முயற்சி செய்யக் கூடாது?

இத்தகைய குணங்கள் இரத்தத்தில் ஊறி இருக்க வேண்டும். இனிமேல் பின்பற்றுவதாவது? என்பவர்களுக்கு ஒரு வார்த்தை அத்தனை தன்மைகளையும் ஒரே நாளில் பின்பற்ற முடியாது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் ஒவ்வொன்றாக கைக்கொள்ள முயலலாமே! மேலும்,

இவற்றை பின்பற்றுவதன் மூலம் ஏற்படக் கூடிய பலன்களை ருசி கண்டு விட்டீர்களானால் பிறகு உங்களை யாராலும் தடுக்க முடியாது என்று சொல்லப்படும் நிலைக்கு நீங்கள் உந்தப்பட்டு விடுவீர்கள்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நாம் நம் கொள்கைகள், நம் உடைமைகள் இன்னும் எல்லாவற்றையும் இழக்க வேண்டியதுதான் என்று ஒரு சிலர் வாதிடக் கூடும்.

அப்படி தியாகியாகவோ, சன்னியாசியாகவோ மாறிவிட வேண்டும் என்று பொருளல்ல.

ஓர் எல்லைக்குட்பட்டு மேற் கூறியவற்றை முடிந்தவரை பின்பற்றலாம்.

ஆனால் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். மிஞ்சப் போவது உயிரல்ல, நம்முடைய உடைமைகளும் அல்ல.


நற்பெயர் ஒன்றுதான்!

லேனா தமிழ்வாணன்

# ஊருக்குள் காட்டுயானை; பதற்றத்தில் பொதுமக்கள்

## அசமந்தப்போக்கில் அதிகாரிகள்

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி அமமன்குளம் மற்றும் கணேசபுரம் பிரதேசத்தில் தனிநபரொருவருக்குச் சொந்தமான நெற்களஞ்சியசாலை மற்றும் மக்களின் குடியிருப்புக்கள் என்பவனவற்றை காட்டுயானைகள் அடித்து சேதப்படுத்திய சம்பவங்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இடம்பெற்றுள்ளது.



வெல்லாவெளி அம்மன் குளம் பிரதேசத்தைச் சேர்ந்த சி.சீவரெத்தினம் என்பவருக்கு சொந்தமான நெற்களஞ்சியசாலையின் கதவுகளை உடைத்து அங்கிருந்த 850 இற்கு மேற்பட்ட நெல் மூட்டைகளை சேதப்படுத்திய காட்டு யானைகள் கணேசபுரத்தில் உள்ள மக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்து பாரிய சேதம் விளைவித்துள்ளது. (இ)

# புதன்கிழமை அரசியலமைப்பு நிபுணர்குழு எதிர்க்கட்சித் தலைவரை சந்திக்கின்றது

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்கள் கருத்தறியும் குழுவானது நாளை புதன்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பியுடன் விசேட சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளதாக குழுவின் தலைவரும் சட்டத்தரணியுமான லால் விஜேயதுங்க தெரிவித்தார்.

தற்போதுவரை பொது மக்களிடமிருந்து 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதி உட்பட பிரதமருடன் இது தொடர்பில் விசேட கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு 02 இல் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு தொடர்பிலான கருத்துக்களை உள்வாங்கும் குழுவினரின் தற்போதையசெயற்பாடுகள்தொடர்பில் குழுவின் தலைவரும் சட்டத்தரணியுமான லால் விஜேயதுங்க தெரிவித்துள்ளதாவது,

தேசிய அரசாங்கத்தினால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்கள் கருத்தறியும் குழுவின் ஆயுட்காலமானது இம்மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

இதுவரை பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் யோசனைகள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டதாக காணப்படுகின்றன.

அந்த வகையில்எமது குழுவானது அரசியலமைப்பு தொடர்பில் விசேட கலந்துரையாடல்களை முன்னெடுக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமாகிய இரா. சம்பந்தனை நாளை புதன்கிழமை பாராளுமன்றத்தில் வைத்து சந்திக்கவுள்ளது.

இந்த சந்திப்பின் போது எமது குழுவுக்கு தற்போது வரை கிடைத்த யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பிலும் பேசப்படும். புதிய அரசியலமைப்பு தொடர்பில் கருத்துக்களை உள்வாங்கும் எமது அமைப்பானது கடந்த ஜனவரி மாதம் உருவாக்கப்பட்டது.

அந்த வகையில்எமது குழுவினர் நாடளாவிய ரீதியில் உள்ள25மாவட்டங்களில்உள்ள அனைத்து மக்களிடமிருந்தும் புதிய அரசியலமைப்பு ஸ்தாபிப்பது தொடர்பில் கருத்துக் கணிப்புகளை பதிவு செய்துள்ளனர்.


ஏப்ரல் மாதமளவில் இது தொடர்பிலான அறிக்கையினை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



# சிறுவர் அரங்கம்

1378

# சாணக்கியரின் சீடன்!



....எங்கிருந்தால் என்ன? மாணிக்கம், மாணிக்கம் தானே? கால்நடைகளை மேய்க்கும் தொழிலானாலும் அதிலும் அவன் தலைமை தாங்கி தனித் தன்மையோடு விளங்கினான். ஊருக்கு வெளியே மற்ற பையன்களுடன் விளையாடும்போது இவன் மன்னனாகவும், மற்ற பையன்களைக் குடிபடைகளாகவும், பாவித்துக் கொண்டு விளையாடுவான். ராஜ விளையாட்டுக்காக, அரச வேஷம் ஏற்று, அரியணை என்று மண் மேட்டைச் சிங்காதனமாக எண்ணி அமர்ந்து சபை கூட்டி, குறை கேட்டு, நியாயம் வழங்கிய மாடு மேய்த்த சிறுவன், உண்மையிலேயே இந்தியாவை ஒரு குடைக் கீழ் ஆளும் சக்கரவர்த்தியாக விளங்கப் போகிறான் என்பதை அவன் தோழர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால், அதிர்ஷ்ட தேவதையின் முடிவு அதுவாகத்தான் இருந்தது.

ஒருநாள் இவர்கள் இப்படி மன்னன் குடிபடைகள் விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தபோது, அவ்வழியாக ஓர் அந்தணர் வந்தார்.

தட்சசீலத்தைச் சேர்ந்த வேதியரான அவர் சகல கலைகளிலும் விற்பன்னர். விஷ்ணு குப்தர் என்றும் இவருக்கு ஒரு பெயர் உண்டு. குழந்தைகளின் விளையாட்டைக் கண்டார். அவரது கூரிய பார்வை, மன்னனாக அமர்ந்து நீதி வழங்கும் சிறுவன் மீது பதிந்தது. அவனிடம் ஒளிந்துள்ள தகுதிகளையும், மேதைமையையும் உணர்ந்துக் கொண்டார். இந்தச் சிறுவனால் இந்த நாடு மகோன்னதமான நிலையை அடையப் போகிறது என்று தீர்க்கதரிசியான அவர், ஒரு தீர்மானத்துக்கு வந்தார. விளையாட்டு முடிந்ததும் சிறுவனை அழைத்து விசாரித்தார்.

பிறகு அவனுடன் வேடனிடம் சென்றார். அவனுக்கு அந்தக் காலத்து நாணயமான, "கார்ஷா" வில் ஆயிரம் கார்ஷாக்களை எண்ணிக் கொடுத்து, சந்திர குப்தனை விடு தலை விலைக்கிக் கொண்டு சென்று தம்முடன் தட்சசீலத்துக்கு அழைத்துப் போனார்.

மாடு மேய்த்துக் கொண்டிருந்த பையனுக்குச் சாணக்கியர் கல்வி கற்பித்தார். போர் முறைகளைச் சொல்லிக் கொடுத்தார். ஏழு எட்டு ஆண்டுகள் வரை இப்படிக் குருகுல வாசம் செய்து வந்தான் சந்திர குப்தன். இந்தச் சமயத்தில் பாரத நாடு எத்தகைய நிலையிலிருந்தது என்பதைத் தெரிந்துகொண்டால்தான், சந்திர குப்த மவுரியரின் பெயர், சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுவதற்கு எப்படித் தகுதி பெற்றது என்பது விளங்கும்.

கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டர் பாரதத்தின் மீது படையெடுத்து வந்திருந்தான். வட மேற்குப் பகுதி சிறு சிறு ராஜ்யங்களாகச் சிதறுண்டு கிடந்தது. இந்திய அரசர்களுக்குள்ளே ஒற்றுமை இல்லை. பிளவு, பலவீனம் இரண்டும் கிரேக்க மன்னன் அலெக்ஸாண்டருக்கு சாதகமாக ஆயின.

மகத சாம்ராஜ்யத்தை அப்போது ஆண்டவன் மகா பத்மநந்தன். தந்தையைக் கொன்று சிங்காதனமேறியவன். பெரிய வரன். ஆனால், தனது தீய செயலகளினால் மக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருந்தான். இவனது புதல்வர்களோ எட்டுப் பேர். இவர்களையும் சேர்த்து நவநந்தர்கள் என்று அழைத்தனர் மக்கள். நவநந்தர்களின் கொடுங்கோல் ஆட்சியினால் குமுறிக்கொண்டு இருந்தனர் குடிமக்கள்.

அலெக்ஸாண்டருடன் இந்திய மன்னர்கள் அடைந்த தோல்வியைக் கண்டு, சந்திர குப்தனின் நெஞ்சம் குமைந்தது. அதனால் வீரமும், துணிவும் கொண்ட அவர், "அந்நியர் களை இந்த மண்ணிலிருந்து விரட்டியே தீருவேன்" என்று சபதமெடுத்துக் கொண்டார். மாற்றானின் போர் முறைகளில் உள்ள சிறப்பியல்புகளை உன்னிப்பாகக் கவனித்தார். தம்மிடையே உள்ள குறைபாடுகளையும் உணர்ந்தார். ஆசிரியர் சாணக்கியரும், மாணவன் சந்திர குப்தனும் அறிவும் ஆற்றலுமாகச் செயறபட்டனர்.

(தொடரும்)

## அனைத்துலக மகளிர் தினம்



அனைத்துலக மகளிர் தினம் (International Women's Day) ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் திகதியன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அவையால் அறிவிக்கப்பட்ட இந்த நாளில் பல நாடுகளில் பொது விடுமுறை நாளாகும்.

1789 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க் கொடி உயர்த்தினர். ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெறவேண்டும் என்றும், வேலைக்கேற்ற ஊதியம், எட்டுமணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்றும் பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாரிஸ் நகரத் தெருக்களில் அணி திரண்டனர். புயலாகக் கிளம்பிய பூவையரை துரும்பாக எண்ணிய அந்நாட்டு அரசன் இடியென முழங்கி, இவர்களை என் அதிகாரம் கொண்டு அடக்குவேன் என்றும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வேன் எனவும் அறிவித்தான்.

ஆயிரக்கணக்கான பெண்கள் கூட்டம். அவர்களுக்கு ஆதரவாக ஆண்களும் ஆயிரக்கணக்கில் கலந்துகொள்ள உற்சாகம் கரைபுரள கோஷங்கள் வானைப் பிளக்க அரச மாளிகை நோக்கி ஊர்வலம் கொட்டும் மழையில் ஊர்ந்து சென்றது. அரச மாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்க் காப்பாளர் இருவரையும் திடீரென கூட்டத்தினர் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இதை எதிர்பாராத அரசன் அதிர்ந்து போனான். கோரிக்கைகளை கண்டிப்பாக பரிசீலிபபேன். உங்களுக்குச் சாதகமாக அறிவிப்பேன் என்று ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களைச் சமாதானப்படுத்தினான். இயலாது போகவும், அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான்.

இந்தச் செய்தி ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிட அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். தொடர்ந்து கிரீஸில் லிசிஸ்ட்ரடா தலைமையில் ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது.

இத்தாலியிலும் பெண்கள் இதுதான் சமயம் என்று தங்களது நீண்ட நாள் கோரிக்கையான வாக்குரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். பிரான்சில், ரஷயனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க், பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்தான். அந்நாள் 1848 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி ஆகும். அந்நாள்தான் அனைத்துலக பெண்கள் தினம் உலகெங்கும் அமைய ஒரு வித்தாக அமைந்தது.

03.2016
08

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1618 - ஜொஹரான்னெஸ் கெப்லர் கோள்களின் இயக்கங்களுக்கான மூன்றாவது விதியைக் கண்டுபிடித்தார்.
- 1761 - வடக்கு லண்டனில் ஹாம்ப்ஸ்டட் நகரில் நிலநடுக்கம் பதியப்பட்டது.
- 1782 - ஐக்கிய அமெரிக்காவின் ஒகைய்யோ மாநிலத்தில் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறிய 90 அமெரிகக இந்தியப் பழங்குடிகள் பென்சில்வேனியாவின் துணை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். கொல்லப்பட்டவரகளில் 68 பேர் குழந்தைகளும் பெண்களுமாவர்.
- 1817 - நியூயோர்க் பங்குச் சந்தை நிறுவன மயப்படுத்தப்பட்டது.
- 1911 - அனைத்துலக மகளிர் நாள் முதன் முதலாக டென்மார்க்கில் கொண்டாடப்பட்டது.
- 1917 - ரஷ்யாவில் பெப்ரவரிப் புரட்சி (பெப்ரவரி 13 - பழைய நாட்காட்டியில்) ஆரம்பம்.
- 1921 - ஸ்பெயின் பிரதமர் எடுவார்டோ டாட்டோ மாட்ரிட்டில் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜவாவில் ஜபபானியப் படைகளிடம் டச்சுப் படைகள் சரணடைந்தனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் ரங்கூன் நகரை ஜப்பான் கைப்பற்றியது.
- 1950 - சோவியத் ஒன்றியம் தன்னிடம் அணுகுண்டு இருப்பதாக அறிவித்தது.
- 1957 - எகிப்து சுயஸ் கால்வாயை மீண்டும் திறந்தது.
- 1965 - வியட்நாம் போர்: 3,500 அமெரிக்கப் படைகள் தென் வியட்நாமில் தரையிறங்கினர்.

### பிறப்புக்கள்

- 1879 - ஒட்டோ ஹான், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1968)
- 1886 - எட்வர்ட் கெண்டல், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1972)
- 1908 - பாலகங்காதர திலகர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர்.

### இறப்புக்கள்

- 1922 - சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர், ஈழத்துப் புலவர் (பி. 1854)
- 1923 - ஜொஹானஸ் வான் டர் வால்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1837)
- 2004 - அபூ அப்பாஸ், பாலஸ்தீன விடுதலை முன்னணி ஸ்தாபகர் (பி. 1948)
- 2015 - கி. பி. அரவிந்தன், ஈழத்து எழுத்தாளர், கவிஞர், ஈழ விடுதலைப் போராளி (பி. 1953)

### சிறப்பு நாள்

- அனைத்துலக மகளிர் தினம்

# தேசிய வருமானத்திற்கு மகிந்த ஆட்சியால் பாதிப்பு

## நிதியமைச்சர் ரவி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வருமானம் பெறக் கூடிய இடங்களில் இருந்து வருமானத்தை பெறாமையினால் கடந்த அரசின் காலத்தில் தேசிய வருமானத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**



அரசியல் தலையீடு இன்மையால் மதுவரி வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மதுவரி பரிசோதகர்கள் 46 பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எந்தவித அரசியல் தலையீடுமின்றி இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் அரச சேவையில் பிரவேசிப்பதற்கான சூழல் உருவாகியுள்ளது.

முன்னைய அரசின் பதவிக் காலத்தில் அரச சேவைக்கான நியமனங்கள் வழங்கப்பட்ட முறைமையை எவரும் அனுமதிக்க முடியாது.

அரச திணைக்கள நடவடிக்கைகளில் தலையிடுவது மக்கள் துரோகச் செயற்பாடெனக் கொள்ளலாம்.

உங்களின் அர்ப்பணத்துடன் வருமானத்தை அதிகரித்தால் வரி செலுத்தும் அப்பாவி மக்களின் வரிச்சுமை குறையும். அதனால் தான் உங்களுக்கு எவ்வித தலையீடுகளும் இன்றி வேலை செய்ய இடமளித்துள்ளோம்.

வரி செலுத்தும் மக்களின் சார்பில் எம்மால் அறவிடக்கூடிய ஒவ்வொரு சதத்தையும் அறவிட நாம் முயற்சி செய்வோமாக. வருமானம் பெறக்கூடிய இடங்களில் இருந்து வருமானத்தை பெற்றுக் கொள்ளாததே எமக்குப் பிரச்சினையாகும்.

2015 ஜனவரி 08 ஆம் திகதி எமக்கு அதிகாரம் கிடைத்த போது ராஜபக்ஷ அரசு ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 800 கோடி ரூபா கடன் செலுத்த வேண்டி இருந்தது.

இதனை நாம் செலுத்த வேண்டியுள்ளது. அவை அவ்வாறிருக்கும் போது உலக பொருளாதார நெருக்கடியில் அழுத்தம் வந்த போது பிரச்சினை மேலும் உக்கிரம் அடைந்தது.

அவ்வாறு கூறி நாமே மக்கள் மீது சுமையை ஏற்றவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயலர் கலாநிதி ஆர். எச். எஸ். சமரதுங்க, மதுவரி ஆணையாளர் நாயகம் எல். கே. ஜி. குணவர்த்தன உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (இ-5)

## ஆசிரியர் சங்கம் வரவேற்பு

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் நடை பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலையை மீளத்திறக்க நடவடிக்கை எடுக்க முன்வைத்த தீர்மானத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் வரவேற்கின்றது.

1947ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பலாலி ஆசிரியர் கலாசாலையானது 59ஏக்கர் நிலப்பரப்பில் 13 துறைகளைஉள்ளடக்கியமிகப்பெரிய ஆசிரியர் கலாசாலையாக இருந்தது.

ஆனால் யுத்த சூழ்நிலை காரணமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இணைக்கப்பட்டு பின்னர் திருநெல்வேலியில் ஒரேயொரு பாடநெறியுடன் மிகச்சிறிய நிலப்பரப்பிலேயே இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது.


பலாலி ஆசிரியர் கலாசாலை மீளவும் அதே நிலப்பரப்பில் திறக்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இந்த நிலையில் இன்றைய நல்லாட்சி அரசானது படையினர் வசமுள்ள பலாலி ஆசிரியர் கலாசாலையை மீளவும் வெகுவிரைவில் இயக்க முன்வரவேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார். (இ-5)



துன்னாலையில் நான்கு கால்களுடனும் இரண்டு அலகுகளுடனும் இரண்டு வாய்களுடனும் பிறந்த அதிசய கோழிக்குஞ்சு

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 655


சாபிலா





விபிசன்




விஜி



நிதுர்சன்




ரதி




நிஷாந்தன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யோஷிதவை வைத்து மகிந்தவுக்கு கடிவாளம்





லெப். யோஷித ராஜபக்ஷவை கடற்படையிலிருந்து இடைநிறுத்தும் அறிவிப்பு கடந்த வாரம் வெளியிடப்பட்ட போது, பொதுமக்கள் மத்தியில் அந்தச் செய்தி அவ்வளவாகப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கவில்லை.

ஏனென்றால் இது முன்கூட்டியே எதிர் பார்க்கப்பட்ட ஒரு நடவடிக்கைதான். ஆனால் சற்றுக்கால தாமதமாகவே நடந்தேறியிருக்கிறது.

கடற்படையில் பத்தாண்டுகள் வரை பணியாற்றிய லெப். யோஷித ராஜபக்ஷ இப்போது சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதால், அவருக்கான சம்பளமும், ஏனைய கொடுப்பனவுகளும் கூட நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவர், கடுவெல நீதிமன்றத்தில் ஒவ்வொரு தவணையின் போதும், பிணையில் விடுவிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகள் நீதிமன்றினால் நிராகரிக்கப்படுகின்றன.

இதனை எதிர்த்து கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவும் இழுபறிக்குள்ளாகியிருக்கிறது. இந்தநிலையில் தமது கைது அடிப்படை உரிமை மீறல் என்று யோஷித ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்திலும் மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.

இந்த மனுக்களில் ஏதாவது ஒன்றின் மூலம் அவருக்குப் பிணை கிடைத்தாலும் கூட கடற்படைத் தளபதியின் முன் அனுமதியின்றி கடற்படைத் தளங்களுக்குள் நுழைய முடியாது என்று கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்திருக்கிறார்.

ஒரு காலகட்டத்தில் இலங்கைக் கடற்படையில் இருந்த எவருமே அனுபவித்திராத சுதந்திரம், வசதி வாய்ப்புகளுடன் திரிந்த யோஷித ராஜபக்ஷ, இப்போது சிறைக்குள் தள்ளப்பட்டிருப்பது மாத்திரமன்றி, கடற்படையிலிருந்தும் இடைநிறுத்தப்படும் நிலைக்கு உள்ளாகியிருக்கிறார்.

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அது நிரூபிக்கப்பட்டால், கடற்படையில் இருந்து லெப்.யோஷித ராஜபக்ஷ நிரந்தரமாகவே நீக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் ஓய்ந்து விடாது. ஏனென்றால் போதிய தகைமைகளின்றி கடற்படையில் சேர்ந்து கொண்டார், கடற்படைத் தளபதியின் முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல், பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார் என்ற இரண்டு குற்றச்சாட்டுகளையும் லெப். யோஷித ராஜபக்ஷ எதிர்கொண்டிருக்கிறார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஏற்கனவே கடற்படைத் தளபதிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தச் சூழலில்தான், லெப்.யோஷித ராஜபக்ஷவை, இடைநிறுத்துமாறு பாதுகாப்பு அமைப்பு மூலம் கடற்படைத் தலைமைக்கு அறிவுறுத்தப்பட்டது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கேர்ணல் சம்மி குமாரரத்ன, லெப்.கேர்ணல் பிரபோத வீரசேகர உள்ளிட்ட இராணுவப் புனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்பட்டவுடனேயே, அவர்களை சேவையிலிருந்து இடைநிறுத்தியது இராணுவம், அவர்களுக்கு சம்பளத்தையும் வழங்கவில்லை.

இந்த விவகாரத்தை அரசியலாக்கிய மகிந்த ராஜபக்ஷ, இடைநிறுத்தப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு தாமே சம்பளம் கொடுப்பதாக அறிவித்திருந்தார். அதனை அவர் தொடர்ந்து வழங்குகிறாரா இல்லையா? என்று தெரியவில்லை.

ஆனால், அரசாங்கத்தினால் கைவிடப்பட்ட படையினரை தாம் காப்பாற்றுவதாக ஒரு தோற்றப்பாட்டை அவர் உருவாக்கியிருக்கிறார். இப்போது, அதே மகிந்த ராஜபக்ஷ தனது மகனுக்கு தானே சம்பளத்தைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆனாலும் லெப்யோஷித ராஜபக்ஷ சிறையில் இருப்பதாலும், அவருக்கென்று தனியான குடும்பம் இல்லாததாலும், அவ்வாறு சம்பளம் கொடுத்து அரசியலாக்க அவரால் முடியாது போயிருக்கிறது.

எவ்வாறாயினும் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஒரு மாதம் நெருங்கிய பின்னர்தான் அவரை இடைநிறுத்தும் முடிவைக் கடற்படை எடுத்திருக்கிறது.

கடற்படைச் சட்டங்களின் கீழ் அவர் மீது இந்த நடவடிக்கையை எடுக்க கிட்டத்தட்ட நான்கு வாரங்கள் சென்றிருக்கின்றன. இது அதிகபட்ச பொறுமையைத்தான் காட்டியிருக்கிறது.

ராஜபக்ஷ குடும்பத்தின் உறுப்பினர் என்பதால் கடற்படை இந்தப் பொறுமையை கடைப்பிடித்ததா அல்லது அரசியல் ரீதியாக அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தடைகள் தடங்கல்கள் இருந்ததா என்று தெரியவில்லை.

எனினும், இதுபோன்ற நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதை, மகிந்த ராஜபக்ஷவும், லெப்.யோஷித ராஜபக்ஷவும் முன்னரே அறிந்திருந்தனர்.

அதனால்தான், கடந்த ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தவுடன், லெப்.யோஷித ராஜபக்ஷ பதவி விலகல் கடிதத்தை கையளித்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக, 2015 ஜனவரி 09ம் திகதி அதிகாலையில் யோஷித ராஜபக்ஷ சேவையில் இருந்து விலகும் கடிதம் கடற்படைத் தளபதிக்கு அனுப்பப்பட்டது.

ஆனால், அந்த விலகல் கடிதம் அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்தக் கடிதம் அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, கடற்படையினால் துறைசார் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னரே, 2010 ஆம் ஆண்டு அவருக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டு தண்டனையும் விதிக்கப்பட்டது.

எனவே லெப்.யோஷித ராஜபக்ஷவின் இடைநிறுத்தம் நிரந்தரமானதா என்பதை தீர்மானிக்கப் போவது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுவதில் தான் தங்கியிருக்கிறது.

யோஷித ராஜபக்சஷவைக் கைது செய்த தன் மூலம், அரசாங்கம் ராஜபக்ஷ குடும்பத்தின் மீது கைவைக்க முடியாது, கைவைக்காது என்று அரசியல் மட்டங்களில் பரவலாக இருந்து வந்த ஒரு கருத்து உடைக்கப்பட்டது.

அதேவேளை, இந்தக் கைது ஒரு அடையாள நடவடிக்கை தான். ஒரு வாரமோ இரண்டு வாரங்களோ கழித்து விடுவித்து விடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும், யோஷித ராஜபக்ஷ மீதான விசாரணையின் பிடி இறுக்கப்பட்டு, பிணையில் வெளிவர முடியாமல் திணறுகின்ற நிலையைப் பார்க்கின்றபோது, ராஜபக்ஷ குடும்பத்துக்கான ஒரு எச்சரிக்கையாகவே இது பயன்படுத்தப்படுகிறது போலத் தெரிகிறது.

பல்வேறு ஆட்கடத்தல்கள், கொலைகள், காணாமற்போதல்கள் உள்ளிட்ட குற்றச் செயல்களில், தொடர்புபட்டுள்ளதாக ராஜபக்ஷ குடும்பத்தினரின் பெயர்கள் தாராளமாகவே அடிபடுகின்ற நிலையில், அவர்களும் சிறைக்கம்பிகளை எண்ணும் நிலை தவிர்க்க முடியாது என்று எச்சரிக்கும் வகையில் தான் கைது அமைந்திருந்தது.

அதைவிட, தற்போதைய அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் மகிந்த ராஜபக்ஷ தீவிரம் காட்டிய போது தான், யோஷிதவின் கைது இடம்பெற்றது.

இதற்குப் பின்னர், மகிந்த ராஜபக்ஷ அவ்வப்போது எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும், தீவிரத் தன்மையைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்.

இது ராஜபக்ஷ குடும்பத்துக்கு யோஷித ராஜபக்ஷவின் கைது பீதியை ஏற்படுத்தி விட்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது.

யோஷிதவை வைத்து மகிந்தவுக்கு மூக்கணாங் கயிறு போடுவதில் அரசாங்கம் வெற்றியைக் காணுமேயானால், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் குறுகிய காலத்துக்குள் கைது செய்யப்படுவது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

அதேவேளை, யோஷிதவின் கைதுக்குப் பின்னரும் மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிவாளம் போட முடியவில்லை என்று அரசாங்கம் உணர்ந்தால், கூடிய விரைவில் ராஜபக்சஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வெலிக்கடைச் சிறையின் வாசத்தை நுகர வேண்டிய நிலை ஏற்படலாம்.

# எட்கா உடன்படிக்கை குறித்து அரசிற்கு மகிந்த எச்சரிக்கை

இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (எட்கா) தொடர்பில் இலங்கை அரசாங்கம் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவுடனான "எட்கா" ஒப்பந்தத்தை படிப்படியான முறையில் முன்னெடுக்க வேண்டும் என்றும், வர்த்தக சமூகத்தினர் மற்றும் நிபுணர்களின் கருத்துக்களைப் பெறுவதற்கும், சாதாரண மக்கள் அதுபற்றி தீர்மானம் எடுப்பதற்காகவும் குறித்த ஒபபந்தத்தின் வரைபு பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்படவிருக்கும் "எட்கா" ஒப்பந்தம் தொடர்பில் நேற்று முன்தினம் விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தமானது படிப்படியாகவே நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். முதற் கட்டமாக இரு நாட்டுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் காணப் படும் பிரச்சினைகளை அமுல்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகள் நீக்கப்பட வேண்டும்.

இரு நாட்டுக்கும் இடையிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு தற்பொழுது உக்கிரமடைந்திருக்கும் இரு நாட்டு மீனவர் பிரச்சினை இக்கால கட்டத்தில் தீர்க்கப்பட வேண்டும்.

அத்துடன் இலங்கைக்கு திருப்தியளிக்கும் வகையில் இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை சில வருடங்களுக்கு கடைப்பிடித்த பின்னர் அடுத்த கட்டமாக "எட்கா" ஒப்பந்தத்தை நோக்கி இலங்கை செல்ல முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவினால் உத்தியோகபூர்வமற்ற வகையில் வெளியிடப்பட்டிருக்கும் "எட்கா" ஒப்பந்தம் தொடர்பான வரைபில் எந்தவிதமான விரிவான தகவல்களும் இல்லை.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படும் வர்த்தக உறவுகள் முக்கியமானவை. வர்த்தக ஒப்பந்தம் என்பது எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பான நீண்டகால ஆய்வுகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1998 ஆம் ஆண்டு இந்தியாவுடன் செய்துகொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை அமுல்படுத்தும்போது எதிர்கொண்ட பிரச்சினைகளை நாம் பாடமாகக் கொள்ள வேண்டும்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கு அப்பால் இலங்கை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை தொடர்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.


இவ்வாறான நிலையில் "எட்கா" ஒப்பந்தத்தில் ஒவ்வொரு விடயமும் தெளிவாக இருக்க வேண்டும்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் போது எமக்குக் கிடைத்த படிப்பினையை நாம் அனுபவமாகக் கொள்ள வேண்டும்.

எனவே, அரசாங்கம் அவசர அவசரமாக ஒருசில விடயங்களை முன்வைத்து விட்டு பின்னர் அதுபற்றி பேசலாம் எனக் கூறாமல் சகலவற்றையும் திட்டமிட்டு ஒப்பந்தத்தல் உள்ளடக்க வேண்டும்.

தற்பொழுது 4 ஆயிரம் மில்லியன் அமெரிக்க பெறுமதியான இந்திய பொருட்களுக்கு நாம் சந்தையை வழங்குகின்றோம்.

இந்தியாவிலிருந்தான ஏற்றுமதி மற்றும் அந்நாட்டுக்கு நாம் அனுப்பும் பொருட்களின் பெறுமதி என்பவற்றில் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையில் மேலும் தெரிவித்தார். (இ-5)


யர்ழ்ப்பாணம் குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இத் திருவிழாவில் நேற்று முன்தினம் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் தலைமையில் அருட்பணி ஜெபரெட்ணம் அடிகளார் மற்றும் அருட்பணி ஸ்ரோபன் அடிகளார், பங்குத்தந்தை அருட்பணி அன்ரனிபாலா அடிகளார் ஆகியோர் ஒன்றிணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இந்த ஆலய திருவிழாவுக்கு கடல்மார்க்கமாக ஏராளமான யாத்திரிகர்கள் சென்று கலந்துகொண்டனர். (படங்கள்:- பொ.சோபிகா)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா:46 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/ அரசதொழில்<br>தொ.இ: B/3961 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc, SLAS/ அரசதொழில்<br>தொ.இ: G/4636 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 49 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDM/தனியார் தொழில்<br>தொ.இ: B/3962 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 94 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA/முன்பள்ளி ஆசியர்<br>தொ.இ: G/4650 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 7<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்MBBS/அரசதொழில்<br>தொ.இ: B/3964 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 38<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும<br>தொ.இ: G/4665 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 37செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/3966 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 33 செவ் 8 இல்<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்:கணக்காளர்/ பிரான்ஸ் குடியுரிமை<br>தொ.இ: G/4668 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


## சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முள்ளியில் பொலிஸார்

சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக முள்ளிப் பகுதியில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

முள்ளிப்பகுதியூடாக சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் கசிப்பு விநியோகம் என்பன இடம்பெற்று வருவதனால் இதனைக் கட்டுப்படுத்துவதற்காக முள்ளி ஆலடிச் சந்திப் பகுதியில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

முள்ளிப் பகுதியில் நிரந்தர காவலரண் ஒன்றினை அமைத்து இரவு-பகலாக பொலிஸார் கடமையில் ஈடுபட்டால்வடமராட்சியில் இருந்து முள்ளி வழியாகப் பயணம் செய்யும் மக்கள் அச்சமின்றிப் பயணிக்க முடியும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (இ-5-60)

## சுரங்கம் தோண்டிய பத்துப் பேர் கைது

சட்டவிரோதமான முறையில் சுரங்கம் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 10 பேர் நவிதிகல - தோலஸ்வல பகுதியில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஹவத்தை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் இதன் போதுசுரங்கம்தோண்டப் பயன் படுத்தப்பட்ட உபகரணங்களும கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக இரத்தினபுரிமாணிக்கக்கல் மற்றும் சுவர்ணாபரண அதிகார சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

## சுரங்கத்தில் வாயுக் கசிவால் மூச்சுத் திணறி 12 பேர் பலி!

சீனாவின் பைஷாங்க் நகரில், ஷாங்ஷ் என்ற பகுதியில் நிலக்கரி சுரங்கத்தில் நேற்று திடீரென வாயு கசிந்ததில் 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஷாங்ஷ் என்ற பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயற்பட்டு வருகின்றது. இந்த சுரங்கத்தில் 700இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென வாயுக் கசிவு ஏற்பட்டது. இதில் மூச்சுத் திணறி 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். நிலக்கரி சுரங்கத்தில் 316 பேர் காப்பற்றப்பட்டுள்ளனர். (இ-5)

## கஞ்சாவுடன் மூவர் கைது!

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவில் கஞ்சாவுடன் நடமாடிய மூன்று பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த கைது நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.குறித்த சந்தேக நபர்கள் கஞ்சாவுடன் நடமாடுவதாக பொது மக்களிடமிருந்து கிடைத்த தகவலை தொடர்ந்து குறித்த பகுதிகளுக்குச் சென்று சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டு ஒருவாரத்தில் சிரியாவில் 135பேர் பலி

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் சண்டையிட்டு வந்தனர். ஜனாதிபதிக்கு ஆதரவாக ரஷ்யப் படைகள் சிரியாவில் வான்வழி தாக்குதல்களை, நடத்தி வந்தன. 5 ஆண்டுகளாக நடந்து வந்த இந்த உள்நாட்டுப் போரில் 2 1/2 இலட்சம் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பல்வேறு நாடுகளுக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இந்த நிலையில், ஐ.நா. மற்றும் சர்வதேச நாடுகளின் கடும் முயற்சியால் சமாதான பேச்சுவார்த்தையின் மூலம் கடந்த மாதம் 27 ஆம் திகதி சிரியாவில் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டது. இருந்தபோதிலும் போர் நிறுத்தம் மீறப்படுவதாக அரசு தரப்பும் கிளர்ச்சியாளர்கள் தரப்பும் மாறி மாறி குற்றம் சாட்டி வருகின்றன.

இந்தநிலையில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த ஒரு வார காலத்தில் நடந்த வான்தாக்குதல்கள் மற்றும் வன்முறை சம்பவங்களில் 135 பேர் கொல்லப்பட்டிருப்பதாக சிரியாவின் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. அப்பாவி மக்கள் 32 பேரும், கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் தரப்பில் 45 பேரும் பலியாகியுள்ளனர்.

அதேபோல் சிரிய இராணுவவீரர்கள் 25 பேரும், மக்கள் பாதுகாப்பு இயக்கத்தை சேர்ந்தவர்கள் மற்றும் அல்-கொய்தாவின் இணை இயக்கமான நுஸ்ரா இயக்கத்தை சேர்ந்தவர்களும் உயிரிழந்துள்ளனர். (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

116

## கருணாநிதியின் அனல் பறக்கும் வசனத்துடன் 'மந்திரிகுமாரி'

### எல்லிஸ் ஆர்.டங்கன்

அம்பிகாபதி, சகுந்தலை, மீரா ஆகிய படங்களை இயக்கிய எல்லிஸ் ஆர்.டங்கன், டைரக்ட் செய்தார். அவருக்கு உதவியாளராக கே.சோமு (பிற்காலத்தில் பிரபல டைரக்டராக உயர்ந்தவர்) பணியாற்றினார்.

பாடல்களை மருதகாசி, கா.மு.ஷெரீப் ஆகியோர் எழுத, ஜி.ராமநாதன் இசையமைத்தார்.


கதாநாயகனுக்கான எல்லா பாடல்களையும் ஜி.ராமநாதனே பின்னணியில் பாடினார்.

பொன்முடி 1950 பொங்கல் தினத்தில் வெளிவந்தது. இது ஒரு வெற்றிப்படம். அன்றைய காலகட்டத்தில், காதல் கட்டங்கள் மிக நெருக்கமாக இருந்ததாக பரபரப்பாகப் பேசப்பட்டது.

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பான மந்திரிகுமாரி மெகாஹிட் திரைப்படமாகும். இதில் தி.மு.க தலைவர் மு.கருணாநிதி எழுதிய வசனங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

கருணாநிதி எப்படி பட உலகுக்கு வந்தார் என்பதை இப்போது பார்ப்போம்.

திருவாரூரில் இருந்து 15 மைல் தூரத்தில் உள்ள திருக்குவளை கிராமத்தில் 1924 ஜூ3 ஆம் திகதி பிறந்த கருணாநிதி, இளமையிலேயே எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் மிக்கவராகத் திகழ்ந்தார். அவருடைய நாடகங்களில் ஒன்றைப் பார்த்த ஈ.வெ.ரா. பெரியார், அவரைப் பாராட்டியதோடு, ஈரோட்டியிடிருந்து வெளிவந்த கொண்டிருந்த குடியரசு வார இதழின் துணை ஆசிரியராக நியமித்தார்.



1949 ஆம் ஆண்டு தி.மு.கழகத்தை பேரறிஞர் அண்ணா தொடங்கிய போது, அதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட கருணாநிதி, பின்னர் தி.மு.க. தலைவர்களில் ஒருவராக உயர்ந்தார்.

### திரை உலகப் பிரவேசம்

இந்த சமயத்தில், கோவை ஜீபிடர் நிறுவனத்தினர் தயாரித்த ராஜகுமாரி படத்துக்கு வசனம் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. இந்தப் படத்தில் தான் எம்.ஜி.ஆர். முதன் முதலாகக் கதாநாயகனாக அறிமுகம் ஆனார்.

இந்தப்படத்தை டைரக்டர் செய்தவர் ஏ.எஸ்.ஏ.சாமி. அக்காலத்தில் இவர் புகழ் பெற்ற டைரக்டராகவும், வசன கர்த்தாவாகவும் விளங்கினார். ராஜகுமாரியின் வசனங்களின் பெரும் பகுதியை எழுதியவர் கருணாநிதி தான். என்றாலும் வசனம் ஏ.எஸ். ஏ.சாமி என்றும், உதவி மு.கருணாநிதி என்றும் படத்தில் டைட்டில் கார்டு போட்டார்கள்.


கருணாநிதிக்கு தொடர்ந்து சினிமா வாய்ப்புக்கள் வரத் தொடங்கின. மனைவியுடன் கோவையில் குடியேறி, அபிமன்யு படத்துக்கு வசனம் எழுதினார்.

கருத்தாளம் மிக்க வசனங்கள் எழுதியும், படத்தில் வசனகர்த்தாவாக அவர் பெயர் இடம்பெறவில்லை.

(தொடரும்)

# எட்கா உடன்பாடு ரணிலை வீட்டுக்கு அனுப்புமா?

உள்நாட்டு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வர இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்பதை ஜே.ஆர். புரிந்து கொண்டார்.இதனால் இந்தியாவை தனது சூழ்ச்சி வலைக்குள் வீழ்த்துவதென ஜே.ஆர்.தீர்மானித்தார். இந்தியாவால் வளர்த்தெடுக்கப்பட்ட விடுதலைப் புலிகளை இந்தியாவே அழிக்க வேண்டும் என்பதற்காகவே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.



**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**

இந்தியா - இலங்கை இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் இவை தொடர்பாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் போன்ற அரசியல்வாதிகளின் பார்வைகள் என்ன என்பது தொடர்பாக ஆராயப்படுகிறது.

இவர்களது கருத்துக்கள் உத்தியோகபூர்வ ரீதியாகவும் உத்தியோகபூர்வமற்ற வகையிலும் எவ்வாறான முரண்பாடான விடயங்களை உள்ளடக்கியுள்ளன என்பதை இங்கு நோக்க முடியும். ஆகவே, குறுகிய அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காகவே அரசியல்வாதிகள் உடன்படிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்பது இங்கு தெளிவாகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகத்தின் ஆசிரியர் சேகர் குப்தா , 2008 இல் நேர்காணல் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இந்த நேர்காணலின் போது, 1987 இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமானது இனப்பிரச்சினைக்குச் சிறந்தொரு தீர்வு எனவும் 13 ஆவது திருத்தச்சட்டமும் சிறந்த தொரு தீர்வாகக் காணப்படுவதாகவும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இவற்றை முன்னுணர்ந்து 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தமை வரவேற்கத்தக்க விடயம் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வருகைதந்தமை தொடர்பாகவும் சேகர் குப்தாவிடம் மகிந்த ராஜபக்ஷ சுருக்கமாக விளக்கியிருந்தார்.

'இந்திய அமைதி காக்கும் படையை இலங்கையலிருந்து மீண்டும் இந்தியா அழைக்க வேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ கோரிக்கை விடுத்தமை தவறானது. இதனால் இந்திய-இலங்கை உறவில் விரிசல் ஏற்பட்டது. இந்திய அமைதி காக்கும் படையினரால் ஆற்றப்பட்ட சேவைகளுக்கு இலங்கையர்கள் நன்றி செலுத்த வேண்டும். இலங்கையின் ஒருமைப்பாட்டிற்காக இந்திய அமைதி காக்கும் படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். இந்தியப் படையினர் இலங்கையல் மேலும் சிறிது காலம் பணியாற்றுவதற்கு அனுமதித்திருந்தால், நாங்கள் வெற்றியைப் பெற்றிருப்போம். ஆனால் தென்னிலங்கை வாழ் தீவிரவாதிகளின் அழுத்தம் காரணமாக பிரேமதாஸ, இந்திய அமைதி காக்கும் படையினரை அவர்களது நாட்டிற்குத் திருப்பி அனுப்பினார்' என மகிந்த ராஜபக்ஷ 2008 இல் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகத திற்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.

இதே மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் 1989 மே 26 அன்று இலங்கை நாடாளுமன்றில் ஆற்றிய உரையின் போது, 1987 இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை மற்றும் இந்திய அமைதி காக்கும் படை போன்றவற்றை விமர்சித்திருந்தார்.

இவர் தனது நாடாளுமன்ற உரையில் 'இந்திய அமைதி காக்கும் படையினர் இங்கு கொண்டுவரப்பட்டதால் இந்த நாடு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. வடக்கில் வாழும் மக்களை அடக்குவதற்காகவும், தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களைக் கொல்வதற்காகவும், இவர்களது அடிப்படை உரிமைகளை மீறுவதற்காகவுமே இந்திய அமைதி காக்கும் படையினர் இங்கு கொண்டு வரப்பட்டனர். ஜூலையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்பாட்டின் பிரகாரம் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் குவிக்கப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினரே தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட பாலியல் வன்புணர்வு மற்றும் ஏனைய மீறல்களுக்குப் பொறுப்பாளிகளாவர் என அனைத்துலக மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது' என சுட்டிக்காட்டியிருந்தார்.

மகிந்த தனது உரையின் போது, வடக்கு மற்றும் கிழக்கில் அப்பாவிப் பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்படுவதற்காகவே இந்திய அமைதிப் படையினர் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் குற்றம் சுமத்தியிருந்தார்.

இவரது இந்தக் கூற்றை மேலும் வலுப்படுத்துவதற்காக, 'இந்தியப் படையினர் அமைதி காக்கும் படையினர்கள் அல்ல. அவர்கள் பாலியல் படையினர்' என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ: ஆம், இந்திய அமைதி காக்கும் படையினர் இந்தியப் பாலியல் படையாக மாறியுள்ளனர். அவர்கள் பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்குகின்றனர். எதிர்காலத்தில் வடக்கில் இந்தியர்களை உருவாக்குவதற்காகவே பெண்களைப் பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்குகின்றனர். வடக்கில் மக்கள் கொல்லப்படுகின்றனர். பெண்கள் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். ஆனால் தெற்கில் என்ன நடக்கிறது எனப் பாருங்கள். வடக்கில் இடம்பெறும் இவ்வாறான மீறல்களுக்கு எதிராக தென்னிலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றுபடும் போது அவர்கள் ரயர்கள் இடப்பட்டு எரிக்கப்படுகிறார்கள்" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

(தொடரும்)

யானை சேற்றில் அமிழும் போது தவளையும் எட்டி உதைக்கும்.

-மனுநீதி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கைதிகளின் பரிதாபம் காணாத நீதியோ!

இராமன் காடேகினான் என்ற செய்தி கேட்டதும் புத்திர சோகம் தாள முடியாமல் தசரத மன்னன் உயிர் துறந்தான்.

அந்திம கிரியை செய்ய வேண்டிய இராமன் காடேகியதால் தசரதனின் உடல் பரதனின் வருகைக்காக காத்திருக்கிறது.

ஆள வேண்டியவன் காடுறைந்தான்; ஆண்ட மன்னன் உயிர் துறந்தான். அயோத்திமாநகர் துன்பத்தில் வீழ்ந்தாலும் மன்னன் தசரதனின் அருகில் எவரும் இல்லை.

மன்னனாக இருந்த போது தசரதனுக்கு முன்னும் பின்னுமாக ஓடித்திரிந்தவர்கள் செத்த மாட்டில் இருந்து உண்ணி கழன்றது போல் ஒவ்வொருவராக வெளியேறிவிட்டனர்.

முடிசார்ந்த மன்னருக்கும் இதுதான் முடிவு என்பது நியதியாயிற்று. எல்லாம் இருக்கும் இடத்தில் இருக்கும் போதுதான் என்பதற்கு தசரத மன்னனின் வாழ்வு மட்டுமல்ல; எங்கள் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வும் நல்ல உதாரணம்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மனைவியின் தந்தை ஏரம்பமூர்த்தி ஆசிரியர் அவர்கள் கிளிநொச்சியில் காலமானபோது ஏகப்பட்டவர்கள் ஏரம்பமூர்த்தி மாஸ்டரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர்.

குறிப்பாக அரசியல் தலைவர்கள் கண்ணீர் விடாக் குறையாக ஏரம்ப வாத்தியாரின் அருகில் நின்று அஞ்சலி செலுத்தினர். எல்லாம் தலைவர் பிரபாகரனின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வேண்டும் என்ற நோக்கில் நடந்தவைதான்.

2009-ம் ஆண்டு மே 18-ம் திகதிக்குப் பின்னர் விடுதலைப்புலிகள் தோற்று விட்டனர் என்ற செய்திக்குப் பின்னர் வன்னியில் இருந்து வெளியேறிய பிரபாகரனின் தந்தையார் வேலுப்பிள்ளை, தாயார் பார்வதி இவர்களை பராமரிப்பதிலும் உறவு என்று சொல்வதிலும் பலரும் எட்ட நின்று கொண்டனர்.

வயோதிபர்கள் என்றும் கூட பார்க்காத பேரினவாத அரசு, வேலுப்பிள்ளை தம்பதியரை சிறையில் அடைத்தது.

இவர்களை விடுதலை செய்யுங்கள் என்று தமிழ் அரசியல்வாதிகள் எவரும் கேட்டிலர். பிரபாகரனின் மாமனார் இறந்தபோது, பாடாய்க் கிடந்தவர்கள் பிரபாகரனின் பெற்றோர் சிறையில் அடைபட்ட போது ஏன்? என்று கேட்டிலர். ஆக, சிறையில் வேலுப்பிள்ளை இறந்தபோதுதான் பார்வதி அம்மையாருக்கு விடுதலை கிடைத்தது.

சுருங்கக்கூறின் தன் மனைவி பார்வதிக்கு சிறையிலிருந்து விடுதலை கொடுத்தவர் வேலுப்பிள்ளை என்று கூறிக்கொள்ளலாம்.

வேலுப்பிள்ளை அவர்களின் இறுதிக்கிரியைகள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இருந்ததால் நடந்து முடிந்தது.

சிறையில் இருந்து விடுதலை பெற்ற பார்வதி அம்மையாருக்கு மருத்துவர் மயிலேறும்பெருமாள் இருந்ததால் வைத்தியசாலையில் வைத்துப் பராமரித்தார். இல்லை என்றால் எல்லாம் அம்போதான்.

தலைவர் பிரபாகரன் இருந்தபோது பிரபாகரனை ஒருமுறையேனும் சந்திக்கத் துடித்தவர்கள் - சந்தித்தவர்கள் வல்வெட்டித்துறையில் நடந்த பிரபாகரனின் பெற்றோர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவேயில்லை. இதுதான் எங்கள் வழக்கமும் பழக்கமும் என்பதால்,

சிறைகளில் வாடித் துடிக்கும் எங்கள் தமிழ் அரசியல் கைதிகளுக்காக குரல் கொடுக்க எவருமில்லாமல் போயிற்று.

இதே தமிழ் அரசியல் கைதிகள் இருக்க வேண்டிய இடத்தில் இருந்திருந்தால் அவர்களின் பிறந்தநாளுக்கும் பாராளுமன்றத்துச் சிற்றுண்டிச்சாலையில் கேக் செய்து அனுப்பப்பட்டிருக்கும். என்ன செய்வது? விடுதலை என்ற பொதுநலத்துக்காக புறப்பட்டவர்கள் இன்று தனியன்களாக துன்பப்படும்போது நாம் பேசாமல் இருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

# பாதுகாப்பு குறித்த பல பிரச்சினைகளுக்கு இலங்கை பெண்கள் முகம் கொடுக்கின்றனர்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு சமூகம் அதன் பெண்களுக்கு வழங்கும் அங்கீகாரம் அச்சமூகத்தின் அபிவிருத்தித் தரத்தின் அளவுகோலாகக் கருதப்படுகிறது.

"தொட்டிலை ஆட்டும் கரங்கள் உலகை ஆளும்" என்ற பழமொழி இலங்கை சமூகம் அதன் வரலாறு நெடுகிலும் பெண்களின் கௌரவமான சமூக அந்தஸ்தைப் புரிந்து வைத்திருப்பதை எடுத்துக்காட்டுகிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலைமையை நாம் எடுத்து நோக்கினால் கடுமையான பொருளாதார மற்றும் சமூக மாற்றத்தின் பல்வேறு யுகங்கள் கடந்துள்ள நிலையில், பெண்களின் வகிபாகம் குறித்து பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். உலகில் முதலாவது பெண் பிரதமர் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைப் பெற்ற நாடு என்றபோதிலும், இந்த நாட்டின் பெண்களும் பெண் பிள்ளைகளும் இன்னும் அவர்களது பாதுகாப்புக் குறித்த பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இலங்கையில் பெண்கள் புலம்பெயர் தொழிலாளர்களாகவும் ஆடைத் தொழிற்துறை ஊழியர்களாகவும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களாகவும் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய மூலமாக உள்ளார்கள். என்றாலும் அவர்கள் சுரண்டப்படுவது மற்றும் அவர்களது தொழில் பாதுகாப்பின்மையைக் கவனத்திற் கொள்கின்றபோது, ஒரு தேசம் என்றவகையில் அவர்களது வருமானம் குறித்து நாம் மகிழ்ச்சியடைய முடியாது.

பாதுகாப்பான தொழில்களைப் பெற்றுக்கொள்ள உதவுவதன் மூலமும் சமூக தலைமைத்துவ அந்தஸ்துகளை அவர்கள் அடைந்து கொள்வதற்குத் தடையாகவுள்ள சட்ட மற்றும் சமூக தடைகளை அகற்றி ஒரு அபிவிருத்தியடைந்த கல்வி மற்றும் தொழில் திறன்களை அவர்களுக்கு வழங்குவதனூடாக மட்டுமே பெண்களை வலுவூட்ட முடியும்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் முழுமையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், பாராளுமன்றத்திலும் ஏனைய அரசியல் கட்டமைப்புகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு அண்மையில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டங்களினூடாக கைக்கொள்ளப்படுகின்ற உரிமைகள் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்வதற்கான ஒரு விரிந்த சமூக உரையாடல் அவசியமாகும். பெண்கள் தொடர்பான இந்த உரையாடலைத் தொடர்வதற்கு மார்ச் 08 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச பெண்கள் தினம் ஒரு சிறந்த அடித்தளமாகும்.

'வலுவூட்டப்பட்ட பெண்கள் - நிலையான எதிர்காலம' என்ற இவ்வருட கருப் பொருளினூடாக சமூகத்திற்கு வழங்கப்படும் செய்தி நிலையான அபிவிருத்திக்கு பெண்களை வலுவூட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. பால் அநீதியின்றி நாகரிகமும் பண்பாடும் மிக்க ஒரு சமூகம் இந்த உரையாடலை முன்னெடுத்துச் செல்வது திருப் தியளிக்கிறது என அவா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# நாட்டினதும் மக்களதும் நன்மைக்காக உரிய நேரத்தில் சரியான தீர்மானம்

## நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டினதும் நாட்டு மக்களதும் நன்மைக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்களை உரிய நேரத்தில் சரியான முறையில் நிறைவேற்றுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நச்சுத் தன்மையற்ற நாடு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

நச்சுத் தன்மையற்ற நாடு தேசிய நிகழ்ச்சித்திட்டம் அவ்வாறானதொரு திருப்பு முனையாக உள்ளதெனத் தெரிவித்த ஜனாதிபதி நாட்டு மக்களின் ஆரோக்கியம் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் என்பவற்றை மேமபடுத்தல் தனது எதிர் பார்ப்பாக உள்ளதெனத் தெரிவித்தார்.

இதுவரை ஆட்சிசெய்த அனைத்து அரசாங்கங்களும் விவசாயத்தையும் விவசாயிகளையும் கட்டியெழுப்புவதற்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்திய போதும் விவசாயிகளை கடன்சுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கு முடியாது போயுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி விவசாயிகளின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல் மற்றும் சிறந்த விவசாயக் கொள்கையினை அறிமுகப்படுத்துதல் என்பன புதிய அரசின் நோக்கமாக உள்ளதெனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான தலைமைத்துவம் பிரதேச தலைவர்கள் மற்றும் கமநலசேவைகள் திணைக்களம் ஆகியவற்றால் பொறுப்பேற்கப்படல் வேண்டுமெனத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை நேசிக்கின்ற மற்றும் தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற அனைவரும் அரசியல் கருத்துவேற்றுமைகள் இன்றி இத்தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றி கொள்வதற்கு ஒன்றுபடல் வேண்டுமெனத் தெரிவித்தார்.

இலங்கையை நச்சுத்தன்மையற்ற பசுமை நிறைந்த ஒரு நாடாக மாற்றி அனைவருக்கும் நச்சுத்தன்மையற்ற உணவுகளை வழங்குவதற்கான அரசின் கொள்கைக்கு அமைவாக நச்சுத் தன்மை அற்ற நாடு மூன்றாண்டு தேசிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிர் நிலங்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் புதிய வேலைத்திட்டம் இதன் போது ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வண. அத்துரலியே ரத்ன தேரர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் துமிந்த திசாநாயக்க ஆகியோர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள், மாகாண முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாண செயலாளர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள், உள்நாட்டு வெளிநாட்டு அழைக்கப்பட்ட அதிதிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் இந்நிகழ்வில கலந்துகொண்டனர். (செ-12)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும்.

அந்தவகையில் யாழ் பிரதேசத்தில் இணுவில் கந்தசாமி கோவில் பிரதேசம், தூதாவளை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம், தீவீரகம (பெரியஉளுக்குளம்), மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடிய வரை, TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



உங்கள் சொந்தக் கால்களில் நிமிர்ந்து நின்று, உங்களை மனிதன் என்று உணரும்போதுதான் நீங்கள் உபநிடதங்களையும் ஆன்மாவின் மகத்துவத்தையும் நன்றாக அறிந்துகொள்ளமுடியும்.

என்னை வாள்வெட்டாது, ஆயுதங்கள் துளைக்காது, நெருப்பு எரிக்காது, காற்று உலர்த்தாது,நான் எல்லாம் வல்லவன், நான் எல்லாம் அறிந்தவன், நம்மைக் காப்பாற்றக்கூடிய இந்த மங்கலமயமான வார்த் தைகளை மீண்டும் மீண்டும் சொல்லுங்கள். நம்மைப் பலவீனர்களென்று சொல்லாதீர்கள். நாம் எதையும் செய்ய முடியும். நம்மால் எதைத்தான் சாதிக்க முடியாது. எல்லாமே நம்மால் முடியும்.

ஒருவேளை இராமர்கள் பலர் இருக்கலாம். ஆனால் இரண்டாவதாக ஒரு சீதை இருக்கமுடியாது என்றுதான் சொல்லவேண்டும். உண்மையான பெண்மை வார்க்கப்பட வேண்டிய அச்சு அவள்.

எந்தத் தொழில் செய்பவராயினும் எல்லோருக்கும் உபநிடதங்கள் பொதுவானவை. வேதாந்தத்தின் இந்தக் கருத்துக்கள் வெளிவந்தாக வேண்டும். காட்டில் மட்டும் இருந்தால் போதாது. அவை வெளிவந்து நீதி மன்றங்களிலும் வழிபாட்டு மேடைகளிலும் ஏழையின் குடிசையிலும் மீன்பிடிக்கும் மீனவரிடமும் படிக்கின்ற மாணவரிடமும் செயற்பட்டாக வேண்டும்.

ரிஷி என்றால் என்ன? தூயவர், முதலில் தூயவர் ஆகுங்கள். நீங்கள் ஆற்றலைப் பெறுவீர்கள்.

# வலிகாமம் வலய பூப்பந்தாட்டப் போட்டி; பண்டத்தரிப்பு உ/தர பெண்கள் பாடசாலை வெற்றி





வலிகாமம் வலய பாடசாலை களுக்கிடையில் பெண்களுக்கான பூப்பந்தாட்டப் இறுதிப்போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

15 வயதிற்குட்பட்ட போட்டியில் மயிலணி சைவ மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை இரண்டாமிடம் பெற்றது. 19 வயதிற்குட்பட்டவர்களுக்கான போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயத்துடன் பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப்பாடசாலை அணி மோதி பண்டத்தரிப்பு உயர்தர பெண்கள் பாடசாலை வெற்றி பெற்றது. முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்ற பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை அணியினரைப் படத்தில் காணலாம்.

## சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம் கொட்டடி கற்குளம் ஸ்ரார் சனசமூக நிலையத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நிலையத்தினால் ஏற்பாட்டு செய்யப்பட்டுள்ள மாபெரும் துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

60 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இத் துவிச்சக்கரவண்டி ஒட்டப் போட்டிக்கு பங்குபற்றுவோர் 077 019 1062 நிலையத் தலைவர் என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# உடுப்பிட்டி அ.மி.கல்லூரியை வென்றது வீரகத்தி வித்தியாலயம்

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியை வீழ்த்தி இவ்வருட வலயச் சம்பியனாகியது தொண்டைமானாறு வீரகத்தி மகாவித்தியாலயம்.

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன. இதில் 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பல வருடங்களாக வலயச் சம்பியனான உடுப்பிட்டி அ.மி கல்லூரியும் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் மோதின.

இச்சுற்றுப்போட்டியில் மதல் செற்றை பலத்த போராட்டத்தின் பின் 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் தொண்டைமானாறு அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது செற்றை எப்படியாவது வென்று சமனிலைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய உடுப்பிட்டி அணி பலத்த இழுபறிகளுக்கு மத்தியில் 26:24 எனற புள்ளிகள் அடிப்படையில் வென்று சமனிலைப் படுத்தியது.

தொடர்ந்து வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக இடம்பெற்ற மூன்றாவது செற்றில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை அணி 25:22 என்ற புள்ளிகளைப் பெற்று 2:1 என்ற அடிப்படையில் வென்று இவ வருடச் சம்பியனாகியது.





வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயமும் 17 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் வெற்றி பெற்று இவ்வருடச் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த போட்டிகள் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. இதில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி கல்லூரி அணியும் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அணியும் மோதின.

இப்போட்டியில் 2:1 என்ற செற்கணக்கில் தொண்டைமானறு வீரகத்திப்பிள்ளை அணிவெற்றி பெற்று இவ்வருட வலயச் சம்பியனாகியது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணியும் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணியும் மோதின. மூன்று சுற்றுகள் கொண்ட இச்சுற்றுப் போட்டியில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை வல்வை சிதம்பராக் கல்லூரி அணிபெற்றுக் கொண்டது.

# தொலைக்காட்சி பார்ப்பது மிகச்சுலபமானது விமர்சகர்களுக்கு பதிலடி கொடுத்த டோனி

கிரிக்கெட்டை பொறுத்தவரை மைதானத்தில் விளையாடுவதை விட தொலைக்காட்சியில் பார்ப்பது சற்று எளிது என்று இந்திய அணியின் கப்டன் மகேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார்.

இது மாதிரி விளையாடுங்க, அது மாதிரி விளையாடுங்க, இப்படி செய்யுங்க, அப்படி செய்யுங்க என்று சொல்லலாம். ஆனால் மைதானத்தில் விளையாடுவதைவிட கிரிக்கெட்டை தொலைக்காட்சியில் பார்ப்பது கொஞ்சம் எளிது.

யாராவது என்னிடம் கேட்டால், "இந்தியாவிற்காக விளையாடுவது தான் என்னுடைய முதல் விருப்பம். வேறு எந்த நாட்டிற்காகவும் நான் விளையாட மாட்டேன்" என்று கூறுவேன். கடந்த ஆண்டு அவுஸ்திரேலி யாவுடனான ஒரு நாள் டெஸ்ட் தோல்விகளையடுத்து டோனி மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக கப்பட்டமை குறிப்பிடத்தக்க் விடயமாகும்.

# கிளி.சிவபாத கலையக அ.த.க.வெற்றி



கிளிநொச்சி கரைச்சி பாடசாலைக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று திருவையாறு மகாவித்தியாலய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி தேசிய பாடசாலையும் கிளி/சிவபாத கலையக பாடசாலையும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி தேசிய பாடசாலை ஆறு விக்கெட் இழப்பிற்கு 65 ஓட்டங்களை பெற்றது. 66 ஓட்டங்கள் வெற்றி இலக்கென துடுப்பெடுத்தாடிய கிளி/சிவபாத கலையக அ.த.க. பாடசாலை அணியினர் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

கோட்ட மட்ட கிரிக்கெட் போட்டியில் முதல் முறையாக கிளி/ சிவபாத கலையக அ.த.க.பாடசாலை கோட்ட மட்ட சம்பியனாக தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (311)

# ரசிகர்கள் எனக்கு எதிராக இருந்ததால் சிறப்பாக விளையாட முடிந்தது- கோலி

வங்கதேச ரசிகர்கள் என்னை வெறுப்பேற்றியது இறுதிப்போட்டியில் சிறப்பாக செயற்பட உதவியது என்று விராட் கோலி கூறியுள்ளார்.

ஆசியக்கிண்ண இருபது-20 தொடரின் இறுதிப்போட்டியில் வங்கதேசத்தை 8 விக்கெட்டுகளால் வீழ்த்திய இந்தியா 6ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

இதில் ஷிகர் தவான் 60 ஓட்டங்களும், கோலி 41 ஓட்டங்களும் எடுத்தனர். கடைசியில் அணித் தலைவர் டோனி 6 பந்தில் 20 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றி பெறச் செய்தார்.

இந்தப் போட்டியில் வங்கதேச ரசிகர்களின் ஆரவாரம் அரங்கத்தை அதிரச் செய்தது. வங்கதேச வீரர்கள் பவுண்டரி விளாசும் போதும், விக்கெட் எடுக்கும் போதும அவர்களின் ஆரவாரம் அதிகமாகிக் கொண்டே போனது.


அதேசமயம் இந்திய அணி வீரர்கள் அதை செய்யும் போது அவர்கள் இறுக்கமான முகத்துடனே காணப்பட்டனர். அந்த அரங்கமே அமைதியாக இருந்தது.

திறமைக்கு மரியாதை கொடுக்காமல் அனைத்து விதத்திலும் வங்கதேச ரசிகர்கள் நடந்து கொண்டது உலக கிரிக்கெட் ரசிகர்களை முகம் சுளிக்க வைத்தது.

போட்டி முடிந்த பிறகு கோலி கூறுகையில், "வங்கதேச ரசிகர்கள் வெறுப்பேற்றியதே என்னை சிறப்பாக விளையாடத் தூண்டியது.

எனவே நான் சிறப்பாக விளையாடினேன். வங்கதேச ரசிகர்கள் எனக்கு எதிராக இருந்த போது அது என்னை அதிகமாக ஊக்கப்படுத்தியது" என்று கூறியுள்ளார்.

மேலும், அவர் கூறுகையில், "ரோஹித் சர்மா விரைவில் ஆட்டமிழந்த போது சற்று கடினமான சூழ்நிலை உருவானது. ஆனால்



அதன் பிறகு ஷிகர் தவான் சிறப்பாக செயற்பட்டார்.

நாங்கள் 94 ஓட்டங்கள் சேர்த்தது ஆட்டத்தின் போக்கை மாற்றியது. நான் சிக்சர் அடிக்க முயற்சி செய்யவில்லை, பவுண்டரி மூலம் ஓட்டங்கள் சேர்க்கவே முயற்சி செய்தேன்" என்று கூறியுள்ளார்.

## அதிவேகமாக பய...

அதிவேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வேலித் தூணுடன் (கம்பிக்கட்டை) மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் யாழ். தெல்லிப்பழை யூனியன் சந்திப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் சாவற்காடு ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த புவனேஸ்வரன் புவிந்தன் (வயது 21)மற்றும் அதே இடத்தினைச் சேர்ந்த அரியரட்ணம் அபிராஜ் (வயது 19) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

குறித்த இரு இளைஞர்களும் நேற்று திங்கட்கிழமை சிவராத்திரி பூசைக்காக யாழ். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு சென்றுவிட்டு, வீடு திரும்பும் வழியிலேயே விபத்திற்குள்ளாகியுள்ளனர்.

அதிவேகத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இருவரும், யாழ். தெல்லிப்பழை யூனியன் சந்திக்கு அருகாமையில் பயணிக்கையில், மஞ்சட் கோட்டு கடவைக்கு அண்மையாக வேலிக்கு நாட்டப்பட்டிருந்த தூணுடன் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதுண்டதில் தூக்கி வீசப்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்தில் இவர்கள் பயணித்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் முற்றிலும் உருக்குலைந்துள்ளது.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4-17-30)

## "இன்னும் சில...

இன்றையதினம் 15ஆவது நாளாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

14 கைதிகளினதும் உடல்நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தபோது இவர்கள் இதுவரை மருத்துவ உதவியை பெற்றுவந்தனர். கடந்த 2 நாட்களாக மருத்துவ உதவியை பெறமாட்டோம் என சிறைச்சாலைஆணையாளரிடம் கடிதம் ஒன்றினையும் கையளித்திருந்தனர்.

நேற்று முன்தினம் அகஸ்ரீர் ஞானசீலன், பாலசுந்தரம் மனோகரன், மார்க்கண்டு நேவிநாதன் ஆகிய 3 கைதிகளும் மயக்கமடைந்த நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதேவேளை நேற்றையதினம் சிவசுப்பிரமணியம் தில்லைராஜா என்பவர் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துசெல்லப்பட்டார்.

இவர்கள் மருத்துவ உதவியை பெறமாட்டோம் என தெரிவித்தபோதும் அவர்களுக்கு சிறைச்சாலையில் மருத்துவ உதவி வழங்கப்பட்டு சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகள் அவைரும் மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. இன்னும் சில நாட்களே எம்மால் உயிர் வாழமுடியும் என உருக்கமாக தமது உறவுகளிடம் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

பிணையில் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யுமாறு கோரியே தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளதாகவும் தமக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லையெனில் சிறைக்குள்ளேயே தமது உயிரைமாய்க்கவுள்ளதாகவும் கைதிகள் விரக்தியுடன் தெரிவித்துள்ளனர். (செ-9)

## நல்லாட்சி அர...

தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம், நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் தாம் இந்த அரசாங்கத்தை எதிர்ப்பதோடு, நல்லாட்சி எனக் கூறப்படும் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும்.

அன்று பிரசன்ன ரணதுங்க கூறினார் இந்த அரசாங்கத்தை 2 வருடங்களில் கவிழ்க்க வேண்டுமென்று அந்த நிலைப்பாட்டில் தான் தானும் உள்ளேன்.

இப்போது எதற்காக இந்த புதிய அரசியலமைப்பு? இது தேவைதானா? தற்போது ஆட்சியில் இருக்கும் இந்த அரசாங்கம், தமிழ் அரசியல்வாதிகளின் தேவைகளையே பூர்த்தி செய்ய முயற்சிக்கிறது.

அத்துடன், பாராளுமன்றில் இருக்கின்ற 225 உறுப்பினர்களுடைய விருப்பங்களையும், புதிய அரசியலமைப்பிற்காக பலவந்தமாக பெற்றுக்கொள்வதில் இறங்கியுள்ளது. எனினும் கூட்டு எதிர்க்கட்சி இதற்கு ஒரு போதும் ஆதரவளிக்க கூடாது.

அத்துடன், வடக்கில் புதிய ஆளுநரை நியமித்து இருப்பதற்கான காரணம், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே ஆகும்.

இந்தநிலையில், நல்லாட்சி எனப்படும் இந்த அரசாங்கம் பாதாள உலக கோஷ்டியினருக்கு ஆதரவு வழங்குகின்றமை தமக்கு தெரியும் எனவும் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார். (செ-11)

## மகளிர் தின...

வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைப் பெற்ற நாடு என்றபோதிலும், இந்த நாட்டின் பெண்களும் பெண் பிள்ளைகளும் இன்னும் அவர்களது பாதுகாப்புக் குறித்த பல பிரசசினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இலங்கையில் பெண்கள் புலம்பெயர் தொழிலாளர்களாகவும் ஆடைத்தொழிற்துறை ஊழியர்களாகவும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களாகவும் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய மூலமாக உள்ளார்கள். என்றாலும் அவர்கள் சுரண்டப்படுவது மற்றும் அவர்களது தொழில் பாதுகாப்பின்மையைக கவனத்திற் கொள்கின்றபோது, ஒரு தேசம் என்றவகையில் அவர்களது வருமானம் குறித்து நாம் மகிழ்ச்சியடைய முடியாது.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் முழுமையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், பாராளுமன்றத்திலும் ஏனைய அரசியல கட்டமைப்புகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு அண்மையில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டங்களினூடாக கைக்கொள்ளப்படுகின்ற உரிமைகள் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்வதற்கான ஒரு விரிந்த சமூக உரையாடல் அவசியமாகும். பெண்கள் தொடர்பான இந்த உரையாடலைத் தொடர்வதற்கு மார்ச் 08 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச பெண்கள் தினம் ஒரு சிறந்த அடித்தளமாகும்.

'வலுவூட்டப்பட்ட பெண்கள் - நிலையான எதிர்காலம்' என்ற இவ்வருட கருப்பொருளினூடாக சமூகத்திற்கு வழங்கப்படும் செய்தி நிலையான அபிவிருத்திக்கு பெண்களை வலுவூட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. பால் அநீதியின்றி நாகரீகமும் பண்பாடும் மிக்க ஒரு சமூகம் இந்த உரையாடலை முன்னெடுத்துச் செல்வது திருப்தியளிக்கிறது என ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (செ-11)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு மரணம்தான் விடுதலையா?

## வவுனியாவில் இன்று போராட்டம்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் இன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு மற்றும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் குடும்பங்களின் வவுனியா சங்கத்தினரும் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தொடர் இழப்புகள், வலிகள், ஏமாற்றங்களுக்கு பின்னரும் கூட, தமது உணர்வுகள் மீண்டும் சுயமாகவே சிறைச்சாலைகளுக்குள் சாகும் வரையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்களின் சிறுநீருடன் குருதியும் கலந்து வெளியேறிக்கொண்டிருக்கின்றது. உயிருக்கு ஆபத்தான நிலைமையில் அவர்களின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலை சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளின் சப்த நாடிநாளங்களை ஒடுங்கச்செய்கின்றது.

எமது உறவுகளான அவர்களில் யாராவது ஒருவரையேனும் இழக்க நேருமாயின், அது தமிழ் சமூகத்துக்கு பெருத்த அவமானமாகவும், தமிழ் சமூகத்தின் வாக்களிப்பில் நிகழ்ந்த மாபெரும் குறைபாடாகவும், தமிழ் அரசியல் தலைமைகளின் மற்றுமொரு நம்பிக்கைத்துரோகமாகவும் அமையும்.

எனவே தமிழ் மக்களின் உன்னத உணர்வான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி 08-ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாகிய இன்று வவுனியா பொங்குதமிழ் நினைவுத்தூபி முற்றத்தில் காலை 8.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ள அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்தில் அனைவரையும் உணர்வுபூர்வமாக கலந்துகொள்ளுமாறு ஒருமித்து அழைப்பு விடுவதாக அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# ஆனையிறவு முகாம் தாக்குதல் 10-ம் திகதி வழக்கின் தீர்ப்பு

விடுதலைப்புலிகள் ஆனையிறவு இராணுவ முகாம் மீது ஓயாத அலைகள் என்ற பெயரில் நடத்திய தாக்குதல் சம்பவம் தொடர்பில், விடுதலைப்புலிகள் புலனாய்வு பிரிவு சந்தேகநபருக்கு எதிரான வழக்கில் நாளை மறுதினம வியாழனன்று தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த 2000ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் மூலம், ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கிய குற்றச்சாட்டில் விடுதலைப்புலிகள் புலனாய்வு பிரிவின் உறுப்பினர் என சந்தேகிக்கப்பட்ட எதிரிக்கு எதிராக யாழ் மேல் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கில் விசாரணைகள் யாவும் முடிவடைந்து சட்டத்தரணிகளின் தொகுப்புரையும் முடிவுற்ற நிலையில், யாழ் மேல் நீதிமன்றத்தினால் தீர்ப்புக்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வழக்கில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. (செ-12)

# பயங்கரவாத தடைச்சட்ட திருத்தம்

## நீதியமைச்சர் விஜயதாஸவிடம் கையளிப்பு

மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தும யோசனை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த யோசனையை வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடமும் சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த திருத்தம் பொலிஸ் விசாரணைகளுக்கு பாதகமாக அமையாது என்றும அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பயங்கரவாத தடைச்சட்டம் இலங்கையின் அரசியலமைப்புக்கு எதிரானது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# லண்டன் பிபிசி தமிழோசை ஒலிபரப்பு நேரம் குறைக்கப்படும்!

## அதனை டெல்லிக்கு மாற்றவும் நடவடிக்கை

(லண்டன்)

லண்டன் பிபிசி தமிழோசையின் ஒலிபரப்பு நேரம் குறைக்கப்படுவதுடன் அதனை டெல்லிக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிபிசி உலக சேவையின் தமிழ் மொழிப் பிரிவு சேவையாகிய தமிழோசையின் ஒலிபரப்பு நேரத்தைக் குறைப்பதற்கு பிபிசி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

நாள்தோறும் இலங்கை இந்திய நேரப்படி, இரவு 9.15 மணியில் இருந்து 9.45 வரையில் லண்டன் பிபிசி தமிழோசை ஒலிபரப்பாகி வருகின்றது. இந்த அரைமணி நேரத்தை 15 நிமிடங்களாகக் குறைத்து ஒலிபரப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால், லண்டன் பிபிசி தமிழோசையில் ஒலிபரப்பு செய்யப்பட்டு வந்த விரிவான செய்திகள், ஆய்வுகள், நேர்காணல்கள், பெட்டகங்கள் போன்றவைகள் அரைவாசியாகக் குறைக்கப்படக் கூடியநிலைமை உருவாகியிருக்கின்றது.

செய்திகளுடன் மிகவும் நேரம் குறைந்த வகையிலேயே ஏனைய நிகழ்ச்சிகள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நேரக் குறைப்பு குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும், இந்தமாதம இறுதி வாரத்தில் இருந்து 15 நிமிடநேர ஒலிபரப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

அதேவேளை, லண்டனில் உள்ள பிபிசியின் தலைமை அலுவலகத்தில் இருந்து இதுகாலவரையிலும் ஒலிபரப்பு செய்யப்பட்டு வந்த தமிழோசை மே மாதம் தொடக்கம் டெல்லியில் உள்ள அதன் பிராந்தியஅலுவலகத் தொகுதிக்கு மாற்றம் செய்யப்படவுள்ளது என்ற தகவலும் வெளியாகியிருக்கின்றது.

பிபிசியின் டெல்லி பிராந்திய அலுவலகத்தின் நேரடி நிர்வாகப் பொறுப்பில் வரவுள்ள தமிழோசையின் ஒலிபரப்பு, லண்டனில் இதுவரைகாலமும் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்தது போன்று இனிமேல் செயற்பட முடியாதிருக்கும் என்றும் தகவல் அறிந்த வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

டெல்லிபிராந்திய அலுவலகத்திற்கு பிபிசி தமிழோசை இடம் மாற்றம் செய்யப்படுவதையடுத்து, அங்கு பணியாற்றுவதற்குரிய நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் போன்றோருக்கு தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. இதற்கான அறிவித்தல் பிபிசி தமிழோசையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு படைகளின் தலைமை யகத்தின் கீழ் உள்ள படையினருக்கு சிறப்பு காலாற்படை மற்றும் பற்றாலியன் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு மற்றும் முத்தையன்கட்டுப் பகுதிகளில் உள்ள பற்றாலியன் பயிற்சிப் பாடசாலைகளில் இந்த சிறப்புப் போர்ப்பயிற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு படைகளின் தலைமையகத்தின் கீழ் உள்ள டிவிசன்கள், பிரிகேட்கள், முன்னரங்க பாதுகாப்பு பிரதேசம் மற்றும் பற்றாலியன்களில் பணியாற்றும் படையினருக்கே இந்த சிறப்பு போர்ப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

68ஆவது டிவிசன் படையணியின் கீழ் உள்ள 7ஆவது கெமுனுவோச் படைப்பிரிவுக்கான பயிற்சி புதுக்குடியிருப்பு பற்றாலியன் பயிற்சிப்பாடசாலையில் இடம்பெறுகிறது. இங்கு 9 அதிகாரிகள் மற்றும் 352 படையினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சிகள் அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அதுபோல, 64ஆவது டிவிசனின் கீழ் உள்ள 14ஆவது சிங்க ரெஜிமென்டுக்கு, முத்தையன்கட்டு பற்றாலியன் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு 11 அதிகாரிகள் மற்றும் 222 படையினருக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

போரற்ற சூழ்நிலையிலும் படையினரை தயார் நிலையில் வைத்திருக்க இராணுவம் அவர்களுக்கான முழு அளவிலான பயிற்சிகளை மீள ஆரம்பித்துள்ளது. (செ-11)

## இராணுவ...

அப்பகுதி மக்கள், தேவாலய நிர்வாகத்தினர், மற்றும் அரசியல்வாதிகள் அனைவரினையும் ஒன்றிணையுமாறு வலி.வடக்கு மீள் குடியேற்ற தலைவர் எஸ்.சஜீவன் கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த ஆட்சியில் யாழ் மாவட்டம் மட்டுமல்லாது வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும்,

இராணுவத்தினரின் தேவைகளுக்காக காணிகளைச் சுவீகரிக்கும் வகையில் நில அளவை மேற்கொள்ளப்பட இருந்த நிலையில் பொது மக்களினதும் அரசியல்வாதிகளினதும் எதிர்ப்புக்களையடுத்து அத்தகைய நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்த நிலையில் தற்போது மீளவும் அத்தகைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பாதுகாப்புத் தேவைகளுக்காக பொது மக்களினது காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந் நிலையில் குறித்த இடங்களில் நில அளவைத திணைக்களத்தினர் அளவீடு செய்வதற்குச் சென்றபோது அங்கு திரண்ட பொதுமக்களினாலும் அரசியல்வாதிகளினாலும் அந் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் நல்லாட்சியில் பொதுமக்களின் சொத்துக்களை ஆக்கிரமிக்க மாட்டோம், பொதுமக்களிற்கு பாதுகாப்பை வழங்குவோம் எனக் கூறிக்கொண்டிருக்கின்ற நிலையிலும் அதே நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

இதற்கமைய வலி வடக்கின் சேந்தான்குளம் பகுதியில் தேவாலயத்திற்குச் சொந்தமான 4 பரப் புக் காணியை கடற்படையினரின் தேவைகளுக்காக சுவீகரிக்கும் வகையில் இன்றைய தினம் நில அளவைத் திணைக்களத்தினரால் நில அளவீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று வலி தெற்கின் திருவடி நிலைப் பகுதியிலும் நாளை மறுதினம் 10 ஆம் திகதி 11 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரிக்கும் வகையில் நில அளவைத் திணைக்களத்தினரால் காணிகள் அளவீடு செய்யப்பட இருக்கின்றன. இது தொடர்பாக நில அளவைத் திணைக்களத்தினரால் அரச அதிபர் உள்ளிட்ட தரப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதே வேளையில் வலிகாமம் வடக்கு உட்பட மாவட்டத்தில் பல இடங்களிலும் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின்போது பாதுகாப்புத் தேவைகளுக்காக காணிகளை நில அளவை செய்யும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டுமென தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்த போதும் தற்போது அதனையும் மீறி நில அளவை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு பொதுமக்களும் அரசியல்வாதிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்ற நிலையில், குறித்த பகுதிகளில் நில அளவை செய்யும் இடங்களில் திரண்டு கடந்த காலங்களில் தடுத்து நிறுத்தியது போன்று மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற நில அளவை செய்யும் பணிகளையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் பல்வேறு தரப்பினர்களும் மக்கள் தரப்பில் இருந்தும் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-4)

## வாக்குமூலம்...

பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டது தொடர்பாக சாட்சியமளிக்க வருமாறு குற்றப்புலனாய்வுத்துறையினர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடன், அரசாங்க செலவில், அவர் முன்னதாக இலங்கை வந்திருந்ததார், குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இந்த அழைப்பை அவருக்கு விடுத்திருந்தனர்.

அதற்கு ஜெனரல் ஜெய சூரிய, நான் விடுமுறையில் தான் இலங்கை வந்துள்ளேன். எனது விடுமுறை நாட்களில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் செலவிட்டு நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

எனது வாக்குமூலம் தேவையென்றால், அரச செலவில விமானச்சீட்டு ஒன்றை அனுப்பி வையுங்கள். வழக்கத்தில் நான் முதல் வகுப்பில் அல்லது வணிக வகுப்பிலேயே பயணம் செய்வேன்.

அத்துடன் குற்றப் புலனாய்வப் பிரிவு தலைமை யகம் அருகேயுள்ள விடுதி ஒன்றிலும் அறை ஒன்றை முன்பதிவு செய்யுங்கள் என்று பதிலளித்துள்ளார்.

ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இராணுவத் தளபதியாக இருந்த காலகட்ட த்திலேயே பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு உயரதிகாரிகள் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## விட்டுப்போகாத...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்று விழித்தது நிகழ்வில் பங்கேற்றவர்கள் மத்தியில் வியப்பை ஏற்படுத்தியது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த அனைத்துலக மாநாட்டு மண்டபத்தில், நேற்று காலை தேசிய கண்காட்சி நிகழ்வு ஒன்று ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையாற்றிய விவசாய அமைச்சின் செயலர் பி.விஜேரத்ன, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களே... என்று விளித்து உரையாற்றினார்.

அவ்வாறு கூறியதையடுத்து, பின்புறம் இருந்த அதிகாரிகள் தவறைச் சுட்டிக்காட்டியதையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களே... என்று கூறி தனது தவறைத் திருத்திக் கொண்டார். (செ-12)

## வழமைபோல் இன்று...

இந்துக்களின் சைவ விரதங்களில் பிரதானமான ஒன்றாக மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதற்கென கடந்த வருடம் சிவராத்திரி விரதத்துக்கு அடுத்தநாள் வடமாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டு பிறிதொரு நாளில் பதில் பாடசாலை நடைபெற்றது.

ஆனால் இந்த வருடம் வலய மட்டத்தில் இருந்து விடுமுறைக்கான கோரிக்கையை யாரும் விடுக்காத பட்சத்தில் இன்றைய தினம பாடசாலைகள் அனைத்தும் வழமைபோல் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(செ-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## அரசியலமைப்பு...

புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்கள் கருத்தறியும் குழுவின் ஆயுள்காலம், இந்த மாதம் 31 ஆம் நாளுடன் முடிவடையவுள்ளது.

இதுவரை 3000 இற்கும் மேற்பட்ட கருத்துக்கள் மற்றும் யோசனைகள் பெறப்பட்டுள்ளன.

அரசியலமைப்பு தொடர்பாக, சிறப்பு கலந்துரையாடல்களை முன்னெடுக்க தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனை எமது குழு நாளை நாடாளுமன்றத்தில் சந்திக்கவுள்ளது.

இந்த சந்திப்பின் போது எமது குழுவுக்கு தற்போது வரை கிடைத்துள்ள யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பிலும் பேசபடும்.

வரும் வாரங்களில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோருடனும் இது தொடர்பாக சிறப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளோம்.

எமது குழுவினர் 25 மாவட்டங்களில் உள்ள மக்களிடமிருந்தும் புதிய அரசியலமைப்பு தொடர்பான கருத்துகளை பதிவு செய்துள்ளனர்.

ஏப்ரல் மாதமளவில் இது தொடர்பிலான அறிக்கையை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## மகளிர் தினத்தில்...

அவர் தனது வாழ்த்து செய்தியில் மேலும் கூறுகையில்,

ஒரு சமூகம் அதன் பெண்களுக்கு வழங்கும் அங்கீகாரம் அச்சமூகத்தின் அபிவிருத்தித் தரத்தின் அளவுகோலாகக் கருதப்படுகின்றது.

தொட்டிலை ஆட்டும் கரங்கள் உலகை ஆளும் என்ற பழமொழி இலங்கை சமூகம் அதன் வரலாறு நெடுகிலும் பெண்களின் கௌரவமான சமூக அந்தஸ்தைப் புரிந்து வைத்திருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.

என்றாலும் இன்றைய நிலைமையை நாம் எடுத்து நோக்கினால் கடுமையான பொருளாதார மற்றும் சமூக மாற்றத்தின் பல்வேறு யுகங்கள் கடந்துள்ள நிலையில்,

பெண்களின் வகிபாகம் குறித்து பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். உலகில் முதலாவது பெண் பிரதமர் மற்றும் நிறை

23ஆம் பக்கம் பார்க்க

காணி குத்தகைக்கு

யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியில் புத்தூரில் உள்ள இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்கு சொந்தமான 1 1/2 பரப்பு காணி குத்தகைக்கு உண்டு. வங்கிகள், தனியார் கம்பனிகள் போன்றவற்றிற்கு 25 வருட குத்தகை அடிப்படையில் கொடுக்கப்படும்.

(3810)

விபரங்களுக்கு : 0777755175

மணிவிழா வாழ்த்து

“ கல்விக் கதிரவன் ”
“ ஈகைக் காவலன் ”
“ இறைபணி வேந்தர் ”

E.S.P. நாகரத்தினம்

தேவகுணம் படைத்த சிறந்த நல்ல மனிதன்
ஆவல் மீதூர அன்பு அகத்தூர பொன்மனச் செம்மல் விழாவின்
தேவை மிக உணர்ந்து செய்யும் பாராட்டு
சேவைக்கு அளிக்கும் திருப்தி விழாவாகும்



(C-3924)

வாழ்த்துவோர்:
விக்னேஸ்வரன் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

BCHS
British College of Higher Studies
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

(சி-3923)

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.